
# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 9: இதழ் 9 ஒகஸ்ற் 1957 விலை சதம் : 15



## அட்டைப் படம்



ஈழநன்னாடு சிங்கள, தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டுவந்த காலத்தில் பாத கண்டத்தின் புராதன நகரங்களின் ஆவண வீதிகளில் ஈழத்தரிசி குவிக்கப்பட்டிருந்ததாம். பத்துப்பாட்டில், பட்டினப் பாலையில் காவிரிப்பூம் பட்டினத்தில் "ஈழத்துணவு" விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததாக ஒரு குறிப்பு காணப்படுகின்றது. இதிலிருந்து முற்காலத்தில் வயலெல்லாம் செந்நெல் விளைந்து நாடு செழிப்புற்று விளங்கியது என அறியமுடிகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஈழநாட்டின் விவசாயம் அந்நியர் ஆதிக்கத்தால் சீர்குலைந்தது. ஆங்கிலேயர் தேயிலையிலும், ரப்பரிலும், தென்னையிலும் தம் கவனத்தைச் செலுத்தியதால் நெல் வேளாண்மை கவனிப்பாரற்றுக் கிடந்தது. நம்நாடு சுதந்திரம் பெற்றதும் நெல்வேளாண்மைக்கு அரசினர் முதலிடம் அளித்து வருகிறார்கள். கூடிய சீக்கிரம் கல்லோயாவிலும், மினிப்பேயிலும் இப்படத்தில் காணும் அழகிய காட்சியைச் சர்வசாதாரணமாகக் காணச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரதான பாற்பண்ணைத் திறப்புவிழா | 3 |
| 2. | கொழும்பிலுள்ள பிரதான பாற்பண்ணை | 5 |
| 3. | பால் | 6 |
| 4. | சிவபாதசுந்தரம், பி. ஏ., | 8 |
| 5. | தமிழரசுக்கட்சிக்கும் பிரதமருக்குமிடையில் | 9 |
| 6. | சுகாதாரமும் கிராம முன்னேற்றமும் | 14 |
| 7. | பார்சல் விநியோகத்தில் தாமதம் | 15 |
| 8. | வட இலங்கையில் ஒருவாரம் | 16 |
| 9. | உசன் | 20 |
| 10. | பல்கலைக்கழகங்கள் | 23 |
| 11. | சர்வகட்சி மகாநாடு அர்த்தமற்றது | 25 |
| 12. | நாடகப் பரிசளிப்பு விழா | 26 |
| 13. | வீரந்தரும் ஞானவளம் | 28 |


1——J. N. B 68268—5,508 (9/57)



நாரம்பிட்டிப் பாற்பண்ணையைத் திறந்துவைத்து மகாதேசாதிபதி சொற்பொழிவாற்றுகிறார்.

# பிரதான பாற்பண்ணைத் திறப்பு விழா

## நாரம்பிட்டியில் மகா தேசாதிபதி திறந்துவைத்தார்

கொழும்பிலே, நாரம்பிட்டியில் பாற் சபையைச் சேர்ந்த பிரதான பாற்பண்ணையை 1957 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ந் திகதியன்று இலங்கை மகா தேசாதிபதி சர். ஒலிவர் குணதிலக்கா அவர்கள் சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார்கள்.

பாற்பண்ணைத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட மகா தேசாதிபதி அவர்கள் அது தோன்றிய வரலாற்றைப் பற்றி தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

"பாற்சபை மசோதா 1954 ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது, இம்மசோதா இந்நாட்டு விவசாயத் துறையில் மிகவும் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதி இரு சபைகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டன".

"கடந்த மூன்று வருடங்களுக்குள் பாற்சபையானது தீவு முழுவதும் பரவிய ஒரு தாபனமாக மாறியுள்ளது. 1955 ம் ஆண்டில் நாத்தாண்டியில் பாற்சபைப்பண்ணை தாபிக்கப்பட்டது. 1956 ல் கம்பளையில் ஒரு பண்ணை திறக்கப்பட்டது. கடந்த சில மாதங்களுக்குமுன் விவசாய அமைச்சர் வெலிகந்தையில் ஒரு பாற் பண்ணையையும், தமன்கடுவையில் பால் சேகரிக்கும் ஒரு திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார்" என்றும் மகாதேசாதிபதி கூறினர்.

தமன்கடுவை மாவட்டத்தில் பாற்சபை எடுத்துக் கொண்ட நடவடிக்கை வரட்சி வலயத்தின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியுள்ளது. இப்பிரதேசம் பாற் பண்ணையைப் பொறுத்தவரையில் சரித்திர காலந்தொட்டு பிரசித்தி பெற்று விளங்குகின்றது. தமன் கடுவையில் விஞ்ஞான அடிப்படையில் கால் நடைகளை வளர்ப்பதன் மூலமாக கூடிய சீக்கிரம் மீண்டும் பழைய நிலையை யடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பொல்காவலை, கொட்டகலை, காலி என்னுமிடங்களில் மேலும் பல கிராமப் பாற்பண்ணைகளைத் திறக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. இந்த ஆறு பாற்பண்ணைகளும், கொழும்புப் பிரதான பாற்பண்ணையுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும். கொழும்பில் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இப்பாற் பண்ணையைத் திறந்து வைத்தது இலங்கைக்கு மாத்திரமல்ல தென்கிழக்காசியாவுக்கே முக்கிய சம்பவமாகக் கொள்ளப்படுமென மகாதேசாதிபதி கூறினர்.

"இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 15 மாதங்கள்தான் ஆகின்றன. என்றாலும் இந்தக் குறுகிய காலத்துக்குள் இங்கு நாம் காணும் யந்திர சாதனங்களை வாங்கிப் பொருத்த முடிந்தது. இந்தக் கட்டடமும் இதே கால எல்லைக்குள்தான் கட்டி முடிக்கப்பட்டது. தொழிலாளருக்கு வசிப்பிடங்களும் பொழுது போக்கு வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டுள்ளன. தொழிலாளருக்கென்று கட்டப் பட்டுள்ள போசனசாலை இலங்கையிலேயே மிகச் சிறந்ததும்

பெரியதுமாகும். இவ்வளவு வசதிகளையும் செய்து தந்ததற்காக நியூஸிலாந்து அரசாங்கத்துக்கு நன்றி செலுத்த நாம் கடமைப் பட்டுள்ளோம். இந்தப் பண்ணையை ஏற்படுத்துவதற்கான முழு செலவையும் நியூஸிலாந்து அரசாங்கம் கொழும்புத் திட்ட தொழில் நுட்ப கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் இந்த நாட்டுக்கு கொடுத்துதவி யுள்ளது. இந்தச் செலவுத் தொகை 20 லட்சம் ரூபாவுக்கும் மேற் பட்டதாகும். பால்பண்ணை என்ஜினியர் ஒருவரையும் ஒரு ஆலோசகரையும் நியூஸிலாந்து நமக்கு தந்துதவியுள்ளது''.

இவ்வாறு சர் ஒலிவர் மேலும் பேசுகையில் கூறினர்.

திரு. பண்டாரநாயக்கா அவர்கள் தமது பிரசங்கத்தில் கூறியதாவது :—

இது முந்திய அரசாங்கத்தின் கீழ் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஆரம்பித்த ஒரு திட்டமாகும். அது இன்று நிறைவேறிவிட்டது. திரு. ஜயவர்த்தன முன்பிருந்ததைவிட இப்பொழுது மெலிந்திருக் கிறர். பால் சபையின் பாலருந்தி அவர் மீண்டும் பருமனடைவா ரென்று நான் நம்புகிறேன். மத்திய பால்பண்ணையை அமைப்பதற் காக 2,177,000 ரூபா நன்கொடையளித்த நியூஸிலாந்து அரசாங்கத் துக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் இந் நாட்டு மக்களெல்லோருக்கும் மலிவான விலையில் பரிசுத்தமான பால் விநியோகிக்க முடியுமென்று நான் நம்புகிறேன்.

### பரிசுத்தமான பால்

விவ்சாய, உணவு மந்திரி திரு. பிலிப்குணவர்த்தன அவர்கள் பேசுகையில் கூறியதாவது :—

கொழும்பு மத்திய பால் பண்ணை பரிசுத்தமான பால் உற்பத்திக்கு ஊக்கமளிக்கு மென்பது திண்ணம். கொழும்பிலுள்ள பால் பாவிப் பாளர்கள் தினமும் 61,000 பைந்து பால் சாப்பிடுகிறர்கள். ஆனல் கொழும்பிலுள்ள ப்பால் பண்ணைகளிலிருந்து 37,000 பைந்து பால் மட்டுமே கிடைக்கிறது. கொழும்பிலுள்ள தொழிலாளர்கள் பால் அருந்துவதற்கு வசதியாகப் பால் விலையை குறைக்க சபை முயல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இலங்கைக் கால்நடைவளர்ப்பாளர் சங்கத் தலைவர் திரு. ஆர். எச். டீ மெல் பேசியபின் நியூஸிலாந்து வர்த்தக கமிஷனர் திரு. ஜே. பி. மக்கைர் பால் திட்டத்தை நிறைவேற்றியதற்காக இலங்கைக்கு தமது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

பால் பண்ணைத் திறப்பு விழாவுக்குப்பின் கவர்னர்-ஜெனரல், பிரத மர், மந்திரிகள், பாராளுமன்றப் பிரதிநிதிகள், இராச தந்திரிகள், அரசாங்க அதிகாரிகள், வர்த்தகப் பிரதிநிதிகள், அவர்களுடைய மனைவிமார் ஆகியோர் உட்பட அநேக விருந்தாளிகளுக்குச் சொக் கலேட் கலந்த பாலும் மற்றும் ஐஸ் பால் தயாரிப்புகளும் பரிமாறப் பட்டன.


பால் சபையின் தலைவர் திரு. ஆண்ட்ரூ ஜோசப், கவர்னர் ஜெனர லையும் பிரதமரையும் தொழிற்சாலையைச் சுற்றி அழைத்துச் சென்று காண்பித்தார்.

### நியூஸிலாந்து பண உதவி செய்கிறது

கொழும்பு பாற்பண்ணைத் திட்டம் முழுவதற்கும் கொழும்புத் திட்ட தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் நியூஸிலாந்து அரசாங்கம் பண உதவியளித்து வருகின்றது. 1955ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நியூஸிலாந்திலிருந்து இரு உத்தியோகத்தர்கள்—திருவாளர்கள் எல். வி. காசில், டி. சி. கொக்கர்—இலங்கை வந்து விவசாய மந்திரி காரியாலத்தாருடன் பேச்சு வார்த்தைகள் நடத் திச் சென்றனர். அதன்பின்னர் கொழும்பின் பிரதான பாற்பண்ணைத் திட்டத்துக்குப் பணவுதவியளிக்க நியூஸிலாந்து அரசாங்கம் முடிவு செய்து 1956ம் ஆண்டு மார்ச் மாதம் 54,000 பவுண் பணவுதவி செய்தது.

(31ம் பக்கம் பார்க்க)

பிரதமர் திரு. எஸ். டபிளியூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும், மகாதேசாதிபதியும் பாற்பண்ணை இயந்திர அறையைப் பார்வையிடுகின்றனர்



# கொழும்பிலுள்ள பிரதான பாற்பண்ணை

திரு. ஏ. ஜே. ஜோசப் கொழும்பு பாற் சபைத் தலைவர்.

குடிசன மதிப்புப் புள்ளிவிபரப் பகுதியால் 1955ல் நடாத்தப்பட்ட ஆராய்ச்சியின் பின் கொழும்பு நகரில் நாளொன்றுக்கு 61,888 பைந்து பசுப்பால் உபயோகிக்கப்படுகிறதென மதிப்பிடப்பட்டது.

ஆனல் கொழும்பு நகருக்குக் கிடைக்கக் கூடிய பசுப்பால் 37,000 பைந்துகளுக்கு மேலில்லை எனப் பம்பாய் நகரப் பால் அதிகாரி திரு. டி. என். குரூேடி அவர்கள் அதே வருடத்தில் மதிப்பிட்டார். எனவே நகரில் தற்போது கிடைக்கக்கூடியதாகவிருக்கும் பாலில் எவ்வளவு தண்ணீர் அல்லது வேறு பொருட்கள் கலக்கப்படுகின்றனவென்பதை இவ்விரு கணக்குகளுக்குமிடையிலுள்ள வித்தியாசம் ஓரளவுக்கு எடுத்துக் காட்டுகின்றது. செய்கைப் பால் உபயோகம் இந்த வித்தியாசத்திற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

நாளொன்றுக்கு ஏறக்குறைய 90,000 பைந்து இறக்குமதி செய்யப்பட்ட பால் கொழும்பில் உபயோகிக்கப்படுகிறதென்றும் திரு. குரூேடி மதிப்பிட்டார். கிடைக்கக் கூடியதாக வுள்ள சிறிதளவு பசும்பாலின் தரம் மிகவும் மோசமாக இருப்பதாலும் பசுப்பாலுக் கேற்பட்டுள்ள தட்டுப்பாட்டினல் அல்லது அதன் உயர்ந்த விலையினல் பொதுவாக இவ்வளவு இறக்குமதி செய்யப்பட்ட பால் உபயோகிக்கப்படுகிறதென்ற உண்மை நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இதர பகுதிகளிலுள்ள மக்கள் உபயோகிக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பால் உணவுப் பொருட்களோடு கொழும்பு நகரிலுள்ள மக்கள் உபயோகிக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பால் உணவுப் பொருட்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கொழும்பில் இறக்குமதி செய்யப்பட்ட பால் உணவுப் பொருட்கள் அபரிமிதமாக உபயோகிக்கப்படுகின்றன என்பது 1955ம் ஆண்டின் புள்ளி விபர ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகிறது. உதாரணமாக, இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால் உணவுப் பொருட்களில் 40 சதவீதமான தகரத்திலடைக்கப்பட்ட பாலும் 19 சதவீதமான "மால்டட் பாலும்" 15 சதவீதமான சிசுக்களின் ஆகாரமும் 33 சதவீதமான பால் மாவும் கொழும்பு நகரத்தில் உபயோகிக்கப்படுகின்றனவென மதிப்பிடப்பட்டது. கொழும்பு நகரின் சுற்றுப்புறங்களையும் இதிற் சேர்த்துக் கொண்டால், இறக்குமதி செய்யப்பட்ட பால் உணவுப் பொருட்களின் உபயோகம் இன்னும் உயர்ந்து காணப்படுமென்றும் அவ்வறிக்கை கூறுகிறது. எனவே இப்பிராந்தியத்தில் ஏராளமான பாலை விற்பனை செய்ய முடியுமென்பதை இப்புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

எனவே, பாற்சபையின் முதலாவது சிரத்தை, பாலுக்குள்ள இந்தக் கிராக்கியைப் போதியளவுக்குச் சமாளிக்கக் கூடியதான ஒரு பால் பத்திரப்படுத்தும் தொழிற் சாலையைக் கொழும்புக் கருகாமையில் ஸ்தாபிப்பதாகவே யிருந்ததென்பது தெளிவாகும். இந்நேரத்தில் இரண்டு பால் பத்திரப்படுத்தும் தொழிற் சாலைகள் மட்டுமே கொழும்பில் இருந்தன. இவற்றில் ஒன்று தினந்தோறும் 4000 பைந்து பாலைப் பத்திரப்படுத்தக் கூடியதான கொழும்பு கோல்ட் ஸ்டோர்ஸ் தாபனத்தாரின் தொழிற் சாலையாகும். மற்றது கொழும்பு கூட்டுறவுப் பால் சங்கம் லிமிடட் ஸ்தாபனத்தாரால் புறக்கோட்டையில் நடாத்தப்பட்ட தொழிற் சாலையாகும். இங்கு நாளாந்தம் 15,000 பைந்து பால் தயாரிக்க முடியுமென, 1956ம் ஆண்டில் விவசாய உணவு மந்திரி காரியாலயத்தால் நியமனஞ் செய்யப்பட்ட கமிட்டி மதிப்பிட்டுக் கூறியது.

கொழும்பு மத்திய பாற்பண்ணையை ஸ்தாபிப்பதற்கு, பழைய அரசாங்கக் கால் நடைப் பண்ணையின் காணி பாற் சபைக்குக் கொடுக்கப்பட்டது. இக்காணி நாரம்பிட்டியில் உள்ளது. 100 ஏக்கர் விஸ்திரணமான முடிக்குரிய காணி பழைய அரசாங்கப் பண்ணைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இதில் விவசாயப் பகுதிக்கும், விற்பனவுப் பகுதிக்கும் தேவையான நிலம் ஒதுக்கப்பட்டபின் 29 ஏக்கர் காணியே பாற்சபைக்குக் கிடைத்தது. இக்காணியிற் பெரும் பகுதி கட்டிடங்களைக் கட்டமுடியாத சதுப்பு நிலமாகும்.

இந்த 29 ஏக்கர் காணியில் மிகவும் உயர்ந்த நிலத்தில் தனது மத்திய பாற்பண்ணையை அமைப்பதற்காக மெஸர்ஸ் ஹோர்ஸ் (சிலோன்) லிமிட்டட் ஸ்தாபனத்தாருடன் பாற்சபை ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. இத் தொழிற் சாலையின் மாதிரிப் படத்தைத் தயாரிப்பதில் உணவு, விவசாய ஸ்தாபனத்தின் பண்ணைத் தொழில் நுட்ப ஆலோசகரான திரு. எஸ். பி. சோரென்சன் அவர்கள் இச்சபைக்கு ஆலோசனை கூறினர். பாலைப் பத்திரப்படுத்தும் இத்தொழிற் சாலையில் நாளொன்றுக்கு பாஸ்டரின் முறையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 30,000 பைந்து பாலையும் கிருமி அகற்றப்பட்ட 15,000 பைந்து பாலையும் உற்பத்தி செய்ய முடியும்.

இத் தொழிற் சாலையின் கட்டிட வேலைகள் 1956, மார்ச் மாதம் ஆரம்பமாகி 1957, ஜூலை மாதத்தில் பூர்த்தியடைந்தன. இதே நேரத்தில் பாலைப் பத்திரப்படுத்தும் இயந்திரமும் தொழிற் சாலையில் நிறுவப்பட்டது.

கொழும்பு மத்திய பாற்பண்ணையில் பிரதான பண்ணைத் தொழிற் சாலைக்கு மட்டும் 9,600 சதுர அடி இப்பொழுது இருக்கிறது. இத் தொழிற் சாலையின் முதலாவது மாடியில் 2,500 சதுர அடி விஸ்திரணமுள்ள இட வசதி உத்தியோகத்தர்களின் காரியாலயங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### குளிர் அறைவசதிகள்

தொழிற் சாலைக்குப் பக்கத்தே இருக்கும் இரண்டாவது கட்டடம் 14,000 சதுர அடி விசாலமானது. ஒவ்வொரு மணித்தியாலமும் 2,000 ருத்தல் நீராவியை உற்பத்தி செய்யும் இரு கொப்பரைகள் இங்குள்ளன. இதற்கு அணித்தாக உள்ள ஒரு அறையில் 7 ,000 கலன் குளிர் நீர்த்தாங்கிகள் இருக்கின்றன. இவ்விரு அறைகட்கும் மேலே பெரிய நீர்த்தாங்கி உளது. இங்குள்ள நீர் குளிரறையின் தேவைகட்காக உபயோகிக்கப் படுகிறது. இக் குளிரறை 10,000 கன அடியைக் கொண்டது. பொதுவாகத் தொழிற் சாலைக்கு வேண்டிய மின்சாரசக்தி நோர்ட்டன் பிரிட்ஜ் மின்சக்தி நிலையத்திலிருந்து நேரே கொலன்னவை வழியாகப் பெறப்படுகிறது. இதன் காரணமாக, கொழும்பின் தேவைகளுக்கான மின்சார சக்தியிலிருந்து பாற்பண்ணை தன் சக்தியைப் பெற வேண்டிய நிலை ஏற்படாது போகிறது. நோர்ட்டன் பிரிட்ஜ் மின்சக்தி எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டால் அதற்குப் பதிலாக உபயோகிப்பதற்காக 50 கிலோ வாட் சக்திகொண்ட மின்சார யந்திரம் ஒன்றும் பாற்பண்ணையிலுள்ளது. பாற்பண்ணைக்கு வேண்டிய நீர் கிணறுகளிலிருந்து எடுக்கப்படுகிறது. 10,000 கலன் அளவு கொண்ட நீர்த்தாங்கிகளில் இத் தண்ணீர் குழாய் மூலம் ஏற்றப்பட்டு உபயோகிக்

(15 ம் பக்கம் பார்க்க)

# பால்

## சகல சத்துக்களும் உள்ள உகந்த உணவு

டக்டர். ஓ. ஈ. ஆர். அபயரத்தின அவர்களின் வானொலிப் பிரசங்கம்.

எல்லோருக்கும் நமஸ்காரம். ஆகாரத்தைப் பற்றிக் கவலை எதற்கு? சிசு, உணவைப் பற்றிக் கவலைப்படுகிறதா? இல்லை, பெரும்விருந்து கிட்ட ஆயத்தமாய் இருக்கிற தென்பதை உணர்ந்து நடப்பதாய்த் தோன்றுகிறது. அதன் பெரும் விருந்து பால்.

"சரியான உணவுப்பதார்த்தங்களையும் பானங்களையும் உட்கொள்ளாதிருப்பதைத் தவிர வேறொரு குறைபாடும் என்னிடம் இல்லை" என டக்டர் சொல்லுகிறார். "எனது ஆகாரத்தைப் பற்றிய கவனம் எடுக்கும்படி கூறினர்" என்று யாராகுதல் ஒருவர் சொல்லுவதை நாள் தோறும் கேட்கலாம். "உமது ஆகாரத்தைக் கவனித்து வாரும்" என்று எவருக்கும் எச்சரிக்கை செய்யலாம்.

வேறு உணவுப் பதார்த்தங்களிலும் பானங்களிலும் பார்க்க பாலில் டக்டர் எதற்காக அதிகம் பிரீதிகாட்டுகிறார் என்பதை இப்போது கூடியமட்டும் உங்களுக்கு விளக்கிச் சொல்லுகிறேன். சகல சத்துவகைகளையும் ஏறக்குறைய போதிய பங்கு கொண்ட சம்பூரண தனி ஆகாரம் பால். இது காரணம்பற்றியே இதில் அதிக பிரீதி ஏற்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்குப் பால் அத்தியாவசியகம்; வளரும் பிள்ளைகளுக்கு மிக நல்லது; பாலும் பால் சம்பந்தமான உணவும் எங்கள் எல்லோருக்கும் நல்ல உணவு.

சாஸ்திர முறைப்படி பூரண ஊட்டத்திற்குத் தேவையான அம்சங்கள் எல்லாம் அடங்கிய ஆகாரம் ஒன்றில்லை; ஆனால் பால் ஏறக்குறைய சம்பூரணமானது. ஆகையால் போதிய பூரண சத்துள்ள உணவை உண்டு தேகாரோக்கியத்தை நிலை பெறச் செய்து நோயை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்கச் செய்ய விரும்பினால் கிட்டிய சம்பூரண உணவாகிய பாலையும் சில வேறு உணவுப் பொருட்களையும் உண்டுவர வேண்டும்.

ஊட்டத்தின் விதிகள் உண்மையில் இலகுவானவை யானாலும் இதெல்லாம் சற்று ஆச்சரியமாகத் தோற்றலாம். எல்லா விதத்தாலும் நன்மை பயக்கும் இந்த உணவின் இரகசியத்தை வெளியிடுமுன், அப்பேர்ப்பட்ட உணவின் குணகுணங்களை ஆராய்வோம்.

பொதுவாகச் சரீரத்தை வளர்ப்பதற்கும், இழையங்களை அமைப்பதற்கும் சரீர பெலத்தை அளிப்பதற்கும் கருவகைகள் உணவில் இருக்க வேண்டும்; சரீரத்திற்குச் சக்தியையும் உஷ்ணத்தையும் கொடுப்பதற்குக் கரிசலவகைகளும் கொழுப்பும் உணவில் இருக்க வேண்டும்; "பாதுகாப்புப் பொருட்கள்" என்று அழைக்கப்படும் உயிர்ச்சத்துக்களும் உணவில் எராளமாய் இருக்க வேண்டும்; இச் சத்துக்களை விபரிப்பதிலும் பார்க்க அவைகள் செய்வதை விளங்கப் படுத்துவதே சிறந்தது. அவை உடல் வளர்ச்சிக்கு உதவுதோடு ஆரோக்கியத்தையும் சுறு சுறுப்பையும் திடமான உடம்பையுங் கொடுக்கும்.

இவ்விஷயங்களைக் கவனிக்கும் பொழுது பூரண உணவை ஒத்திருப்பது பாலென்றும் அதற்குப் பதிலாய்ச் சமபலனுடன் உபயோகிக்கக்கூடிய உணவுப் பதார்த்தம் வேறொன்றும் இல்லையென்றும் விளங்கும். இவ்வபிப்பிராயம் தப்பாகில் பாலானது நாகரீக மனிதரின் உணவில் ஒன்றாய் இல்லாது நெடுங்காலத்திற்கு முன்பே ஒழிந்திருக்கும்.

பாலின் விசேஷ தன்மைகள் மிகப் புராதன காலத்திலே கண்டு பிடிக்கப்பட்டதாய்ச் சரித்திரம் கூறுகிறது. பசுமாட்டினதும் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் வேறு பிராணிகளினதும் பாலை மனிதர் உற்பத்திகாலந் தொட்டு குடித்துவருகிறார்கள் எனலாம்; மாடுகளை வீட்டில் வளர்க்கத் தொடங்கினவுடன் அவைகளின் பாலை மனிதர் கவரத் தொடங்கிவிட்டனர். பனிக்கட்டி ("ஐஸ்") போடாது பாலைச் சேகரித்து வைப்பதற்காக அதை, வெண்ணெய்யாகவும், மோராகவும், தயிராகவும், பாலாடைக் கட்டியாகவும் மாற்றிக் கொண்டனர். உபயோகப் படுத்தப்பட்டுவரும் நெடுங்காலமாகப் பால் பாராட்டப்பட்டுவருகிறது. மிகப் பலமுள்ள திடமான நீண்ட ஆயுளுடன் வாழ்ந்த சாதியாரெல்லோரும் பாலும் பால் சம்பந்தமான உணவுகளையும் அதிகம் கொண்டுள்ள ஆகாரத்தைப் புசித்து வந்தார்கள் என்று சரித்திரங்கூறுகிறது. இக்காலத்தில் பால் உண்டு வரும் தேசத்தார் பெருத்த பெலசாலிகளாக வருகிறார்கள்.

பாலானது தாயின் பாற் கோளத்தில் சுரப்பது. அது குட்டி மிருகங்களின் இயற்கையான உணவு.

பாலில் சுமாராய் எட்டில் ஏழு பங்கு நீர்; ஆகையால் அது தாகத்தைச் சாந்தி செய்யும்; எஞ்சிய பங்கு கருவகைகளும், கொழுப்பும், சர்க்கரையும், லோகசத்துக்களும், உப்பும் சரீரவளர்ச்சிக்கு ஆதாரமாயும் ஆரோக்கியத்தையும் திடகாத்திரத்தையும் நல்கும். அதிகமாய் விவாதிக்கப்பட்டுவரும் உயிர்ச்சத்துக்களும் சேர்ந்த இலகுவில் செமித்து சரீரத்தில் ஐக்கியப்படக்கூடிய கலவை.

"கருவகைகள்" என்னும் பெயர் நூதனமாயும் சாஸ்திர சம்பந்தமானதாயும் தோற்றக்கூடு மானாலும், எமது தசை நார்களையும் வேறு மெல்லிய இழையங்களையும் உண்டுபண்ணுவதற்கும் அவற்றைத் திருத்திக் கொள்வதற்கும் உபயோகப்படுத்தும் வஸ்துக்களே. அவை சரீர இயக்கத்திற்கு உதவும். வளர்ந்தவர்களுக்கும் சரீரம் இயங்குவதற்கு நிதமும் குறிக்கப்பட்ட அளவு கருவகை வேண்டும். ஆனால் சரீரம் முழுவளர்ச்சியும் அடையுமுன் இது அவசியம் வேண்டும். பாலிலுள்ள கருவகைகள் மனித சரீரத்துக் கருவகைகளை ஒத்திருக்கின்றன. இது காரணமாய் இக்கருவகைகள் இழையங்களை அமைப்பதற்கு பிரத்தியேகமாய்த் தேவைப்படும். இது காரணம்பற்றி அவை "பூரணமான" அல்லது "திறமையான கருவகை" என்று அழைக்கப்படும். பாலில் உள்ள கருவகைகளைப் போல் வேறெந்தக் கருவகையும் சரீர வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் ஏற்றதல்ல.

சக்தி அளிப்பதற்காக கொழுப்பும் சர்க்கரையும் எமது சரீரத்தில் தகிக்கப்படும் பாலில் கொழுப்பு சிறிய வட்டமான துளி ரூபமாய் இயற்கை ஔஷதமாக மிதந்து கொண்டிருக்கும். இந்தக் கொழுப்புத் துளிகள் நீரிலும் பார்க்கக் கனம் குறைந்தவை யானபடியால் பாலின் மேற்பரப்பில் மிதந்து நின்று ஆடைப்படலமாய் விளங்கும். இந்த ஆடையில் உயிர்ச் சத்துக்கள் "ஏ" யும் "டீ" யும் இருப்பதால் பாலாடை விசேஷமானது. இவ்வுயிர்ச்சத்துக்கள் கொழுப்பில் கரையுந்தன்மை யுடையனவாதலால் கொழுப்புடன் சேர்ந்திருக்கும். ஆகையால் அவை பாலிலும் ஆடையிலும் வெண்ணெய்யிலும் உண்டு. அதன் ருசிக்காகவும் பால் குடிக்கப்படுகிறது. கொழுப்பே சக்தியை மிக அடக்கியுள்ள வஸ்துவாகையால் பாலிலுள்ள கொழுப்பின் விகிதத்தின்படி பால் சக்தி அளிக்கும். சில வேளைகளில் பாலாடையை அகற்றிவிட்டு அப்பாலைச் சிறுவருக்குக் கொடுக்கிறார்

கள்; இதை முக்கியமாய்க் குழந்தைகளுக்குப் பால் ஊட்டும் பொழுது செய்யலாகாது; அப்படிச் செய்வதால் பாலிலுள்ள சத்து அதிகம்கெட்டுவிடும்.

சரிசலவகை வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சர்க்கரை பாலிலுண்டு. கருப்பஞ் சர்க்கரையையும் "பீற்" கிழங்குச் சர்க்கரையையும் போல் பாலிலுள்ள சர்க்கரை சரீரத்திற்குச் சக்தியைக் கொடுக்கிறது. அது அதிகம் தித்திப்பானதுமல்ல, புளிப்புக் கொண்டு இரைப்பைக்கு எரிச்சல் கொடுக்கவுமாட்டாது. பாலிலுள்ள சர்க்கரையின் இன்னொரு நல்ல குணமாவது சொற்ப சுக பேதித்தன்மை; பாலை ஒரு விதத்தில் சாந்தப்படுத்துங் குணமும் அதுக்குண்டு.

சரீரத்திற்குத் தேவைப்படும் அநேக லோகசத்துக்களுள் சுண்ணமும். எரியமும், இரும்பும் மூன்று சத்துக்கள். இவ்லோகங்கள் எல்லா உணவுப் பொருட்களிலும் ஏராளமாய் இல்லாதபடியால் உணவுப்பதார்த்தங்களைத் தெரிந்துக்கொள்ளுவதில் இச்சத்துக்களுக்காகப்பிரத்தியேக கவனம் எடுக்க வேண்டும். எலும்புகள் உருப்படுவதற்குக் கட்டாயம் தேவையான சுண்ணம், எரியம் போன்ற லோக சத்துக்கள் பாலில் அதிகம் உண்டு. ஆடை அகற்றிய பாலாலும் ஆடை அகற்றாத பாலாலும் சுண்ணத்தை இலகுவில் பெறக் கூடிய சாதனம் பால். அதில் எரியமும் அதிகமுண்டு. இரத்தக் கண்ணறைகளுக்குத் தேவையானஇரும்புச் சத்து பாலில் சிறு தொகையாய் மாத்திரம் உண்டு; என்றாலும் பாலில் உள்ள சிறு தொகையான இரும்புச் சத்து சரீரத்தில் சேர்ந்துகொள்ளும். சிறு குழந்தைப் பராயத்திலிருந்தே பாலுடன் ஏதாகுதல் இரும்புச்சத்தை அதிகம் உள்ள உணவைப் புசிக்க வேண்டும். எரியமாகிய லோக சத்து எலும்பு, பல்லு, தசை, நார், நரம்பு, இளையம் சம்பந்தமான உயிர்க் கண்ணறையையும் அமைப்பதற்கு அவசியமானது. எலும்புகளினதும் பற்களினதும் மூலவஸ்து சுண்ணம். ஆகையால் அவை வளர்ச்சியுறுவதற்கு அது பெருந் தொகையாய் வேண்டும். சுண்ணமும், எரியமும் ஆகாரத்தில் வேண்டியளவு தொகையில் இருந்தும் சில உயிர்ச் சத்துக்களும் இருந்தால் மாத்திரம் எலும்புகளினதும் பற்களினதும் இளையங்கள் வழக்கம்போல் விருத்தியடைந்து கெட்டியாய் இருக்கும். குழந்தை பிறப்பதற்கு ஏழு மாசங்களுக்கு முன்பு எலும்புகளும் பல் அரும்புகளும் உருப்பெற்று வரும்போதே எரியமும், சுண்ணமும் இன்றியமையாதவையாகி விடுகின்றன. பிறக்க முன்னும் குழந்தைப் பருவத்திலும் சுண்ணம் அதிகம் தேவைப்படுவது கருப்பவதிக்கும் பால் ஊட்டும் தாய்க்கும் நாளொன்றுக்கு ஒரு குவாட் இரண்டு பைன்ற், பாலை நியமித்திருப்பதற்கு ஒரு காரணம். வளர்ந்து வருங் காலத்தில் சுண்ணச்சத்துக் குறைவான உணவு அருந்துவதால் பற்களுக்கு மோசமான பழுது உண்டாகும். ஆகையால் வளரும் பிள்ளைகளுக் கெல்லாம் நிதமும் போதியளவு பால் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. சிறு பராயம் முழுவதும், நிலையான பற்கள் எல்லாம் முளைத்து எலும்புகளும் முழு வளர்ச்சியடையும்வரையும் குறைந்தது ¾ குவாட் அல்லது ஒரு குவாட் பால் நிதமும் தேவைப்படும் சுண்ணத்தை அடைவதற்கு உட்கொண்டு வர வேண்டும். பற்களையும் எலும்புகளையும் சுகமாய் வைத்திருப்பதற்கு எரியமும் சுண்ணமும் ஆயுள் காலம் முழுவதும் தேவை. "குடும்பத்திலுள்ளோர் எல்லோரினதும் உணவு பால்" என்று கூறுவதற்கு முக்கியமாய காரணங்களில் ஒன்று ஒவ்வொருவருக்கும் உணவில் அவசியமாய் இருக்கவேண்டிய சுண்ணச் சத்து இதில் இருப்பது போல் வேறு வகையில் கிடைப்பதரிது.

இதுகாறும் கண்டுபிடித்த ஆறு உயிர்ச்சத்துக்கள் "ஏ", "பி", "சீ", "டீ", "ஈ", "ஐ" ஒவ்வொன்றும் பாலில் சிறு தொகையாகவோ பெருந் தொகையாகவோ இருப்பதால் முக்கியமான பாதுகாப்பு உணவில் ஒன்று எனலாம். உயிர்ச்சத்துக்களில் இரண்டான "ஏ" யும், "சீ" யும் பாலில் அதிகம் உண்டு. ஒரு உணவுப் பதார்த்தத்திலும் எல்லா உயிர்ச்சத்துக்களும் அதிகமாய் இல்லாதபடியால், அவற்றையெல்லாம் சிறு தொகையிற் கூட உள்ள உணவுகளும் அரிதாகையாலும் பாலில் உள்ள உயிர்ச்சத்துக்களின் தொகை அதிகமானபடியால் அது உணவுகளில் தலை சிறந்தது.

மனித சரீரத்தின் இயக்கத்தை ஒரு மோட்டார் ரதத்தின் இயக்கத்திற்கு ஒப்பிட்டால் பாலில்உள்ள கொழுப்பும் சர்க்கரையும் இயந்திரம் இயங்குவதற்குத் தேவைப்படும் பெற்றோலுக்குச் சமானமாகும், லோக சத்துக்களும் கருவகைகளும் தேய்ந்துபோனவற்றிற்காகப் புதுக்கப்போடப்பட்ட பாகங்களை ஒக்கும், இயந்திரத்தை ஓடச்செய்து அதை நல்ல நிலைமையில் வைத்திருக்கும் மின்சார தக்கைகளை (பிளக்ஸ்) உயிர்ச்சத்துக்கள் ஓரளவில் ஒக்கும்.

பாலானது குழந்தைகளைவிட மற்றவர்களுக்கு சம்பூரண உணவாகாது இருப்பதற்குக் காரணமாவது அதன் பருமை காரணமாக அது தனி உணவாகாததே. அத்தோடு மற்றைய லோக சத்துக்கள் அதிகமாய் இருந்தபோதிலும் இரும்புச்சத்து சற்றே குறைவு.

பால் உணவுகளெல்லாம் பாலைப் போல் சத்துள்ளன. வெண்ணெய் ஏறக்குறைய பாலிலுள்ள கொழுப்பு சக்தியும் உயிர்ச்சத்து "ஏ" யும் போதியவளவு அதிலிருந்து பெறலாம். நெய்யும் அவ்விதமானது. பாலாடையைப்பற்றியும், ஏறக்குறைய இப்படியே கூறலாம். என்றாலும் உண்மையில் அது திரட்சியில் குறைவானது; சில லோக சத்துக்களையும் கருவகைகளையும் கொண்டிருக்கிறது.

ஆடையை அகற்றிய பாலுக்கு இத்தேசத்தில் போதிய மதிப்பில்லை. அதில் உயிர்ச் சத்து "ஏ" யும் கொழுப்பும் இல்லை. ஆனால் லோகசத்துக்களும், கருவகைகளும் சர்க்கரையும் உண்டு. வளரும் பிள்ளைகளினதும் வளர்ந்தவர்களினதும் ஆகாரத்துடன் சொற்ப செலவில் அதைச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் சிறு குழந்தைகளுக்கு ஊட்ட ஏற்றதல்ல.

பாலாடைக் கட்டியில் இளையங்களை வளர்க்கும் பாலிலுள்ள கருவகைகளும் சில உயிர்ச்சத்துக்களும் கொழுப்பும் ஏறக்குறைய உண்டு. அது சத்துள்ள உணவு.

ஐஸ்கிறீம் ஆவது உறைந்த பாலாடையும் சீனியும் ருசிக்காகச் சேர்க்கப்பட்ட பண்டங்களும் நல்ல பாலாடையால் ஆக்கப்பட்டால் அது சத்துள்ள உணவு; என்றாலும் சக்தியிற் கூடியது; ஆகையாற் கொழுக்கச்செய்யும்.

உடன் கறந்த பாலைவிட தகரங்களில் அடைக்கப்பட்ட பலவித குறுகக் காய்ச்சிய பால்கள் உண்டு. அவையெல்லாம் சூடாக்கப்பட்டபடியால் உண்பதில் ஆபத்தில்லை.

வற்றக் காய்ச்சிய பாலாவது அதில் உள்ள நீரில் பாதி அகற்றப்பட்ட பால்.

ஒடுக்கிய பால் திரட்டப்பட்டு சீனியும் சேர்க்கப்பட்டிருக்கும்.

நீர் எல்லாம் அகற்றப்பட்டபின் எஞ்சிய உலர்ந்த வஸ்துவே பால் தூள் எனப்படும்.

மேற்கூறிய இறுகத் திரட்டிய பால்கள் எல்லாம் சத்துள்ள உணவுகள்.

"பால் எல்லா வகையிலும் உகந்த உணவு" என்று நான் ஏன் கூறுகிறேன் என்பதை இப்பொழுது அறிவீர்கள். எல்லா வயசினர்களுக்கும் எல்லாவித வருமானம் உள்ள குடும்பத்தவர்களுக்கும் பாலும் பால் உணவுகளும் அவற்றின் சத்துத் தன்மை காரணத்தால் ஆகாரத்தில் முக்கியமாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டியவை. பாலையும் அதின் கிளை உணவுகளையும் போல வேறெந்த உணவும் சரியான ஊட்டத்திற்கு சமபிரயோசனமாக ஏற்றதாயிராது.

(31 ம் பக்கம் பார்க்க)

சைவப் பெரியார்

# சிவபாதசுந்தரம் பி.ஏ.,

(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)

சைவ உலகம் சைவத்தை மறந்து வருவது போலவே, சைவப் பெரியார்களையும் மறந்துவருகின்றது. சமீபத்தில் மறந்த சைவப் பெரியாருள், சிவபாத சுந்தரம்பிள்ளை ஒருவர்.

சிவபாத சுந்தரம்பிள்ளையைத் திடீரென்று மறந்துவிட்டது சைவ உலகம். உலோகாயதப்போக்கிற் போகிற உலகத்தோடு, சைவ உலகமும் போய்க்கொண்டிருக்கின்றது. சைவ உலகிற் சைவம் பெயரளவில்தானே. இது நிற்க;

சிவபாத சுந்தரம்பிள்ளையின் பின்குடுமி பெயர்பெற்ற குடுமி: சைவக் குடுமி: மிகமிகப் பழைமையான குடுமி. தேகம் தசைப் பற்றில்லாதது; என்பு எழுந்து இயங்கும் யாக்கை; கங்காளம். தூய வெண்ணிறமான வேட்டியை மடித்துக் கட்டிக்கொள்வார். சுற்றி உடுக்கும் வழக்கம் இல்லை. வேட்டிக்குப் பொருத்தமான வெண்ணிறச் சால்வையால் போர்த்திக்கொள்வார். அங்கியை அவர் விரும்புவதில்லை. அணிய நேரிடும்போது அருவருப்புடன் அணிவார். கால்களிற் செருப்பு மாட்டுவதில்லை. குமிழி மிதியடி இட்டுக் கொள்வார்.

சைவம் வளர்த்த ஈழநாட்டுத் தமிழ்ப்பெரியார்.



இப்படிப்பட்ட சிவபாத சுந்தரம்பிள்ளையை முதன் முதற் காணுகிறவர்கள், நல்லதொரு நாட்டுப்புறத்து மனிதர் என்றே தீர்த்துக்கொள்வார்கள். ஒரு பி. ஏ.; என்றுவது, ஒரு கல்லூரியின் பிரதமர் என்றுவது எண்ணவே மாட்டார்கள்.

ஆனல், சிவபாத சுந்தரம்பிள்ளை அவர்களுடன் இரண்டொரு வார்த்தை பேச நேரிட்டாலோ! பி. ஏ.ப் பட்டமும். கல்லூரிப் பிரதமர் உத்தியோகமும் பிள்ளை அவர்களுக்கு ஒரு சரக்கு அல்ல; பிள்ளை அவர்களாலே அவைகள் பெருமை அடைகின்றன; என்ற முடிபுக்கு ஒரு நிமிஷத்தில் வர நேரும். பிள்ளை அவர்கள் பெருஞ் சிந்தனையாளர், எடுத்துக்கொண்ட விஷயத்தை நன்கு ஆராய்ந்து, தெளிவு அடைந்தபிறகுதான், மேற்கோள் வேறு, ஏதுவேறு, திருஷ்டாந்தம் வேறு ஆக, அறுத்துறுத்துச் சம்பாஷிப்பார்கள்; பேசுவார்கள். அவர்களுடைய உபந்நியாசம் தாக்க செடிலமானது; தனி அழகு படைத்தது; அவர்களை ஒரு இலக்கிய விரோதி என்று சொல்லுவார்கள். ஆனல், அவர்களுடைய பேச்சில் இலக்கிய ரசனை தேன் சொட்டிக்கொண்டேயிருக்கும். தாம் சிரிக்காமலே கேட்கிறவர் களைக் குலுங்கச் குலுங்கச் சிரிக்கவைப்பார்கள்.

அவர்களுடன் சம்பாஷிப்பவர்கள் வெகு கவனமாயிருக்க வேண்டும். கண்டபடி உளறிக்கொட்டினுல், விட்ட பிழைகளை விட்ட வர்கள் உணரும்படி, கோபிக்காமல் ஒத்துக்கொள்ளும்படி வகுத்து வகுத்துக் கிரமப்படுத்தி எடுத்துக் காட்டுவார்கள். அப்படி அவர்கள் எடுத்துக் காட்டும்போது, ஒரு தனிச்சிறப்பு ஒளிவிடும். அவர்க ளுடைய தனி விவேகம் நெற்றியிற் பிரகாசிக்கும். விவேகங் கிளர்ந்து, நியாயிக்குந் திறன் உச்சநிலை அடையுஞ் சமயங்களில், மெய்ப்பாடு தாங்காமல், மெலிந்த சரீரம் குலுங்காமற் குலுங்கிச் சிறிதேசிரிப்பு வரும். அப்பொழுது அவர்களுடைய சுட்டுவிரல் சிறிது வளைந்து, நியாயத்தைச் சுட்டிக்காட்டும். நியாய ரசனையில் வெகு ஈடுபாடு உள்ளவர்கள்; அப்படிப்பட்ட சமயங்களில் தமது தேகநிலையையும் மறந்து, வாதித்துச், சுரம்பிறந்து, மருத்துவ நிலை யத்துக்கு ஆளானதும் உண்டு. அதற்கு, நல்ல நல்ல உதாரணங்கள் இருக்கின்றன; விரிப்பிற் பெருகிவிடும்.

சிவபாத சுந்தரம்பிள்ளையவர்கள் சிறந்ததொரு நையாயிகரே யாயினும், அவர்களுக்கு வக்கீல்களுக்குப் போன்ற வாதநோயில்லை. அவர்களுடைய வாதம், உண்மைகளைக் காண்பதிலும், சைவத்தை நிலைநாட்டுவதிலுமே உபயோகமாய்ப் பெரும் பயன் அளித்தது.

பிள்ளை அவர்கள் பிறந்த குடும்பம், கல்வி செல்வங்களால் தனிச் சிறப்பு எய்திய ஒரு குடும்பம். அவர்களுடைய தந்தையார் சுப்பிரமணியபிள்ளை. சுப்பிரமணிய சுவாமியை ஆன்மார்த்தமாகத் தினந்தோறும் பூசிப்பவர் சுப்பிரமணிய பிள்ளை; சுப்பிரமணிய தொண்டர். புதுச்சேரியில், வார்கடைச்சாமி என்றெரு சித்தர், அடிக்கடி புலோலிக்கு வந்து, சுப்பிரமணியபிள்ளையின் வீட்டில் தங்குவதுண்டு. சுப்பிரமணியபிள்ளையின் சகோதரியார் பார்ப்பதி அம்மையார். அந்த அம்மையார் அந்தச் சித்தருக்குத் தொண்டு செய்து, அவர் அருள் பெற்றவர். வடமொழி தென்மொழியில் மகா பண்டிதை அந்த அம்மையார். சுப்ரமணியபிள்ளைக்கு இன்னும் இருவர் ஆண் சகோதரர்; ஒருவர் தமிழிலும் மற்றொருவர் வட மொழியிலும் மேதைகள்; வடமொழிப் பண்டிதர், திருவனந்தபுரம் மகாராஜாக் கல்லூரியில் சமஸ்கிருத பண்டிதராய், மனேன்மணியம்

(22 ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக் கட்சிக்கும் பிரதமருக்குமிடையில் அண்மையில் ஏற்பட்ட உடன்படிக்கைபற்றி பிரதமரின் அறிக்கை

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் பிரதமருக்குமிடையில் அண்மையில் ஏற்பட்ட உடன்படிக்கை பற்றி, பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் விடுத்த அறிக்கையின் விவரம் பின்வருமாறு :—

தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை பற்றிப் பொது மக்கள் இப்பொழுது அறிவார்கள். இது விஷயம் சம்பந்தமான இரு அறிக்கைகள் ஏற்கெனவே பகிரங்கப்படுத்தப்பட்டுவிட்டன. முதலாவது பத்திரம் உடன்பாட்டின் பொதுவான கொள்கைகளைக் கூறியது. இரண்டாவது பத்திரம் உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதேசச் சபைகள் பற்றிய சில விபரங்களைக் கூறியது. நானும் தமிழரசுக் கட்சியும் பேசிய இரு விஷயங்கள் சம்பந்தமாக—அதாவது பிரதேசச் சபைகள், மொழிப் பிரச்சினை சம்பந்தமாக—சில தப்பபிப்பிராயங்கள் தோன்றி யுள்ளதாகத் தெரிகிறது. இவ்விரு பிரச்சினைகள் சம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப் படவேண்டி யிருக்கும் மசோதாக்களில் அவை சம்பந்தமான விபரங்கள் யாவும் கூறப்படும். அவ்விஷயங்கள் இன்று முற்றிலும் ஆராயப்பட வேண்டியுள்ளன. இந்நிலையில் இவ்விஷயங்கள் பற்றிய விவரங்களையிட்டு நாம் இங்கு பேச முடியாது. ஆனால் முற்குறித்த அறிக்கைகளிலுள்ள (இணைப்புகள் அ. ஆ) அடிப்படைக் கொள்கைகள் பற்றிச் சில தப்பபிப்பிராயங்கள் நிலவுவதன் காரணமாக, அவற்றைப்பற்றி விளக்கந்தருதல் நன்றாகும்.

### பிரச்சினையின் பூர்வசரித்திரம்

இப்பொழுது நாம் உடன்பாட்டுக்கு வந்திருக்கும் பிரச்சினைகளின் சரித்திரத்தை முதலில் பொதுமக்கள் அறிந்து கொள்வது நல்லதாகும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மொழிப்பிரச்சினை சம்பந்தமாகப் பேசுகையில் அன்றைய பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலை தமிழுக்கும் சிங்களத்துக்கும் இலங்கை முழுவதும் சம அந்தஸ்து வழங்கத் தாம் தயாராக இருப்பதாகவும், அதற்காக அரசியற் சட்டத்தைத் திருத்தத்தாம் தயாரென்றும் குறிப்பிட்டார். இதனால் சிங்களர் மனதில், தமது மொழி பலவீனமுற்று நாளடைவில் அழிந்தொழிந்து விடலாம் என்ற அச்சம் குடிகொண்டது. எனவே இவ்வாலோசனைக்கு எதிரான கிளர்ச்சி ஒன்று நாட்டில் தோன்றலாயிற்று. கடந்த பொதுத் தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏகமனதாக தனது மொழிக் கொள்கையை நிர்ணயித்தது. அக்கொள்கையாதெனில் சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்கும் அதே நேரத்தில், தமிழின் நியாயமான உபயோகத்துக்கும் அங்கீகாரமளிக்க வேண்டுமென்பதாகும். இக்கொள்கை மகாஜன எக்சத் பெரமுனையால் அங்கீகரிக்கப்பட்டு அதன் அடிப்படையிலேயே கடந்த பொதுத் தேர்தலில் நாங்கள் போட்டியிட்டோம். சென்ற வருடம் சிங்களம் மட்டுமே நாட்டின் அரசாங்க மொழியாக வேண்டுமென்னும் மசோதாவை நிறைவேற்றி, நாம் இவ்வாக்குறுதியில் ஒரு பகுதியைப் பூர்த்தியாக்கினோம். அதன் பின் வாக்குறுதியின் இரண்டாம் பகுதியை, அதாவது தமிழுக்கும் ஓரிடம் நல்க வேண்டுமென்னும் பகுதியை நிறை வேற்றுதல் பற்றி நாம் கவனம் செலுத்தலானோம்.

### நான்கு அம்சத் திட்டம்

இது சம்பந்தமாக, நியாயமான அளவு தமிழ்மொழி உபயோகத்தை அமுலுக்குக் கொண்டு வருதல் பற்றிச் சில மாதங்களுக்குமுன் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் சார்பில் நான் எனது ஆலோசனைகளை விளக்கினேன். இவைகளே இப்பொழுது எனது நான்கு அம்சத்திட்டமென அழைக்கப்படுகின்றன. ஒரு தமிழ்க் குழந்தை தமிழ் மொழி மூலம் தன் கல்வியைக் கற்க உரிமையுண்டு என்ற எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையின் பேரிலேயே இந்த நான்கு அம்சத் திட்டங்களும் வகுக்கப்பட்டன. முதலாவது அம்சம் **கல்வி** பற்றியது ; ஒரு தமிழ்க் குழந்தைக்கு சர்வகலாசாலை வரைக்கும் சர்வகலாசாலையிலும் கூட தமிழ்மூலம் கல்வி கற்க உரிமை உண்டு என்பதை இது அங்கீகரித்தது. இரண்டாவது அம்சம் **அரசாங்க சேவை பற்றியது.** தமிழில் கல்விகற்ற தமிழ்க் குழந்தை அரசாங்க சேவையில் சேர்தற்கான பரீட்சைகளைத் தமிழ் மொழியிலேயே எடுத்தற்கு உரிமை இருக்க வேண்டுமெனக் கருதப்பட்டது. இவ்விதம் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் தகுதிகாண் நிலைமையில் பதவிகளில் அமர்த்தப்பட வேண்டுமென்றும் அவர்கள் மூன்று வருடங்களுள் அரசாங்க மொழியில் போதியளவு தேர்ச்சி பெற வேண்டுமென்றும் கருதப்பட்டது. இவ்விதம் அரசாங்க மொழியில் தேர்ச்சி பெறுவோர் வேலையில் நிரந்தரமாக்கப்படுவர். மற்றையோர்கள் விலக்கப்படுவார்கள். சிலகாலம் செல்லத் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் இரண்டாவது மொழியாகப் பயிற்றப்படத் தொடங்கியதன் பின்னர் இந்த முறை கைவிடப்பட்டு பரீட்சையில் இரண்டொரு பாடங்கள் சிங்களத்தில் பரீட்சிக்கப்படும். மூன்றாவது அம்சம் **கடிதப் போக்குவரத்துப்** பற்றியது. தமிழில் கல்விபயின்ற ஒரு தமிழர் அரசாங்கத்துக்குத் தமிழில் கடிதம் எழுதக்கூடும். அவர்களுக்கு மறுமொழிகளை ஏறத்தாழ 1960 ம் ஆண்டு முடியும் வரை இப்பொழுது போலவே தமிழ்க்கடிதங்களுக்குத் தமிழில் பதில் அனுப்புதல் சாத்தியமாகலாம். அதன் பின்னர் தபால்களை அரசாங்க மொழியிலேயே அனுப்பலாம். ஆனால் வசதிக்காக அவற்றுடன் தமிழ்ப் பிரதிகளையும் இணைக்கலாம். நான்காவது அம்சம் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள **தலத்தாபனங்கள்** பற்றியது. இவற்றில் பெரும் பாலானவற்றில் தமிழில் கல்வி கற்றவர்களே அங்கம் வகிப்பார்களாகையால் அம்மொழியிலேயே தமது அலுவல்களை நடாத்தும் உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்படலாம். இத்தலத் தாபனங்களுக்கும் மத்திய அரசாங்கத்துக்குமிடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்தை தனிப்பட்டவர்கள் மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக் கொள்வதுபோன்ற முறையில் வைத்துக் கொள்ளலாம். ஆனால் இது விஷயத்தில் அரசாங்க மொழியின் அதிகார நிலையைப் பாதுகாக்க மேலும் சில நடவடிக்கைகள் எடுக்க நேரிடலாம்.

தமிழ் மொழியின் உபயோகம்பற்றிய எனது நான்கு அம்சத்திட்டம் பற்றிப் பொதுவாக நான் விளங்கப்படுத்தி விட்டேன். தமிழரசுக் கட்சியுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளில் இந்த நான்கு அம்சத்திட்டம் இடம் பெறவில்லை. எனது நாலம்சத்திட்டத்தில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியில் நிர்வாகம் நடைபெற வேண்டு மென்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனத் தமிழரசுக் கட்சியினர் கூறியதைத் தவிர இந்த அம்சங்கள் பற்றி வேறெவ்வித பேச்சும் நிகழவில்லை. இலங்கை முழுவதும் சிங்க

1*——J. N. B 68268 (9/57)

எம் அரசாங்க மொழியாக இருப்பதை இது எவ்விதத்திலும் பாதிக்காதென்றால்தான், நான் அதற்கு உடன்படுவேன் எனக் குறிப்பிட்டேன். தமிழரசுக் கட்சியினர் இதனை ஏற்றுக் கொண்டனர்.

கூட்டறிக்கையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்பேசாத சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்க தேவையான ஏற்பாடுகள் சேர்க்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருப்பது உண்மையில் அத்தியாவசியமான ஒன்றல்ல. ஏனெனில் இந்நாட்டின் ஒரேயொரு அரசாங்க மொழி என்ற முறையில் சிங்களம் நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது; வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சிங்கள மக்களின் உரிமைகள் பூரணமாகப் பாதுகாக்கப்படும். ஆனாலும் இது விஷயத்தைக் கூட்டறிக்கையில் குறிப்பிட்டது, இம் மாகாணங்களிலுள்ள சிங்கள மக்களுக்குத் தமது மொழியில் தம் அலுவல்களை நடத்துவதில் எவ்வித சங்கடமும் இருக்காதென்பதைத் தெளிவுபடுத்துதற்கேயாம்.

சிங்கள மக்களில் பெரும்பாலோர் இந்த நான்கு அம்சத்திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். சிங்கள மொழி பற்றி விசேட சிரத்தை கொண்டுள்ள, பௌத்த பிக்குமாரின் பிரதிநிதித்துவம் வாய்ந்த எக்சத் பிக்கு பெரமுனையும், ஸ்ரீலங்கா சங்க சபாவும், இதைப் பொதுவாக ஒப்புக் கொண்டுள்ளன. ஆனால் அவர்கள் நான்கு அம்சங்களின் வரைவிலக்கணம்பற்றி சிலசில ஆலோசனைகளைக் கூறியிருக்கின்றார்கள். இந்த நான்கு அம்சங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான மசோதாவைத் தயாரிக்கும்போது, இத்தாபனங்கள் கூறிய யோசனைகளை நான் மிகவும் கவனமாக ஆராய்வேன்.

கடந்த பொதுத் தேர்த்தலுக்கு முன்னால் பொது மக்கள் நன்கறிந்த ஒரு கொள்கையையே நாம் அமுல் நடத்திவருகிறோமென்பதை இவற்றிலிருந்து நன்கறியலாம். எனவே இது சம்பந்தமாக எவரும் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. நாங்கள் சிங்களத்தை மட்டுமே அரசாங்க மொழியாக்கி யிருக்கிறோம். அந்நிலைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் தமிழ் மொழி சம்பந்தமாக நாம் அறிவித்த எமது கொள்கையை இப்பொழுது அமுல் நடத்துகிறோம். இதுவே இவ்விஷயத்தைக் கையாளுவதில் நீதியும் நியாயமுமான ஒரு முறை என்பதை மக்களிற் பெரும் பாலானோர் ஒத்துக் கொள்வர். நாட்டின் அரசாங்க மொழிகளாகச் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டால் சிங்கள மொழி சிதைவுறும் என்ற சிங்கள மக்களின் பீதி, சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்கியது மூலம் அகற்றப்பட்டு விட்டது; அதே போலத் தமிழர்கள் தமது மொழி சம்பந்தமாகக் கொண்ட பீதியும் மேற் கூறியவாறு தமிழ் மொழியின் உபயோகத்துக்கு அங்கீகாரம் அளிப்பதன் மூலம் நீக்கப்பட்டுவிட்டது.

### பிரதேசச் சபைகள்

இனி நான் பிரதேசச் சபைகளின் விஷயத்துக்கு வருகிறேன். டொனமூர் கமிஷனர்கள் கூட இப்படிப்பட்ட ஸ்தாபனங்களை ஏற்படுத்தும்படி சிபார்சு செய்தார்களென்பது ஞாபகமிருக்கலாம். டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் யான் தலத்தாபன அமைச்சராக இருந்தபோது, தலத்தாபன நிர்வாகக் குழு இப்பிரச்னையைப் பரிசிலனை செய்தபின், இது விஷயம்பற்றி ஒரு விரிவான அறிக்கையை அரசாங்க சபைக்குச் சமர்ப்பித்தது. இவ்வறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதிய பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டபோது மந்திரி சபையும் கூட இக்கருத்தை அங்கீகரித்தது. ஆனால், பின்னர் திரு. டி. எஸ். சேனநாயக்கா அவர்கள் அத்தருணத்தில் அவை தாபிக்கப்படக் கூடாதெனக் கருதினார்கள். எனவே இவ்விஷயம் ஒதுக்கி வைக்கப்பட்டுவிட்டது. ஆகவே இது ஒரு புதிய யோசனை அல்ல வென்பது இதிலிருந்து விளங்கும். நிர்வாகத்தைப் பலமுகப்படுத்தும் வேலையை பிரதேச சபைகளை நிறுவுவதால், மத்திய அரசாங்கத்திடமிருந்து நிர்வாகத்தைப் பிரித்துக் கொடுப்பதில் நாம் ஒரு படி முன்னேறுகிறோமே தவிர வேறொன்றுமில்லை. மாநகரசபைகள், நகரசபைகள், பட்டினசபைகள் கிராமச் சங்கங்கள் போன்ற தாபனங்கள் இன்று நமக்கிருக்கின்றன. ஆனால் இன்னும் பழைய குடியேற்ற நாட்டுக் கச்சேரி ஆட்சி முறையே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கச்சேரிகளின் வேலையிற் பெரும் பகுதியைப் பிரதேசச் சபைகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தேசிக்கப்பட்டது. எனவே இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட தங்கள் பிரதிநிதிகள் மூலமாகப் பல்வேறு விஷயங்களையும் கையாளக் கூடியதாக விருக்கும். இப்பிரதேசச் சபைகள் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக் குட்பட்டவைகளாக இருக்கு மென்பது உணரப்படல் வேண்டும். பல்வேறு அதிகாரங்கள் அவற்றிற்கு வழங்கப்படும். கிராமச் சங்கச் சட்டத்தின் கீழ் கூட, சௌக்கியம், பாடசாலைகள், வீதிகள், தண்ணீர்த் திட்டங்கள், விவசாயம், நீர்ப்பாசனம் ஆதியன சம்பந்தமாக கிராமச் சங்கங்கள் ஏராளமான அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியுமென்பதை நினைவு கூர்தல் வேண்டும். தலத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பெற்ற ஒழுங்கு விதிகளின் பிரகாரம் மட்டுமே இவ்வதிகாரங்களைப் பிரயோகிக்க முடியும். இதே நிலைமைதான் பிரதேசச் சபைகளிலும் இருந்துவரும். இச்சபைகளால் தயாரிக்கப்படும் எல்லா ஒழுங்கு விதிகளும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியிருக்கும். ஏற்கெனவே பிரசுரிக்கப்பட்டுள்ள பிரதேசச் சபைகள்நகல் மசோதாவின் கீழ், இதர அதிகாரங்களோடு, எந்த விதமான பொது சன உபயோக சேவையையும் தாபித்துக் கொண்டு நடாத்தவும், விவசாய, உணவுற்பத்தியை ஊக்குவித்து அபிவிருத்தி செய்யவும், குடியிருப்பவர்களின் சேமாபிவிருத்திக்காக எந்த விதமான சேவைகளையும் மேற்கொள்ளவும், நீர் வளங்களைப் பரிசோதனை செய்து கால் வாய்களையும் குளங்களையும் நிர்மானிக்கவும், அங்கீகரிக்கப்படக் கூடிய இதர சேவைகளைத் தாபித்துக் கொண்டு நடாத்தவும் பிரதேசச் சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதென்பதைக் காணலாம். இவை மிகவும் விரிவான அதிகாரங்களாகும். இவ்வதிகாரங்களுட் சிலவற்றைத் திட்டவட்டமாகக் குறிப்பிட வேண்டுமெனத் தமிழரசுக் கட்சி விரும்பியது. பிரதேசச் சபைகள் பிரயோகிக்கும் அதிகாரங்கள், மசோதாவில் மிகவும் கவனமாக விளக்கப்படுமென்ற நிபந்தனையுடன் இவ்விருப்பத்துக்கு நான் இணங்கினேன். எனவே பிரதேசச் சபைகளைக் கட்டுப்படுத்த பாராளுமன்றத்திற்குப் பூரண அதிகாரம் உண்டென்பதும், அவை தயாரிக்கும் ஒழுங்குவிதிகளும் கூட பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியவை என்பதும், பிரதேசச் சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் மசோதாவில் விளக்கிக் கூறப்படுமென்பதும் இதிலிருந்து தெரியவரும். ஆகையால் இப்பிரதேசச் சபைகளை நிறுவுதல் எந்த விதத்திலும் சமஷ்டி இராஜ்யங்களை நிறுவுதற்குச் சமமாகுமென அஞ்சுவதற்குக் காரணம் எதுவுமில்லை. குடியேற்றத்திட்டங்களில் குடியேற்றப்படுபவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக பிரதேசச் சபைகளுக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரம் சம்பந்தமாக ஒரு கேள்வி எழுகின்றது. பிரதேசச் சபைகள் சம்பந்தமாகக் கூறப்பட்ட யோசனைகளில் ஓரளவு சந்தேகத்தைக் கிளப்பியிருக்கும் அம்சம் இது மட்டும் தான் எனத் தெரிகிறது. ஆகவே இது விஷயமாக உள்ள நிலைமையை மேற்கொண்டும் விளக்கிக் கூற யான் விரும்புகிறேன்.

## குடியேற்றம்

குடியேற்றம் பற்றிய விஷயம், உண்மையில், காணி அமைச்சரின் கட்டுப்பாட்டின்கீழ் மத்திய அரசாங்கத்தின் அலுவலாகவேயிருக்கும். சௌக்கியம், கைத்தொழில் முதலான ஏனைய விஷயங்களைப்போல், குடியேற்றத் திட்டங்கள் சம்பந்தமாகப் பிரதேசச் சபைகளுக்கு வழங்கப்படும் எந்த விதமான அதிகாரங்களும் கூட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, பிரதேசச் சபைகள் மசோதாவில் விளக்கப்படும். பிரதேசச் சபைகள் சம்பந்தமாக கூட்டறிக்கையில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ள ஒரு அம்சம் ஓரளவிற்குத் தப்பெண்ணத்தை யேற்படுத்தியிருக்கிறது. அதாவது : "பிரதேசச் சபைகளின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள காணிகளைப் பராதீனப்படுத்துவதற்குக் குடியேற்றக்காரர்களைத் தெரிந்தெடுக்கும் அதிகாரம் அப்பிரதேசச் சபைகளுக்கு இருத்தல் வேண்டும்". ஒரு பிரதேசச்சபையின் எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு குடியேற்றத்திட்டத்திலும், அப்பிரதேசச் சபையால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே காணியைப் பராதீனப் படுத்த முடியுமென்றும், ஆகவே அப்படிப்பட்ட பிரதேசச் சபையின் எல்லைக்குள் வசிக்காத எவரையும் ஒரு குடியேற்றக்காரராகத் தெரிவு செய்யமுடியாதென்றும் ஒரு தப்பெண்ணத்தை இது ஏற்படுத்தியிருக்கிறது. இந்நிலைமையை காணி மந்திரி அவர்களும் நானும் சமீபத்தில் பாராளுமன்றத்தில் விளக்கிக்கூறினோம். இப்படிப்பட்ட ஒரு தவறான வியாக்கியானத்துக்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. கைத்தொழில்கள் ஆதியாம் விஷயங்களிற்போல், குடியேற்றம் சம்பந்தமான விஷயத்திலும், நாடு முழுவதினதும் சார்பாக மத்திய அரசாங்கத்தால் சரியான முறையில் பிரயோகிக்கப்படும் அதிகாரங்களும் இருக்கும்; அத்துடன் பிரதேசச் சபைகளால் பிரயோகிக்கப்படும் அதிகாரங்களும் இருக்கும். ஒரு பிரதேசச் சபையின் எல்லைக்குள் அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேசச் சபைகளின் எல்லைக்குள் மேற்கொள்ளப்படும் ஒரு மிகப் பெரிய குடியேற்றத் திட்டத்துக்கென மத்திய அரசாங்கம் பல லட்சக் கணக்கான ரூபாய்களை செலவு செய்யுமானால், அது, அப்பிரதேசச் சபைகளுடன் செய்துகொள்ளும் ஒரு ஏற்பாட்டின் மீது, குடியேற்றப்படுபவர்களுள் ஒரு நியாயமான தொகையினரைத் தெரிவு செய்ய பிரதேசச் சபைகளை அனுமதிக்கும் அதே நேரத்தில், சன நெருக்கடி அதிகமாகவுள்ள பிரதேசங்களிலிருந்து எஞ்சிய காணித் துண்டுகளுக்குத் தகுதிவாய்ந்த குடியேற்றக்காரர்களைத் தெரிவு செய்ய வேண்டிய அவசியமும் அதற்கேற்படும். மேலும் பிரதேசச் சபைகளின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பல சிறிய குடியேற்றத் திட்டங்களும் கிராமவிஸ்தரிப்புத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும். இவை அவ்வப்பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கென ஒதுக்கப்படும். எனவே சிங்கள மக்கள் தாங்கள் சிங்களவர்களாக இருக்கும் காரணத்தால் வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மேற்கொள்ளப்படும் குடியேற்றத் திட்டங்களில் குடியேறும் சந்தர்ப்பம் தங்களுக்குக் கிடைக்காதுபோகும் என்று அஞ்ச வேண்டியதில்லை என்பதும், வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் உள்ள குடியேற்றத் திட்டங்களில், தங்கள் மக்களின் நல்வுரிமையைப் பாதிக்கும் விதமாக நியாயமற்ற முறையில் சிங்களர் குடியேற்றப்படுவார்களென்று தமிழர் அஞ்ச வேண்டியதில்லை என்பதும் இதிலிருந்து தெரியவரும். கல்லோயாச் சபையினரால் நிர்வகிக்கப்படும் பிரதேசம் ஒரு ஒதுக்கப்பட்ட பிரதேசமென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. குடியேற்றத் திட்டங்களில், அவ்வத்திட்டம் அமைந்துள்ள மாவட்டத்தில் வசிக்கும் மக்களுக்கே முதன்மை வழங்குவதென்ற முந்திய அரசாங்கத்தின் கொள்கையைப் போன்றதே இவ்வரசாங்கத்தின் கொள்கையும் என்பதும் குறித்துக்கொள்ளப்படல் வேண்டும். பிரதேசச் சபைகளால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், மத்திய அரசாங்கத்தின் திட்டத்துடனும், அமைப்புத் திட்டமிடும் சபையின் திட்டத்துடனும் மோதிக்கொள்ளும் தன்மையற்றதாக இருத்தல் வேண்டுமென்பதையும் கடைசியாகக் குறித்துக்கொள்ளவேண்டும்.

தமிழரசுக் கட்சியுடன் நான் எதற்காகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேன் என்பதையும் விளக்கிக்கூற விரும்புகிறேன். பல்வேறு குறைகளை முன்னிட்டுத் தமிழரசுக் கட்சி இம்மாதத்தில் ஒரு சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்ததென்பதும் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலானோரின் உள்ளங்களில் தங்களுக்குப் பெரும் தீங்கு விளைக்கப்பட்டுவிட்டதென்ற உணர்ச்சி இருந்துவந்ததென்பதும் பொதுவாக எல்லோரும் அறிந்த விஷயமாகும். இந்தச்சத்தியாக்கிரக இயக்கம் அகிம்சா முறையில் நடாத்தப்படுமென்று கூறப்பட்ட போதிலும், அதன் ஆரம்பத்திலேயே பலாத்காரச் செயல்கள் தாண்டவமாடத் தொடங்கியிருக்கும் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை.

குழப்பம் மூண்டால் அது வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் மாத்திரம் நின்றுவிடாது. அது இலங்கை முழுவதுமே பரவியிருக்கும். இது ஒருவேளை எட்டு லட்சம் தமிழ்த் தொழிலாளர் தங்கியுள்ள மலைநாட்டுப் பிரதேசங்களில் பாரதூரமான விளைவை ஏற்படுத்தியிருக்கும். பொதுவாக நாடெங்கும் குழப்பநிலை யேற்பட்டு அதனால் எல்லாச் சமூகத்தையும் சேர்ந்த பல ஆயிரக் கணக்கான மக்கள் பெருங் கஷ்டத்துக்குள்ளாகியிருப்பர், காயமடைந்திருப்பர், இறந்துமிருப்பர். இது தவிர இந்நாட்டின் முன்னேற்றம் மேலும் பல வருடங்களுக்குத் தடைப்பட்டிருக்கும். அநேகமாக, பல தலைமுறைகளுக்கு நட்புணர்ச்சியை ஏற்படுத்த முடியாத அளவுக்குப் பெரும்பான்மைச் சமூகங்களிடையே வகுப்புத் துவேஷங்கள் வளர்ந்திருக்கும். உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பொருளாதாரப் பிரச்சினைகள், குறிப்பாக, அதிகரித்துக் கொண்டேயிருக்கும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்குப் பதிலாக பன்மடங்கு அதிகரித்திருக்கும். இத்தகைய சூழ் நிலையில், தேசத்திற்கு ஏற்படவிருக்கும் இவ்வபாயத்தைத் தவிர்க்க கௌரவமானதும், நியாயமானதுமான சகல நடவடிக்கைகளையும் எடுக்க பொறுப்பு வாய்ந்த எந்த அரசாங்கமும் தயாராயிருந்திருக்கும். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இப்பிரச்சினை சம்பந்தமாக என்னோடு பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக ஒருமாதகாலத்துக்கு முன் என்னிடம் கூறப்பட்டபோது, அப்படிப் பேச்சுவார்த்தை நடத்துவதை பெரிதும் விரும்புகிறேன் எனத் தெரிவித்தேன். எங்களின் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்திலேயே, இருமுக்கிய கொள்கைகளையும் பாதிக்காத முறையிலே நான் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகத் தெளிவுபடுத்தினேன். சமஷ்டி இராஜ்யத்தைப் பற்றியோ, பிரதேச சுய ஆட்சி பற்றியோ அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த என்றால் முடியாது என்று கூறிவிட்டேன். அத்துடன் இந்நாட்டின் அரசாங்க மொழி சிங்களம் மாத்திரம் என்ற நிலையைப் பாதிக்கும் எவ்விஷயத்தைக் குறித்தும் நான் பேச்சுவார்த்தை நடாத்தத் தயாராயிருக்கவில்லை. பின்னர், பேச்சுவார்த்தைகள் இக் கொள்கைகளைப் பாதிக்காத சூழ்நிலையில் நடத்தப்பட்டன. இந்த நிலைக்கிணங்க பிரதேசச் சபைகளைப்பற்றியும், மொழிப் பிரச்சினையைப் பற்றியும் எடுத்துக்கொண்ட முடிவுகளை மேலே விளக்கியிருக்கிறேன். கூட்டறிக்கையில் கொள்கைகள் மாத்திரமே தரப்பட்டிருக்கின்றன. அவற்றை அமுல் நடத்துவதற்கு அவசியமான மசோதாக்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமுன் பல்வேறு விஷயங்களைப்பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும். நான் தமிழரசுக்கட்சி தலைவர்களுக்கு எடுத்துக்

காட்டியதுபோல் நம் நாடு இன்று இரண்டு பாதைகள் சந்திக்கும் சந்தி போன்ற சிக்கலான சூழ்நிலையிலிருக்கின்றது. இந்நாட்டு மக்களுக்கு சுபீட்சத்தையும், சந்தோஷத்தையும் அளிப்பதற்கான கூடுதலான நட்புறவு, ஒத்துழைப்பு ஆதியனவற்றிற்கும் நம் பலதரப்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளையும், இதர பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பதற்கும் ஒரு பாதை இட்டுச் செல்லும். மற்றப் பாதை நம்மெல்லோருக்கும் சொல்லொணுக் கஷ்டத்தையும் துன்பத்தையும் கொண்டுவரும். அவர்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க முடியாதபோதிலும், எனது அரசாங்கத்தின் கொள்கைகளுக் கிணங்க அவர்களின் பயத்தையும் சந்தேகத்தையும் நீக்கத்தக்க நியாயமான எதையும் செய்யத் தயாராயிருப்பதாக நான் அவர்க ளிடம் கூறினேன்.

சரியான பாதையில் அடியெடுத்து வைத்திருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நாம் செய்து கொண்ட முடிவுகள், சம்பந்தப் பட்ட எல்லோருக்கும் பெருமையளிப்பதாக விருப்பதோடு மனிதப் பண்புக்கும் நற்சிந்தனைக்கும் விவேகத்துக்கும் ஏற்பட்ட வெற்றி யென்றே நான் கருதுகிறேன். தங்களுடைய சொந்த ஆசைகள் பூர்த்தியடையாமல் ஏமாற்றமடைந்த சுயநலவாதிகளும், மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களும் எச்சந்தர்ப்பத்தையும் உபயோகித்து அர்சாங்கம் எதைச் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும்சரி, மக்க ளுக்கு எத்தகைய கேடு சூழ்ந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாது, மக்களிடம் அதைத் திரித்துக் கூறி அதன்மூலமாகத் தங்களுக்கு நன்மை ஏற்படுத்திக்கொள்ள முயலுவோரும் இரு பக்கத்திலும் இருக்கின்றுர்கள்.

சில தமிழர்கள் எனக்கும் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுக்கு மிடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் தமிழர்களுக்கு முற்றிலும் துரோகம் இழைத்துவிட்டதெனக் கூறுவது விசித்திரமாயிருக்கிறது. உதாரண மாக, அரசாங்கமும், தமிழரசுக் கட்சியும் விடுத்த கூட்டறிக்கை வெளி வந்ததும், தமிழ்ச் சமூகம் மயக்கமுற்றதோடு சாஷ்டாங்க மாக விழுந்து விட்டது என்று திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறு கிருர். அடுத்த பக்கத்தில் நான் சிங்களருக்கு துரோகம் இழைத்துவிட்டதாகச் சில சிங்களர் கூறுகின்றனர். திரு. டட்லி சேனநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியாகிய தனது கட்சிக்கு அண்மையில்விடுத்த அறிக்கையில் இவ்விதம் கூறுகிருர். அவரது அறிக்கையைப் பற்றி நான் இங்கு விரிவாக ஆராய விரும்பவில்லை. அவருடைய பல குறிப்புகளுக்கு நான் மேலே பதிலளித்துவிட்டேன். அவருக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் பிறகு அவசியமானுல் நான் விடையிறுப்பேன். அவர் சமூகங்களிடையே வெறுப்பு மனப் பான்மை யில்லாத ஐக்கிய இலங்கையே தமக்குகந்த இலட்சியம் எனக் கூறுகிருர் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இதே இலட்சியத்தைத்தான் சிங்கள மக்களின் அடிப்படை உரிமை களை இழக்காது, அதே நேரத்தில் தமிழ்ப் பிரசைகள் தங்களின் தன்மதிப்பை இழக்காது நண்பர்களாகவும் நமது சகோதரப் பிரசைகளாகவும் வாழக்கூடிய முறையில் இவ்வொப்பந்தத்தின் மூலமாக அடைந்திருக்கிறேன். ஐக்கிய தேசியக் கட்சி இதுவரை மொழிப் பிரச்சினை அல்லது இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க என்ன பரிகாரம் வைத்திருக்கின்றதென்பதை விளக்கவில்லை. இந்தியப் பிரச்சினையைத் தீர்க்க முயன்று அவர்கள் அதைச் சிக்க லாக்கியதை நாம் அறிவோம். இந்த நிலையில் அவர்கள் கொள்கை யற்ற சந்தர்ப்ப வாதிகளென யாரையும் குற்றஞ்சாட்ட முடியுமா? பொது நலத்தைக் கவனியாது அவர்களின் சொந்த நன்மையைக் கருத்திற் கொண்டு எந்தச் சூழ்நிலையையும் தங்களுக்குச் சாதக மாக்கிக்கொள்ள முயலுகின்றனர். இரு பக்கத்திலுமுள்ள தீவிர வாதிகளிற் சிலர் இவ் வொப்பந்தத்தைக் கண்டிப்பதே, இது மகோன்னத மத்திய வழியைக் கடைப்பிடித்திருக்கின்றதெனக் கூறப் போதிய சான்ருகும். நான் மேலே விளக்கியவாறே தமிழரசுக் கட்சியுடன் பிரதேசச் சபையைப் பற்றியும், மொழிப் பிரச்சினை யைப் பற்றியும் பேச்சு வார்த்தை நடத்தினேன் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். இந்தியப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில், இவ்விஷயம் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தொன்றல்ல வென்றும், காலக் கிரமத்தில் அதற்குரியவர் களோடு பேச்சு வார்த்தை நடத்துவேனெனவும் கூறினேன்.

ஒரே அம்சத்தை மாத்திரம் பிடித்துப் பார்க்காமல் நான் மேலே காட்டியதுபோல் விஷயம் முழுவதையும் அவதானித்துவிட்டு, தற்போதைய சூழ்நிலையில் எல்லாருடைய நலன்களையும் பாது காக்கக்கூடிய சிறந்த வழி இதுவல்லவா என்பதைச் சிந்தித்துப் பார்க்குமாறு சகல சமூகங்களையும் சேர்ந்த பொது மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய பேச்சுவார்த்தைகளின்போது ஒரு பக்கமோ, மற்றப்பக்கமோ தங்கள் மனதிலுள்ளதில் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியைப் பெறமுடியாது. இருதரப்பிலும் ஓரளவு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை நிலவுதல் அவசியமாகும். என்னைப் பொறுத்தவரையில் அரசாங்கம் தனது அடிப்படைக் கொள்கை ஒன்றையும் இழக்காது இந்த இலட்சியத்தை நான் அடைந்துவிட்டேன் என்று கூற விரும்புகின்றேன். ஆகவே தந்திரம் மிக்க சந்தர்ப்பவாதிகளின் சூழ்ச்சியினுல் மிரண்டு தவருன வழியில் செல்ல வேண்டாமெனப் பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். மசோதாக்கள் தயாராகியதும் தமிழ் மொழியின் உபயோகத்தைப் பற்றியும், பிரதேசச் சபைகளைப் பற்றியும் அவர்கள் விரிவாகத் தெரிந்துகொள்ளமுடியும்.

### இணைப்பு அ

நாள்தோறும் வளர்ச்சியடைந்து, நாட்டில் நெருக்கடியை ஏற் படுத்தி வந்த அபிப்பிராய பேதங்களுக்கு ஒரு முடிவுகாணும் முயற்சியில் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதம மந்திரியுடன் பலதடவைகளாகப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடாத்தினுர் கள்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பக் கட்டத்தில் தமிழரசுக் கட்சியினரின் சில கோரிக்கைகளுக்கு இணங்குவது பிரதம மந்திரிக்கு இயலாதென்பது வெளிப்படையாயிற்று.

அரசாங்கத்தின் கொள்கைக்கமைவாக, சமஷ்டி அரசியலமைப் பொன்றை நிறுவுதல் பற்றியோ பிரதேச சுயாட்சி அமைத்தல் பற்றியோ அரசாங்கமொழிச் சட்டத்தை ரத்துச் செய்தற்கான எந்த நடவடிக்கையையும் பற்றியோ தாம் பேச்சுவார்த்தை நடத்த முடியாத நிலையிலிருப்பதாகப் பிரதம மந்திரி கூறினுர். அப்பொழுது, தமிழரசுக் கட்சி தனது அடிப்படைக் கொள்கைகளிலும் நோக்கங் களிலும் எதையாவது கைவிடாமல் அல்லது ஒப்படைக்காமல் ஒரு முடிவு காணுதல் சாத்தியமா என்பதை ஆராயும் பிரச்னை எழுந்தது.

இந்தக் கட்டத்தில், இது சம்பந்தமாக தமிழரசுக் கட்சி மனதிற் கொண்டுள்ள சில விஷயங்களை அரசாங்கத்தின் பிரதேச சபைகள் பற்றிய நகல் மசோதாவின் கீழ் நியாயமாக ஏற்றுக் கொள்ளுதற்கு வசதியுண்டா என்பதைப் பரிசீலனை செய்யுமாறு பிரதம மந்திரி ஆலோசனை கூறினுர்.

இவ்விதமாக ஏற்பட்ட உடன்படிக்கைகள் ஒரு தனிப்பட்ட சாசனத்தில் இடம்பெற்றுள்ளன.

மொழி விஷயத்தில் தமிழரசுக் கட்சி சம அந்தஸ்துக்கான தனது கொள்கையை மீண்டும் வலியுறுத்தியது. ஆனால் இவ்விஷயத்தில் பிரதம மந்திரிக்கு ஏற்பட்டிருந்த நிலையை முன்னிட்டு, ஒரு திருத்தத்தைச் செய்வதன் மூலம் அவர்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்கள். தமிழ் ஒரு தேசிய மொழியாக மதிக்கப்பட வேண்டியதும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக வேலை தமிழில் நடைபெற வேண்டியதும் தமக்கு முக்கியமான தென அவர்கள் சுட்டிக் காட்டினர்கள்.

தான் ஏற்கனவே கூறியபடி, அரசாங்க மொழிச் சட்டத்தை இரத்துச் செய்யக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு தன்னல் முடியாதென பிரதம மந்திரி கூறினர்.

### தமிழின் உபயோகம்

பேச்சுவார்த்தைகளின் பின்னர், தமிழ் இலங்கையில் ஒரு தேசிய சிறுபான்மையினரின் மொழி என்று சட்டத்தில் இடம் பெற வேண்டுமென்றும், பிரதம மந்திரியால் வெளிப்படுத்தப்பட்ட நான்கு அம்சத் திட்டத்தில், அரசாங்கமொழிச் சட்டத்திற்கு முரண்படாமல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழி தமிழ் என்பதும், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசாத சிறுபான்மையினருக்கு அவசியமான எந்த ஏற்பாடும் செய்யப்படவேண்டுமென்பதும் அடங்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்திய வம்சாவழியினரான மக்களுக்கு இலங்கைப் பிரசாவுரிமை வழங்குதல். பிரசாவுரிமைச் சட்டத்தை மாற்றியமைத்தல் என்னும் பிரச்னை சம்பந்தமாக தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களைப் பிரதம மந்திரிக்குத் தெரிவித்துச் சீக்கிரத்தில் இதைத் தீர்க்குமாறு வற்புறுத்தினர்கள்.

இந்தப் பிரச்னை கூடிய சீக்கிரத்தில் ஆலோசனைக் கெடுக்கப்படுமென பிரதம மந்திரி குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானங்களை முன்னிட்டு, தாம் மேற்கொள்ள விருந்த சத்தியாக்கிரகத்தைக் கைவிடப்போவதாகத் தமிழரசுக்கட்சி தெரிவித்தது என அறிக்கை கூறிற்று.

### இணைப்பு ஆ

(அ) பிரதேச சபைப் பகுதிகள் மசோதாவில் உள்ள ஒரு அட்டவணையில் சேர்க்கப்படுவதன் மூலம் மசோதாவிலேயே வரையறுத்து விளக்கப்படும்.

(ஆ) வடக்கு மாகாணம் ஒரு பிரதேசப் பகுதியாகவும், கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேசப் பகுதிகளாகவும் பிரிக்கப்படும்.

(இ) மாகாண எல்லைகளுக்கும் அப்பாற்கூட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேசங்கள் இணைந்து கொள்வதற்கு வசதியளிக்கும் ஏற்பாடு மசோதாவில் சேர்க்கப்படும்; ஒரு பிரதேசத்தைப் பிரிக்கும் விஷயம் பாராளுமன்றத்தினல் அங்கீகரிக்கப்படுதற்கமைவாக இருக்க வேண்டும்; பொது நலம் பற்றிய குறிப்பிட்ட நோக்கங்களுக்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேசங்கள் ஒன்று சேர்ந்து செயலாற்ற அதிகாரமளிக்கும் ஏற்பாடும் மசோதாவில் சேர்க்கப்படும்.

### நேரடித் தேர்தல்கள்

(ஈ) பிரதேச சபை அங்கத்தவர்களை நேரடியாகத் தெரிவு செய்யும் ஏற்பாடும் மசோதாவில் சேர்க்கப்படும். தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்காகத் தேர்தல் தொகுதி நிர்ணயக் கொமிஷன் அல்லது கொமிஷன்களுக்கான ஏற்பாடு மசோதாவில் சேர்க்கப்படும். பிரதேசப் பகுதிகளுக்கு உட்பட்ட மாவட்டங்களின் பிரதிநிதிகளாக வுள்ள பாராளுமன்ற அங்கத்தவர்கள் பிரதேச சபைகளின் தலைவர்களாகக் கடமையாற்றும் தகுதி பற்றிப் பரிசிலனை செய்யப்படும். மாகாண அதிபர்கள் (அரசாங்க ஏஜண்டுகள்) பிரதேச கொமிஷனர்களாகக் கடமையாற்றுவது பற்றிய விஷயம் ஆலோசிக்கப்படும். பெரிய பட்டினங்கள், கேந்திரப் பட்டினங்கள், மாநகர சபைகள் (முனிசிபாலிட்டிகள்) ஆகியவைகளை மேற்பார்வை செய்யும் கடமைகள் பற்றிய விஷயமும் பின்னர் கவனிக்கப்படும்.

### விசேஷ அதிகாரங்கள்

(உ) பாராளுமன்றம் அதிகாரங்களை வழங்கி அவற்றைச் சட்டத்தில் வரையறுத்துக் குறிப்பிடும். விவசாயம், கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில்கள், மீன்பிடி, வீடமைப்பு, சமூக சேவைகள், மின்சாரம், தண்ணீர்த் திட்டங்கள், வீதிகள் என்பன உட்பட குறிப்பிட்ட விஷயங்களில் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. வேண்டிய அதிகாரங்களின் வரையறை மசோதாவில் செய்யப்படும்.

### குடியேற்றத் திட்டங்கள்

(ஊ) குடியேற்றத் திட்டங்களின் விஷயத்தில், பிரதேச சபைகளின் அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியேற்றத் திட்டங்களில் காணி பாரதீனப்படுத்தப்பட வேண்டியவர்களைத் தெரிவுசெய்து எடுக்கும் அதிகாரமும், அத்தகைய திட்டங்களில் வேலைக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் அதிகாரமும் பிரதேச சபைகளுக்குரிய அதிகாரங்களுள் அடங்குமென ஒப்புக்கொள்ளப்பட்டது. தற்பொழுது கல்லோயாச் சபையால் நிர்வகிக்கப்படும் பகுதியைப் பொறுத்தமட்டில் இவ்விஷயம் பரிசிலனை செய்யப்படவேண்டும்.

### வரிவிதித்தல், கடன்பெறுதல்

(எ) பிரதேச சபைகள் சம்பந்தமாக தல ஆட்சி மந்திரிக்கு நகல் மசோதாவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், தேவையேற்படுமிடத்து பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் விடப்படும் நோக்கத்துடன் திருத்தியமைக்கப்படும்.

(ஏ) மத்திய அரசாங்கம் பிரதேச சபைகளுக்கு மொத்தமாக நிதி உதவி வழங்கும். எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் நிதி உதவிகள் கணக்கிடப்பட வேண்டுமென்பது பின்னர் பரிசிலனை செய்யப்படும். வரி விதிக்கவும் கடன் வாங்கவும் பிரதேசச் சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

# சுகாதாரமும் கிராம முன்னேற்றமும்

திரு. ச. ஸ்ரீநிவாசன்

சுகாதாரமே வாழ்க்கைக்கு ஆதாரம். சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம் என்று நாடோடியாகச் சொல்லுவார்கள் ஆரோக்கியமான உடம்பு வாழ்க்கையை வெறுப்பின்றி அனுபவிக்க அத்தியாவசியமானது. எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவி தான் அரிது அவ்விதம் அரிதாகக் கிடைத்த மானிடப்பிறவியை முற்றும் பயன்படுத்த நோயற்ற, திடகாத்திரமான உடம்பு அவசியம். இவ்வுலகிலேயே மோட்சம், நரகம் என்ற இரண்டையும் அனுபவிக்கலாம். எதை அனுபவிக்கவேண்டும், என்று தெரிந்து அனுபவிப்பது தனி மனிதனைப் பொறுத்தது. உலகம் மிகப்பரந்தது. பல நாடுகள் நிறைந்தது. ஒரு நாட்டில், ஒரு ஊரில் வாழவழியில்லா விட்டால் இன்னொரு நாட்டில், இன்னொரு ஊரில் வாழலாம். நாம் வாழும் உலகம் இயற்கை வனப்புகள் நிறைந்தது. வானளாவும் மலைகள் தேன் பொழியும் மலர்ச் சோலைகள், ஆறுகள் கனிமரங்கள், வண்ணமலர்கள் போன்ற கண்கவர் காட்சிகள் நிறைந்தது. இவை கள் மனிதன் பெற்ற அரும்பேறுகள்.

ஆதி மனிதன் பாதிமனிதனுகவே வாழ்ந்தான். உண்ண உணவும், உடுக்க உடையும் உறங்கக் குகையும் தேடுவதிலேயே அவன் வாழ் நாளைக்கழித்து வந்தான். இம்முயற்சியில் முழு நேரமும் போக்கிய அவன் எண்ணங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. இறைவன் படைப்பில் இணையற்ற மனித மூளையை அவன் முற்றும் பயன்படுத்த முடிய வில்லை. காலம் செல்லச் செல்ல அவன் மூளைக்கு வேலைகொடுத்தான். உணவும், உடையும் படுத்துறங்க மேலே கூரையும் கிடைத்த பின் எண்ணத்தேரைச் செலுத்த அவனுக்கு அவகாசம் கிடைத்தது. கடலைக்கடக்கக் கப்பல்கள், விண்ணைத் தாண்ட விமானங்கள், கண்ணுக்கெட்டாத தூரத்தில் உள்ள விண்மீன்களை நோக்கத் தூர திருட்டிக் கண்ணுடிகள், இருளைத் துரத்திப் பல பொருளைப் பெருக்க மின்சாரம், வாழ்க்கையைச் சொகுசாக்கப் பல யந்திரங் கள், கடைசியில் தன்னையே அழிக்க அணுக்குண்டு இவ்விதம் அதிசயிக்கத்தக்க விஞ்ஞான முன்னேற்றத்துக்கெல்லாம் காரணம் மனிதனுக்குக் கிடைத்த அருஞ் செல்வமாகிய உடம்பு. இவ்வுடம்பு நல்ல நிலையில் நோயற்று இருந்தால்தான் எவ்வித முன்னேற்றமும் சாத்தியமாகும். "உடம்பார் அழியில் உயிராய் அழிவர்" என்றார் திருமூலர். தவயோகிகளுக்கும் சுகவாழ்வு அவசியம். ஆதலால் வாழ்க்கையை முற்றும் வாழ, பூரணமாக வாழ, இயற்கை இன்பங் களை இடைவிடாது அனுபவிக்க, ஏன் இறுதியில் இறைவனை அடையக்கூட சுகவாழ்வு வேண்டும். சாகும்வரை சுகதேகியாக வாழ்ந்து மரணத்தை அடைந்தவன் எத்தனங்களையும் படைத்தவர் களிலும் பாக்கியசாலி.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, அந்நாட்டு மக்கள் நல் வாழ்விற்கு, அந்நாட்டிலுள்ள பல்வேறு கிராமத்தவர்கள் சுபிட்சத் திற்கு ஆதாரமாயுள்ளது, அத்திவாரமாயுள்ளது, ஆணிவேரா யுள்ளது அந்நாட்டுமக்களின் சுகவாழ்வே. எந்தப் பிரச்சினைகள் மக்களை வாட்டி வருத்தினுலும் ஒரு கொடிய தொற்றுநோய் பரவி விட்டால் எல்லா மக்களும் மறுபிரச்சினைகளை மறந்து ஒரே முகமாய் அத்தொற்றுநோய் பரவுவதைத்தடுக்க எவ்வளவு முயற்சி செய்கிறார்கள். எங்கள் நாடுகளிலே காசம் முதலிய கொடிய தொற்றுநோய்கள் மக்கள் உணராமலே பரவி வாழ்க்கையைப் பாழாக்கி உயிருடன் கொலை செய்து வருவதை நாம் தடுக்க உடனே முயற்சிக்க வேண்டும்.

ஆரோக்கியமான உடம்பில்தான் ஆரோக்கியமான உள்ளம் இருக்க முடியும். இந்த உண்மையை மக்கள் அறியாமலில்லை சுலப மாய் மறந்து விடுகிறார்கள். அதுதான் ஆபத்து. மறக்கமுடியாத விஷயம். மறந்தால் அதன்விளைவு விரும்பத்தக்கதாயிராது. கிராம மக்கள், விவசாயத்திலோ கைப்பணிகளிலோ, கலைவளர்ச்சியிலோ, ஆத்மஞானத்திலோ, ஈடுபடுமுன் சுகாதாரத்தைப்பேணி உடம்பை வளர்த்தல் வேண்டும். உடம்பை வருத்துதல் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாகக் கொலை செய்துவரும் குடி, புகைத்தல் முதலிய துர்ப் பழக்கங்களை அறவே நீக்கவேண்டும். வாழப்பிறந்த மனிதன் தன் வாழ்க்கையைப் பாழாக்கி நாளெல்லாம் துக்கமும் துன்பமும் நிறைந்த கவலைக்கடலாக, வரண்ட பாலைவனமாக ஆக்கிக்கொள்ளா மல் பலவளங்களும் நிறைந்த பூம்பொழிலாக்கிக் குளிர்தருவாய்த் தருநிழலாய் நிழல்கனிந்த கனியாக வளம்பெறச்செய்தல் வேண்டும். இவ்வுண்மைகளை நினைவூட்டி விளக்க இவைபோன்ற சுகாதாரவாரங்கள் பெரிதும் பயன்படும்.

கோப்பாய்த் தொகுதி
சுகாதார வார மலர்

# இம்மானிடர்

## "மஹாகவி"

ஓடுகின் றார் ; வியர்த் துழைக்கின் றார் ; மனை
 தேடுகின் றார் ; ஒரு தெரிவை யாளினைக்
கூடுகின் றார் ; இளங் குதலைத் தேன் மொழிக்
 கீடு முண் டோ இகத் தென இ யம்பு வார் !

ஆக இவ் வளவினுள் அமைந்து வாழ்வினிற்
 தாகமும் பசியுமே தணித்துத் தியிடை
வேகும் இம் மானிடர் வெந்து தம் வழிப்
 போகு முன் நல்லதும் புரிகின் றார்களோ ?

எடுத்திடும் சூழ்ச்சியில் ஏனை யோர்களை
 முடிப்பதல் லாற் பிற முயன் றுள் ளார்களா ?
அடுத்தவர் துடிக்கையில் அருகிற் சென்றுகை
 கொடுப்பதில் மகிழ்ச்சியும் கொண்டுள் ளார்களா ?

கொழுத்த தம் உடலினைக் கொண்டு வீதியில்
 இழுத்திடும் மனிதனுக் கிறுக்கும் கூலியை
முழுக்கவும் தரவும், அம் முகத்தில் நன்றியை
 அழைக் கவு மே அவர் அவாவி னார்களா !

கருத்தை முற் றும் சுய காரி யங்களில்
 இருத்திய படி விரைந் தேகுங் கால், நகர்
மருத்துவச் சாலை யின் வழிவி னவிய
 ஒருத்தனுக் கே விடை உரைத்துள் ளார்களா ?

ஆறுகின் றார்களா அன்பு காட்டவும் ?
 கூறுகின் றார்களா குளிர்ந்த சொற்கள் ? முன்
னேறு கின் றார்களாம்—ஆண்டு நூறினுள்
 ஈறு கண் டே விழுந் திறக்கின் றார்களே !

# பார்சல் விநியோகத்தில் தாமதம்

## இடவசதிக் குறைவு பற்றி தபால் அமைச்சரின் விளக்கம்

பார்சல்கள் பட்டுவாடாச்செய்யப்படுவதில் தாமதம் ஏற்படுவது பற்றிக் கவனிக்கத் தபால், வானொலி, தகவல் மந்திரி அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் தபால் தெரிவு நிலையத்திற்கு விஜயம் செய்தார். அங்கு அவர் கண்ட முக்கிய குறைபாடு போதிய இடவசதியின்மையேயாகும். வேலையை விரைவாகவும் ஒழுங்காகவும் செய்ய இது பெரும் குந்தகமாக இருப்பதை அவர் உணர்ந்தார். இக் குறைபாடு இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினையன்று. 1954ம் ஆண்டு தொடக்கம் தபால் நிலைக் கட்டடங்களை இலங்கை பூராவும் விஸ்தரிக்கவேண்டுமென ஆலோசனை கூறப்பட்டது. தபால் சேவைகள் தினசரி அதிகப்பட்டுவருவதால், அதற்கேற்ப கட்டட வசதிகள் விரிவுபெற வேண்டுமென்றும் இவ்விஷயத்தை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டப்பட்டது. திறமையான சேவையை நடாத்துவதற்கு கொழும்பில் மட்டும் 450,000 சதுர அடி நிலம்தேவையாகும். ஆனால் மொத்தம் 230,000 அடி நிலமே தற்பொழுது தபாற் பகுதிக்கு இருந்து வருகிறது. வெளியூர்களிலோ நிலைமை இன்னும் மோசம். இந்த நிலைமை பரிகரிக்கப்படாவிட்டால் தபாற் சேவையே குழம்பிபோய் விடலாம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

நிதியின்மையினாலும் இதர காரணங்களினாலும் இச்சிபார்சு சம்பந்தமாகத் துரதிஷ்டவசமாக நடவடிக்கையே எடுத்துக் கொள்ளப்படவில்லை. தற்போதைய தேவைகளுக்கு இரண்டு மடங்குக்கதிகமான இடவசதி இருத்தல் வேண்டு மென்பதை ஒரு நியாயமான கோரிக்கை என்று கூறக்கூடிய விதத்தில் கடந்த ஐந்து வருடகாலத்தில் இங்கு செய்யப்படும் வேலை தொடர்ந் தேர்ச்சியாக அதிகரித்து வந்தபோதிலும் இன்றைய தினத்திலும் கூட 250,000 சதுர அடிக்குக் குறைவான இடவசதியே கொழும்பில் இருக்கிறது. மேலும் சேமாபிவிருத்தித் திட்டங்களிலும் வேலை செய்வதற்கு ஒழுங்கான நிலைமைகளை ஏற்படுத்துவதிலும் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளப்படுவதாலும், தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளை வற்புறுத்துவதினாலும் இப்பகுதியை நிர்வகிப்பதிலுள்ள கஷ்டங்கள் குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரித்திருக்கின்றன.

தற்போதைய அரசாங்கம் அதிகாரத்திலமர்ந்ததற்குப் பின் கீழ்க்காணும் கட்டிடங்களுக்குத் தேவையான மூலாதாரப் பணவசதிகளைச் செய்திருக்கிறது :—

| | விஸ்தீரணம் சதுர அடி |
|---|---|
| (1) தபாற் கந்தோர் சேமிப்பு வங்கிக்கட்டிடம் | 81,000 |
| (2) மத்திய தந்திக் கந்தோர் கட்டிடம் ... | 82,000 |
| (3) வெளிநாட்டு தந்திப்போக்கு வரத்துச் சேவைக் கட்டிடம் ... ... ... | 42,000 |
| (4) தபால் இனம் வகுத்தற் கந்தோர் கட்டிடம் | 96,000 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கையைக் கொண்டு இப் பிரச்னையைத் தீர்க்க நீண்டகாலம் செல்லும். எனவே இடைக் காலத்தில் மேலதிகமான இடவசதியைச் செய்து கொடுக்கும் பிரச்னையையிட்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. நேரடியாகவும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்கள் மூலமாகவும் பல்வேறு ஸ்தாபனங்களுடனும் தனிப்பட்டவர்களுடனும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. ஆனால் இதனால் எவ்வித நன்மையும் பிறக்கவில்லை.

சதுர வடிவுள்ள பெரிய இடவசதி தேவைப் படுவதாற்றான் கட்டிடங்களை வாடகைக்கமர்த்திக் கொள்வதில் கஷ்டமேற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கட்டிடத்தின் பெரும் பாகம் திறந்த மண்டபங்களாக இருத்தல் வேண்டும். காலிசெய்யப்பட விருக்கும் பிரிட்டிஷ் கடற்படையினதும் விமானப் படையினதும் கட்டிடங்களை உபயோகப்படுத்திக்கொள்ள முடியுமா என்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. இது தவிர, பாடசாலைகள் போன்ற அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இதர எந்த விதமான இடவசதியைப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுவருகிறது.

## கொழும்பிலுள்ள பிரதான பாற்பண்ணை

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது. இந் நீர்த்தாங்கியைத் தவிரக் கொழும்பு முனிசிபல் குழாய்த் திட்டத்திலிருந்து பெறப்படும் நீரைத் தேக்குதற்கு 10,000 கலன் கொள்ளும் இன்னோர் நீர்த்தாங்கியும் இங்குளது.

### ஆய்கூடம்

பாற்பண்ணைக் கட்டடத்தில் பாற்பரிசோதனை ஆய்கூடம் ஒன்றுளது. இங்கு பாலில் கிருமியிருக்கிறதா என்பதும் அதன் தாமும் ஆராயப்படும். பாலில் தண்ணீர் கலந்திருக்கிறதா என்பதையும் இங்கு கண்டுபிடித்துவிடுவார்கள். யாராவது தண்ணீர் கலந்த பாலைப் பாற்சபைக்குக் கொடுத்தால், அவர்கள் பாடு திண்டாட்டம்தான்.

பாற்பண்ணை வாகனங்களைப் பழுது பார்த்தற்கும், மசகிடுவதற்கும் இங்கு ஒரு மோட்டார் வேலைத்தளமும் உள்ளது. யந்திரம் பழுதுபார்த்தற்கும், தச்சு வேலைகள் செய்தற்கும், மின்சார வேலைகளுக்கும் வெவ்வேறு வேலைத்தளங்கள் உள்ளன. பாலை விநியோகிப்பவர்களின் சைக்கிள் வண்டிகளைப் பழுது பார்த்தற்கும் இங்கோர் தொழிற்சாலை இருக்கிறது.

வாகனங்கள் தங்குதற்கு 20 காராஜ்கள் (வாகனசாலைகள்) இருக்கின்றன. 6,000 சதுர அடி கொண்ட பண்டக சாலை வசதிகளும் உள்ளன. தொழிலாளர்கள் வசிப்பதற்கு 20 வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன. இவற்றில் 8 வீடுகள் அமைக்கப்பட்டுவிட்டன. இவ்வீடுகள் தவிர இதர உத்தியோகத்தர் பலருக்கும் வீடுகள் அமைக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

பாற்பண்ணை அமைக்கப்பட்டுள்ள இந்நிலத்தைப் பாற்சபையினர் முதலில் எடுத்தபோது, அது புல்லடர்ந்த காடாய்க் கிடந்தது. ஆனால் இப்போது வீதிகளும், கட்டடங்களும் அமைக்கப்பட்டு கவினுடன் காட்சியளிக்கிறது. தினசரி 80,000 கலன் நீர் தொழிற்சாலையிலிருந்து கழிவு நீராக வெளிப்படுகிறது. இதனை உபயோகித்து விவசாயம் செய்ய ஓர் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

### பொழுது போக்கு வசதிகள்

ஊழியர்களுக்கு விளையாட்டு வசதிகளும், பொழுது போக்கு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு டெனிஸ் மைதானமும், கைப்பந்தாட்ட மைதானமும் இவற்றில் முக்கியமானவை. சிற்றுண்டிச் சாலை வசதிகளும் உள. இங்குள்ள தொழிலாளர் சிற்றுண்டிச் சாலை மிகவும் வசதியுடையது. 900 சதுர அடி விஸ்தீரணம் கொண்டது. இச் சிற்றுண்டிச் சாலையில் ஒவ்வொருவரும் தாமே தமக்குரிய உணவைப் பரிமாறிக் கொள்கின்றனர்.

ஊழியர்களுக்கு இளைப்பாறும் அறைகளும், மலகூட வசதிகள், குளிக்கும் அறைகள் முதலிய வசதிகளும் செய்துதரப் பட்டுள்ளது. பாற்பண்ணையில் வேலை செய்வோருக்கு பாற்சபைச் செலவில் உடைகள் தருவதற்கும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

# வட இலங்கையில் ஒரு வாரம்

அம்பலவாணன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)


அடுத்த நாட்காலை அதாவது ஜூன்மாதம் 2ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலையில் எழுந்தோம். பொலிகண்டியிலுள்ள சீனி உற்பத்திச் சாலையைப் பார்க்கச் செல்வதற்காக ஆயத்தஞ் செய்தோம். ஆனால் ஆறேழுபேர் ஒரு ஜீப்காரில் எப்படிப் பிரயாணஞ் செய்வது என்று யோசித்துக் கொண்டு காலை உணவு அருந்திக் கொண்டிருக்கும்போதே திரு. சிவப்பிரகாசம் வந்து சேர்ந்தார். அவரைத் தொடர்ந்து வேறொருவர் வந்து சோமநாதருடன் பேசினார். "நீங்கள் என்னுடைய காரிலே வரலாம். எல்லாரும் ஒரு ஜீப்பில் போகமுடியாது" என்றார். அவர்தான் வடபகுதிக் குடிசைக் கைத்தொழில் அதிகாரி திரு. செல்வரத்னம் என அறிந்தோம். ஆங்கிலத்தை மேனாட்டார் போல மிக அழகாகப் பேசினார். ஆளும் அழகான ஆண்பிள்ளைதான். தமிழிலும் சரளமாக உரையாடினார். சிறிது நேரத்துக்குள் முகம்மதுவும் ஜீப்புடன் வந்து சேர்ந்தார். எல்லாரும் புறப்பட்டு பொலிகண்டி நோக்கிச் சென்றோம். அங்கே போய்ச் சேர்ந்ததும் சீனி உற்பத்தி செய்வதை முதற்படியிலிருந்து படிப்படியாகச் செய்து காட்டுவதற்காக அந்த நிலையத்துடன் சம்பந்தப்பட்ட ஊழியர் எங்களை எதிர்பார்த்திருப்பதைக் கண்டோம். திரு. செல்வரத்தினம் அவர்களும் திரு. நாகலிங்கம் அவர்களும் செயல் முறைகளை விளக்கினார்கள். திரு. நாகலிங்கம் தந்துள்ள குறிப்புகளைக்கொண்டு சீனி உற்பத்தியை இனிக் கவனிப்போம்.

தமிழர்கட்குப் பனை ஒரு கற்பகதரு. ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரயோசனங்களை இந்தப் பனைமரத்திலிருந்து பெறமுடியும். ஆனால் மேனாட்டு நாகரீகம், பனம் பண்டங்களை உபயோகிப்பது அநாகரீகம் எனத் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியதால், தமிழர் பனையின் உபயோகங்களை மறந்து, சுகவாழ்வையும் ஓரளவுக்கு இழந்தனர்.

### பனையிலிருந்து பதநீர் இறக்குதல்


யாழ்ப்பாணத்திலிருந்து 18 மைல் தூரத்தில் உள்ள வல்வெட்டித் துறையென்னும் துறைமுகப்பட்டினத்தைச் சேர்ந்த கிராமந்தான் பொலிகண்டி என்னும் ஊர். இந்த இடத்தில் கிராமாபிவிருத்தி கைத்தொழிற் பகுதி கள்ளிலிருந்து சீனி செய்யும் முறையைப் பரீட்சார்த்தமாகச் செய்யத் தொடங்கி அமோக வெற்றியீட்டி விட்டது. பனங்கள்ளிலிருந்து சீனி தயாரிக்கப்படுவதை எவரும் போய்ப்பார்க்கலாம். இலங்கைச் சரித்திரத்தில் முக்கிய இடம் பெற வேண்டிய சம்பவம் இது என்றுகூடச் சொல்லலாம். இனிமேல் சீனிக்குப் பேர்போன இடம் பொலிகண்டி என்ற பெயரும் விரைவில் ஏற்பட்டு விடும். இந்தக் குடிசைக் கைத்தொழில் நன்கு அபிவிருத்தியடைவதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. சீனி உற்பத்தி செய்யும் தொழில் இப்பொழுது பொலிகண்டியிலுள்ள அரசினர் பனம் பொருள் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறுகின்றது.

வடமாகாணத்தில் ஒரு பகுதியிற் காணப்படும் வடலித்தோட்டம்.



தொழிலாளி க. மாணிக்கம் பதநீரை மரத்திலிருந்து கொண்டிறங்குகிறார்.





" கிறிஸ்ரலைசர் " எனும் இயந்திரத்தை திரு. த.வேலும்மயிலும் சுற்றுகிறார்.

இப்போதுள்ள கட்டடம் பொலிகண்டி கிராமாபிவிருத்திச் சங்கத்தால் 1956ம் ஆண்டில் 8,000 ரூபா செலவில் அமைக்கப்பட்டது. இதில் குடிசைக் கைத்தொழிற் பகுதி, 2,500 ரூபா நன்கொடையாகக் கொடுத்தது. மேலும் 4,000 ரூபா பெறுமதியான உபகரணங்களையும் கொடுத்துதவியது.

பொலிகண்டி கிராமாபிவிருத்திச் சங்கம் 80 பனைமரங்களை வருடமொன்றுக்கு ஒரு மரத்துக்கு 4 ரூபா வீதப்படி குத்தகையெடுத்துள்ளது. கலன் ஒன்று 30-40 சதம் வீதம் நாள்தோறும் 50 கலன் கள்ளு பொலிகண்டி சீனி உற்பத்தி நிலையத்துக்குக் கொடுக்கின்றது. இந்த 50 கலன் கள்ளிலிருந்து 37 இரு. பழுப்புச் சீனியை இந்த நிலையம் உற்பத்தி செய்கின்றது. 25 இரு. வெள்ளைச் சீனியும் 12 இரு. பழுப்புச் சீனியும் உற்பத்தி செய்யப்பட்டு வெள்ளைச்சீனி இருத்தல் ஒன்று 65 சதவீதமாகவும் பழுப்புச் சீனி 58 சதவீதமாகவும் விற்கப்படுகின்றன.

இது உண்மையில் நல்ல வருவாய்தரக்கூடிய குடிசைத் தொழில் என்பது பொலிகண்டி நிலைய மூலம் புலனாயிற்று. எனவே கிராமாபிவிருத்தி குடிசைத் தொழிற்பகுதி வராத்துப்பளை, திருவடிநிலையம், கருகம்பானை, மந்துவில் என்னும் நான்கிடங்களில் இத்தகைய நிலையங்களை அண்மையில் அமைக்கத் திட்டம் வகுத்துள்ளது.

### பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம்
### பொலிகண்டி

பனை ஓலைகளில் பின்வருவன குடிசைக் கைத்தொழிலாக உற்பத்தி செய்யலாம். வர்ணவேலைகள் :—பாய், பெட்டி, கைப்பைகள், விசிறி, சுழகு, திருகணை, நீற்றுப்பெட்டி, அரிதட்டு, பட்டை, பிளா, ஈர்க்குக்கயிறு, தட்டுவம் (சாப்பிடுதலுக்கு) எழுத்தோலை, செருப்பு—கங்குல் மட்டையிலிருந்து, கைவண்டி, கடகம், மீன்கூடை, உறி, துடைப்பம், கூட்டுமாறு, நெற்கூடை, வெங்காயக்கூடு, தூரிசு (Brush=பிரஷ்) முதலியனவற்றை அபிவிருத்தி செய்யலாம்.


**முதலாம் படிமுறை**

வடலிகள் வளர்ந்து 25 ஆண்டுகளுக்குப்பின்னால் ஆண்பனை பெண் பனைகளிலிருந்து உரிய பருவ காலத்தில் வெளிவரும் பாளைகளைப் பதமாகத் தட்டி கள்ளு என்றும், சுண்ணும்பினை முட்டிக்குட் பூசி அவற்றிலிருந்து இறக்கும் நீரை—பதனீர் அல்லது கருப்பநீரென்றும் சொல்லப்படும். பதனீரிலிருந்து வெண்மையான சீனி, பனங்கட்டி, பனம்கல்லக்காரம் உண்டாக்கலாம்.

**இரண்டாம் படிமுறை**

இவ்விதமாக ஆண்பனை பெண்பனைகளிலிருந்து இறக்கிய பதனீரைப் பொலிகண்டியிலுள்ள அரசாங்கச் சீனி நிலையத்திற்கு கொண்டு வந்ததும் அப்பதனீர் (50 கலன்) காலை 7 மணியளவில்—அவற்றுள் இருக்கும் பருமையான அசடுகளை வடித்து உடனே அடுப்பின் மேல் வைத்திருக்கும்—6 அடி நீளம், 2 அடி அகலம், 10" உயரமாக இருக்கும் பாத்திரத்தில் விடப்படும். பின்பு 40° பாகைக்குச் சூடு ஏற்றி சுப்பர் பொஸ்பேற் என்னும் திராவகத்தைப் பதனீருக்குள் சுண்ணும்பு சற்றே குறையும் வரைக்கும் விட்டு வைக்க வேண்டும். இக்கட்டத்தில் கிராமாபிவிருத்திக் குடிசைக் கைத்தொழில் இலாகா உத்தியோகத்தர்கள், திருவாளர்கள். சு. நாகலிங்கம், வ. மாரிமுத்துவுமாக (போதனாசிரியர்கள் Demonstrators) அப்பதனீரைப் புடம் செய்கின்றார்கள். இதன் பின்னர் 80°

கிராமாபிவிருத்தி, குடிசைக்கைத்தொழிற் பகுதி உத்தியோகத்தர் திரு. சு. நாகலிங்கமும் வ. மாரிமுத்துவும் பதநீரைப் புடஞ் செய்கின்றார்கள்.





காலால் சுற்றி இயக்கும் இயந்திரத்தில் பாணியை இட்டு சீனி யைத்தயாரிக்கும் முறையைச் செய்து காட்டுகிருர் திரு. சு. நாக லிங்கம் அவர்கள்.

பாகையிலும் மேலேகூறிய முறை அனுட்டிக்கப்படும். பின்னர் 100°c பாகைவரைக்கும் சூடு ஏற்றி பின்பு அப்பதனீரை அடையச் செய்து பின்பு துணியில் வடிகட்ட வேண்டும். அதன்பின்பு வடி கட்டி எடுத்த பதனீரை அப்பாத்திரத்தில் விட்டு சூடு 110°C வரைக்கும் (பாணியாகும் நேரம்) எரித்து அவற்றை இறக்கி வைக்கவேண்டும்.

### மூன்ரும் படிமுறை

அப்படியாக இறக்கிய பாணியை "Crystaliser" என்னும் யந்திரத்தில் விட்டு 24 மணி நேரத்துக்கு விடல் வேண்டும். ஒவ் வொரு மணித்தியாலத்துக்கும் 10 முறை அந்த யந்திரத்தைக் கையாற் சுழற்ற வேண்டும். பின்பு 24 மணித்தியாலம் கழிந்ததும் அப்பாணியை வெளியில் எடுத்துவிடவேண்டும். இது மொலாசஸ் எனப் படும்


### நான்காம் படிமுறை

பாணியை எடுத்து சென்ரிபூகல் (Centrifugal) என்னும் சீனி யாக்கும் (காலால் சுற்றும்) யந்திரத்தில் 3 ருத்தல் நிறைகொண்ட பாணியை (Molasses) அந்த யந்திரத்துக்குள் விட்டு காலாற் சுழற்றி இயக்க வேண்டும். பாணி வேருகவும் சீனி வேருகவும் பிரியும். முதலில் எடுக்கப்படும் சீனி முதலாம் நம்பர் வெள்ளைச் சீனி எனப்படும். இதில் பிரிந்து எடுக்கப்பட்ட பாணியை மறுநாள் 114°c பாகைக்குச் சூடு ஏற்றி பின்பும் அதே யந்திரத்துக்குள் விட்டு 24 மணி நேரம் கழித்து அதன் பின்னல் "Centrifugal" என்னும் சீனி ஆக்கும் யந்திரத்துக்குள் போட்டு எடுக்கப்படும் சீனி 2ம் நம்பர் சீனி (பழுப்புச் சீனி) எனப்படும்.

### ஐந்தாம் படிமுறை

இப்படியாக எடுக்கப்பட்ட சீனியைச் சூரிய வெப்பத்தில் காய வைத்துப் பின்பு அரிதட்டில் அரித்து, பின் நிறுத்து விற்பனை செய்யப்படும். ஆனல் இப்பனஞ் சீனி தேகாரோக்கி

பொலிகண்டிச்சீனி இப்பொழுது தயாராகிவிட்டது. விற்பனை செய்தற்காக இதனை நிறுக்கின்ருர் திரு. ச. செல்லத்துரை அவர்கள்.



யத்தைக் கொடுக்கின்றது. இருதயரோகங்கள், இருமல், முதலிய வருத்தங்களுக்கு மிகவும் நன்று. ஆனபடியால் யாழ்ப்பாணத்திலும் மறு இடங்களிலும் இச்சீனியை மக்கள் மிகவும் விருப்பத்துடன் பெற்றுக்கொள்ள மிகவும் ஆவலுடன் இருக்கிறார்கள். கூடிய பணங் கொடுத்து வாங்கவும் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

மேற்கூறிய பனம்பொருள் ஆராய்ச்சிநிலையம் 1950ம் ஆண்டில் குடிசைக் கைத்தொழில் இலாகாவினல் பொலிகண்டி என்னும் ஊரில், முதலில் தாபிக்கப்பட்டது. அப்போது திரு. சு. நாகலிங்கம் என்பவர் 300 பனைமரங்களையும் ஒரு சிறு கட்டிடத்தையும் இலவசமாக இலாகாவுக்கு கொடுத்து, அதில் 12 போதகாசிரியர்களுக்கு திரு. சு. நாகலிங்கம் அவர்களே பனைவெல்லம் முதலிய பொருட்களில் பயிற்சி கொடுத்துதவினர். பின்பு 1956ம் ஆண்டில் திரு. சு. நாகலிங்கம் அவ்வூர் கிராம முன்னேற்றச் **சங்கத்துக்கு, 2 பரப்புக்கொண்ட காணி** ஒன்றை நன்கொடையாகக் கொடுத்து, அரசாங்கப் பண உதவியுடனும் பொதுமக்களின் உதவியுடனும் ரூபா 10,000 பெறுமதியான கட்டிடத்தை அமைத்து இந்தச் சீனித் தொழிற்சாலை நடைபெற்று வருகின்றது. இத் தொழிற்சாலையில் தற்சமயம் 2 போதனசிரியர்களும், 4 தொழிலாட்களும் கிரமமாக வேலை செய்து வருகிறார்கள். பதனீர்ப் போகமல்லாத காலங்களில் அதாவது தை மாசம் தொடக்கம் ஆடி வரை நீங்கலாக, மற்றக் காலத்தில் பின்வரும் தொழில்கள் பொலிகண்டிப் பனம் பொருள் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்று வருகின்றன.

(1) பனம் பழத்தில் ஜாம் எனும்பாணி செய்தல்.
(2) பனம் பழத்தில் சர்வத்துச் செய்தல்.
(3) பனம் பழத்தில் சொக்கிலேற்றுச் செய்தல்.
(4) தக்காழிப்பழப் பாணி செய்தல்.
(5) எலுமிச்சை ஊறுகாய் செய்தல்.
(6) நெல்லிக்கனி ஊறுகாய் செய்தல்.
(7) மாங்காய் சட்டினி செய்தல்.
(8) பனம் விதையிலிருந்து தும்பு எடுத்தல்.
(9) பனட்டு—பாணிப் பனட்டு செய்தல்.
(10) பனம் பாணியில் இஞ்சிப்பாகு செய்தல்.

முதலியன.

மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களைச் செய்யும் முறைகளை பொலிகண்டி ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்றால் நீங்கள் பார்க்கலாம். இந்த நிலையத்தில் செய்யப்பட்ட சீனியில் கொஞ்சம் கிள்ளி வாயில் போடத் தந்தார் திரு. நாகலிங்கம். சாதாரண கடைச் சீனியிலும் பார்க்க உருசியாக விருந்தது.

(வளரும்)

பொலிகண்டிச் சீனி உற்பத்தி நிலையம்.



எங்கள் ஊர்

# உசன்

பண்டிதர் திரு. த. சுப்பிரமணியம்

### ஆரம்பம்

இந்து சமுத்திரம் என்னும் சுந்தரத்தடாகத்தில் அழகு நிறைந்த ஒரு செந்தாமரை மலர் போல, என்றும் இலங்கிக்கொண்டிருப்பது எமது இலங்கைத்தீவு. சுதந்திரமடைந்த நம்மிலங்கையில், மக்கள் விழிப்படைந்து ஒவ்வொருவரும் தங்களூர்ச் சரிதங்களைப்பற்றி எழுதுகின்றனர். பேசுகின்றனர். கிராமங்களையும்-மக்களையும் முன்னுக்குக் கொண்டு வருகின்றனர். சுதந்திர இலங்கையின் ஒரு அங்கத்தவன் என்ற முறையில், எங்களூரைப்பற்றியும் அதன் பூர்விக நிலை-மக்கள் வாழ்க்கை முறை-போக்கு வரவுச் சாதனங்கள்-கல்வி-சமயம்-அரசியல்-சமூக முன்னேற்றம் என்பன பற்றி யாமறிதல் வேண்டும்; எங்களூர் மக்களறிதல் வேண்டும்; வெளியுலகம் அறியச் செய்தல் வேண்டும், என்னும் ஆவல் உண்டானது. அந்த ஆவலே இதனை எழுத எம்மைத் தூண்டியதாகும்.

### நிலையம்—இயற்கையமைப்பு—சிறப்பு

யாழ்ப்பாணப்பட்டினத்திலிருந்து கிழக்கே 16 மைல் தூரத்தில் யாழ்ப்பாணம்—கண்டி ரோட்டில், மிருசுவில் என்று புகை வண்டி தங்குமிடம் ஒன்று உண்டு. மிருசுவிலுக்குத் தெற்கே சுமார் 50 யார் தூரம்வரை சென்றால் எங்களூராகிய உசனின் ஊரெல்லைத் தெருவீதிதென்படும். எங்களூர் வடக்குத் தெற்காக சுமார் இரண்டு மைல் நீளமும் கிழக்கு மேற்காக 1½ மைல் அகலமுமுள்ளதாகும். பழந்தமிழ் நூல்களிற் சொல்லப்பட்ட நால்வகை நிலங்களிலும், எங்களூர் வயலும் வயல்சார்ந்த இடமுமாகிய மருத நிலப்பண்பு வாய்ந்ததாகும்.

"காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகினெற்றிப்
பூமாண்ட தீந்தொடை சீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி"

என்பதாகச் சிந்தாமணி என்னும் நூலில் திருத்தக்க தேவர் கூறிய தன்மைகள் அத்தனையும் அமைந்து விளங்குகின்றது எங்களூர். பூலோக கற்பகதரு எனப்படும் பனை-தென்னை, கமுகு, பலா, மா முதலான கனிதரு மரங்கள் அடர்த்தியாகவுள்ளன. இவற்றின் காய்கள் முற்றிக் கனிந்து, பழுத்த நிலைமையில் தெங்கம் பழமும் பனம்பழமும் விழும். இவையிரண்டும் சேர்ந்து சென்று கீழ் நிற்கும் கமுக மரங்களில் எற்றும். அப்பால் அவை, அவற்றுடன் சேர்ந்துபலாப்பழங்களிற் பட்டு அவற்றைக் கீறித் தேன் சிந்தச் செய்து மாங்கனிகளில் மோதி எங்கும் சிதறிக் கிடக்கும். எங்களூரின் எல்லையிற் கால் வைத்தாலே போதும்! இத்தகைய சிறப்புக்கள் இயற்கையாகவே எங்கும் அமைந்திருத்தலைக் காணலாகும்.

சிந்தைக்கு இன்பஞ் செய்யுந் தெங்கஞ் சோலைகள், கண்ணுக்கினிமை நல்குங் கனி மரச் சோலைகள். பொன் மலைகள் போன்று அணியணியாக ஆங்காங்கு விளங்கிப் பார்ப்பவர் மனதைப் பரவசமடையச் செய்யும் வைக்கோற் போர்கள். அண்ணாந்து பார்த்தால், பவளமும் மரகதமும் பதித்தாற் போன்று குலை குலையாகத் தோன்றும் தெங்கின் பழங்கள் "சிறுகக் கட்டிப் பெருக வாழ்" என ஔவைப் பாட்டி சொல்லி வைத்த இலக்கணத்தின் வரம்புகளமைந்து அழகு பெற விளங்கும் வீடுகள். வீடுகள் பெரும்பாலும் கிடுகுகளினாலேயே வேயப்பட்டிருக்கும். மிகவும் வைரமுள்ள—இரும்புக் கம்பி போன்ற, அலம்பல் எனப்படும் தடிகளினாலே வேலிகள் அடைக்கப்பட்டிருக்கும் அழகு, பார்க்கப் பார்க்கப் பரவச மூட்டுமென்பதற்கையமில்லை. சிற்சில இடங்களில் பனையோலைகளாலும் (இதனைக் காவோலை என்பர்) அடைக்கப்பட்டிருக்கும். வீட்டுக் காணிகளின் முன்பக்க வேலிகள் அழகுக்காகக் கிடுகளினால் மிகவும் அழகாக அடைக்கப்பட்டிருக்கும். விசாலமான காணிகள் தோட்டங்கள் முதலியன முட்கம்பிகளினால் அடைக்கப்பட்டிருக்கும். நெல் விளைவுக் கேற்ற விசாலமான வயல் நிலங்கள் எங்களூரைச் சூழ்ந்து விளங்குகின்றன.

### இதிகாசத் தொடர்பு

எங்களூரின் பூர்விக சரிதத்தை நோக்கும் போது எங்களூரிலும் சுற்றுப்புறங்களிலும் சோனகர் குடியேறியிருந்தனரென யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகின்றது. கச்சாய் பிரபல துறைமுகமாக விளங்கிய காலத்தில், தென்னிந்திய காயல் பட்டினம் முதலான விடங்களிலிருந்து சோனகக் குடிகள் வந்து தென் மிருசுவில் என்னுமிடத்திலிருந்தன ரென்றும் இவர்கள் சாவகச்சேரி கொடிகாமம்-எழுதுமட்டுவாள் முக-மாலை முதலாமிடங்களிலுள்ள சந்தைகளில் வியாபாரஞ் செய்து வந்தன ரென்றும் கூறப்படுகின்றது. தாங்கள் குடியிருந்த இடத்திற்குத் தங்கள் தலைவனின் பெயரையிட்டனரென்றும், உசேன் என்னும் தலைவனின் பெயர் காலகதியில் மருவி உசன் என்றாயிற்றெனவும் கூறப்படுகின்றது. சோனகவளவு என்று தற்போதும் வழங்கப் பட்டுவரும் ஒரு காணி இங்கு இருக்கின்றது. இது இத்தலைவன் இருந்த இடமாக இருக்கலாமென்றுங் கூறுகின்றனர். தெற்கு மிருசுவிலின் ஒரு பகுதியேதான் உசன் எனவும் காரணத்தால் இப்பெயர் பெற்றதெனவும் சரித்திரகாரர் கூறுகின்றனர்.

மிறிஸ்+வில்=மிருசுவில், மிறிஸ் என்பது சிங்கள மொழியில் மிளகாயைக் குறிக்கும். வில் என்பது குளத்தைக் குறிக்கும். மிருசுவில் புகையிரதத் தானத்தருகாமையில் காணப்படும் குளம் இதுவாக இருக்கலாமெனவும் இயம்புகின்றனர். இதனால், சோனகருக்கு முன்னர் இவ்விடங்களிற் சிங்களவரும் குடியேறி யிருந்தன ரெனக் கொள்ளலாகும்.

இனிக் காலகதியில் இவர்கள் கச்சாய்த் துறைமுகம் பிரபலங் குன்றியமையாலும்-தமிழர் குடியேற்ற மிகுதியினாலும் தமது வியாபார முறைகட்கு வசதிகளின்மையாலும் யாழ்ப்பாணப்பட்டினம் வியாபாரத்திற்கு வசதியாயிருந்தமையாலும்-அவர்கள் சாகியத்தாரிற் பெரும்பாலார் அங்கு வசித்தமையாலும் இவ்விடத்தை விட்டு நல்லூரிலும், பின்னர் இப்போதைய சோனக தெரு என வழங்கும் பகுதியிலும் குடியேற வேண்டியவரானார்கள் என ஊகிக்கக் கிடக்கின்றது.

### மக்கள் வாழ்க்கை முறை

எங்களூரைப் பொறுத்தவரையில் அனைவரும் வாழ்க்கைக்குப் போதிய வருவாயுடையாராயிருக்கின்றனர். "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு". "சுழன்று மேர்ப் பின்னது லக மதனால் உழந்து முழ வே தலை" என்று வள்ளுவர் பெருமான் சொல்லிய மொழிக் கொப்ப உழுதூண் மாந்தராகவே விளங்குகின்றனர். புகையிலை-கத்தரி-மிளகாய்-தக்காளி-குரக்கன், வெண்காயச் செய்கை முதலான தோட்ட வேலைகளிலும் நாட்ட முடையராயிருக்கின்றனர். குறிப்பாகச் சொல்லின் எங்களூர் மக்கள் பெரும்பாலும் சுதந்திரப் பிரியர்களாகவே விளங்குகின்றனர். பிறருக்கு அடிமை வேலை செய்வதை அடியோடு

வெறுக்கின்றனர். கிடுகு பின்னுவதாலும் சுயகௌரவத்தோடு தான் செய்வர். எவ்வளவு வறுமைப்பட்டவர்களாயினும்சரி, கூலி வேலை என்பதை அறியார்கள் எங்களூர் மக்கள். ஆனால், கூட்டாகச் சேர்ந்து தங்கள் வேலைகளைச் செய்யும் ஒரு ஐக்கிய இயக்கம், யுத்த காலத்திற் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கும் தற்போதைய இயக்கங்களுக்கு முன்னரே இங்கு இருந்துவருகின்றது. வீடு வேய்தல் -தோட்ட நிலம் (தறை) கொத்துதல், வயல் உழுதல், நாற்று நடுதல், குரக்கன் கதிர் வெட்டுதல், மிளகாய்ப் பழமெடுத்தல் முதலானவற்றில் இதனைக் காணலாகும்.

ஐப்பசி கார்த்திகை மாசங்களில் எங்களூர் வயல்களில் களைபிடுங்கும் பொருட்டாகக் கட்டை வேலை-கரவெட்டி-மந்துவில் முதலான இடங்களிலிருந்து பெருந் தொகையான பெண்களும் ஆண்களும் எங்களூருக்குச் சமூகமளிப்பர். நிற்க, ஏனைய அயலூர் மக்களுக்குத் தாங்கள் எவ்வகையிலும் குறைந்து விடுதல் கூடாது என்ற ஒரு நோக்கம் எங்களூர் மக்களிடத்துண்டு. இத்துடன் இவர்கள் தனித் தனியே ஒருவரை யொருவர் தாண்டிச் செல்ல வேண்டும் என்ற நோக்கமும் இவர்களிடத்தில் இல்லாமலில்லை. விருந்தோம்புதலிலும் எங்களூர் மக்கள் சிறந்தவர்களென்று கூறாமலிருக்க முடியவில்லை. வந்த விருந்தோம்பி வரும் விருந்தைக் காத்திருக்கும் பெருந்தகைமை இவர்களிடத்திற் பெரிதுமுண்டு. எவ்வளவுதான் கஷ்டங்களிருந்தாலும் வேற்றூர்களிலிருந்து விருந்தினர்கள் யாரும் வருவதை வீதியிலே கண்டாலும் போதும். வந்தவர்களை நீங்கள் யார்? எந்த ஊர்? என்ன பெயர்? வந்த விஷயம் என்ன? உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? என்று மிகவும் அன்பு ஆதரவோடு வினவி அவர்கள் வரலாற்றை யறிந்து கொள்வதிலும், தங்களை யறிமுகப்படுத்திக் கொள்வதிலும் சிறந்தவர்கள். வந்தவர்கள் விரும்பினால் தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச் சென்று தனியுபசரணை செய்வதற்கும் தயங்க மாட்டார்கள் எங்களூர் மக்கள். இவர்களுடைய இயற்கையான விருந்தோம்புங் குணம் இதனால் அறியலாகும்.

### போக்கு வரத்துச் சாதனங்கள்

போக்கு வரவுக்கான பெரும் வீதிகளிருக்கின்றன. மணற் பாங்கான வீதிகளாயிருத்தலின் இலகுவான பிரயாண வசதிகள் குறைவு. சுமார் 30 வருடங்களுக்குமுன் சேர். பொன். இராமநாதன் அவர்களால் எங்களூருக் கூடாக றோட்டுத் திறக்க முயற்சிக்கப்பட்டுப் பின்னர் சில காரணங்களால் ஓய்ந்துவிட்டது. இருந்த சில பெரியார்கள்கூட இது விஷயத்தில் முயற்சிக்க முன்வரவில்லை. றோட்டு வந்தால் எங்களூரில் எரிப்பதற்குப் பன்னாடை கூடக் கிடையாது. வடமராட்சியார், பட்டினத்தார் வந்து அள்ளிக் கொண்டு போய்விடுவார்கள் என்ற ஒரு மனப்பான்மை அக்காலத்தில் இருந்துவந்தது. கமக்காரராதலின் இங்குள்ளார் ஒவ்வொருவருக்கும் வண்டி மாடுகளுண்டு. நெல்-தேங்காய் ஓலை முதலானவற்றை ஏற்றிய பாரவண்டிகள் ஒழுங்கைகளில் வருவதைக் கண்டால் விகடராமன் சவாரி செய்த குதிரையின் ஞாபகந்தான் வரும். முன் பக்கத்தில் நுகத்தை ஒருவர் அழுத்திப் பிடிக்க, பின்னாலிருந்து சிலர் தள்ளிக்கொடுக்க பக்கத்திலிருவர் சில்லெடுக்க ஆசனப் பலகையிலிருப்பவர்மூக்காங் கயிற்றைச் சுண்டிக் கொண்டு காளைகளின் கால்களுக்கிடையே காலைவைத்துரப்ப வண்டி அசைந்தசைந்து செல்லும். ஏன். பிரதான திருவிழாக் காலங்களிலும் மற்றுந் தருணங்களிலும் பட்டினப் பக்கங்களிலிருந்து எமது ஊரைப் பார்க்க வரும் மோட்டார் வண்டிகள் கூட இத்தகைய அனுபவத்தை ருசி பார்க்காமல் தப்பிக் கொள்ள முடியவில்லை. மற்றவர்களுக்குச் சிறிது சிரமமாயிருப்பினும் எங்களூர் மக்களுக்கு இது சாதாரணமானதே.

இந்த நிலையை விரும்பாத எங்களூர் இளம் வாலிபர்களின் தளராத ஊக்கம்-உழைப்பு-ஒற்றுமை என்பனவற்றால் சுமார் 5 வருடங்களின் முன்னர் இந்தப் பெருங் குறை நிவிர்த்தி செய்யப்பட்டு விட்டது. எங்கள் பகுதிப் பாராளுமன்ற முன்னாள் அங்கத்தவரின் உதவியாலும் வாலிபர்களின் ஒத்துழைப்பாலும் மண்ணாகக் கிடந்த தெரு இன்று, மக்கள் மனத்தைக் கவரும் மாண்பு கொண்டு விளங்குகின்றது. கண்டிறோட்டிற் தொட்டுச் செல்லும் இவ்வீதி சுமார் ஒரு மைல் தூரத்தில் வந்து நின்று எஞ்சிய பகுதியும் எங்களூர் இளைஞர்களின் ஒன்றுபட்ட உழைப்பினால் மிக விரைவில் பூரணமாகும் நிலைமையை யடைந்து வருகின்றது.

### அரசியலும் சமூகமும்

சுமார் 25, 30 வருடங்களின் முன்னதாக எங்களூர் மக்கள் தாம் ஈடுபடும் மற்றைய விஷயங்கள் போன்று அரசியலைப் பற்றி அறிந்து கொள்ள அவ்வளவு விரும்பவில்லை. அதனால், அரசியற் கொள்கை வேறுபாடுகளின் காரணமாக நடை பெறும் தாறுமாறுகளினின்றும் நீங்கியிருந்தனர். ஆங்கில அறிவும் அந்த நாட்களில் இவர்களுக்கு அவ்வளவு இல்லை யெனலாம். ஆங்கிலமறிந்தவர்கள் காற்சட்டையணிந்தவர்கள் சொல்வதெல்லாம் அமுதமொழிகள்-தேவவாக்கு என்று எண்ணினார்கள். சமூக நிலையிலும் அபிவிருத்திக்கான வழிகள் அந்த நாட்களில் இருந்ததில்லை. அந்நியரால் ஆட்சி செய்யப்படும் நம் நாட்டில் அரசியலேன்?சமூகமேன்?அபிவிருத்தி என்? என்று இருந்தார்களோ என்னவோ? யார் கண்டார்கள்? இலங்கை சுதந்திரமடைந்து அரசாங்கம் மாறியதுதான் தாமதம்! எங்களூரின் நிலைமைகளும் மாறிவிட்டன. கிராமாபிவிருத்திச்சங்கம் சன சமூக நிலையம், மதுவிலக்கு இயக்கம், இளைஞர் சேவா சங்கம், ஐக்கிய நாணய சங்கம். என்று எத்தனையோ இயக்கங்களை ஆக்கிவிட்டனர் நமது இளைஞர்கள் என்று சொல்வதில் பெருமையடைகின்றோம்.

வண்டி வாகனங்களில் ஏறிச் சவாரிசெய்யும்போது உள்ளத்தைப் பரவசங்கொள்ளச் செய்யும் றோட்டு. செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து இனிமேல் உய்யுந் தொழில்களில் இதுவுமொன்றென விளங்குந் தையல் வகுப்பு நிலையம். கிராம மக்களுக்கிடையேயுண்டாகும் பிணக்குகளைச் சமாதான முறையில் நீதிகண்டு தீர்ப்புச் செய்யும் ஐந்து பேர் கொண்ட நியாய சங்கம் என்று சொல்லப்படும் பஞ்சாயம். மனிதனுடைய அறிவை மயக்கி அவன் பொருளை யழித்து என்? அவனைக் கூட ஒரு சமயம் அழித்துவிடும் கொடுமை நிறைந்த மதுவை யொழிக்கும் மதுவிலக்கு இயக்கம். நாட்டு மக்களுக்குப் பொருளாதார சுபீட்சத்தையும் விடுதலையையும் எடுத்துக்காட்டி, அவர்களின் பாதுகாப்பான வாழ்வுக்கு வழிகாட்டி வரும் ஐக்கிய நாணய சங்கம். கொழும்பு-சென்னை, திருச்சி முதலாம் தூர தேயச் செய்திகள். சங்கீத விருந்துகள் முதலானவற்றைச் சுடச் சுட உடனுக்குடன் கேட்டுத் தங்கள் அறிவை விருத்தி செய்வதற்கான வானொலி. சமய குரவர்கள் குருபூசைக் கொண்டாட்டங்கள், வெள்ளிக்கிழமைதோறும் நடைபெறும் கந்தசாமி கோயிற் கூட்டுப்பிரார்த்தனைகள், பஜனைகள், ஆறுமுக நாவலர், விவேகானந்தர், மகாத்மாகாந்தி முதலாம் பெரியார்களின் நினைவு விழாக்கள் என்றின்ன வெல்லாம் எங்களூர் இளைஞர்கள் ஆக்கிவைத்த ஷெ இயக்கங்களின் அழியாத சின்னங்களாகும். இவை யாவற்றினும் மேலாகக் குறிப்பிடக்கூடியது சமயா சாரங்கட்கு மாறுபட்டதும், மிகவும் வேரூன்றி யிருந்ததுமான தாசியர் நடனத்தை, எங்களூரிலிருந்து பூண்டோடே ஒழித்தமையாகும். புனிதமான நமது சமயத்திற்குப் படிந்துள்ள இந்த மாசைத் துடைத்த பெருமை தென்மராட்சிப் பகுதியில் எங்களூருக்கே முதலாவதாகவுள்ளதெனின் மிகையாகாது. ஏனைய வூரின் இளைஞர் இயக்கங்கள் எம்மூர் இளைஞர் இயக்கத்தின் பின்னரே இவ்விஷயத்தைப் பின்பற்றினர் என்பதைப் பெருமையுடன் கூறுகின்றோம்.

### கல்வி

எக்களூர்க்கல்வி முறையைப்பற்றி இனிப் பார்ப்போம். அமெரிக்க மிஷனரிமாரால் நடாத்தப்பட்ட ஒரு தமிழ்ப் பாடசாலேயிலே தான் எங்களூர் மக்கள் அக்காலத்திற் கல்வி பயின்றனர். தமது சமயத்தைப் பரப்புதலே நோக்கமாகக் கொண்டவர்களாதலின் எங்கள் சமயக் கல்வி வளர்ச்சிக்கு அதிகம் இடமில்லாது போய் விட்டது. எனினும் திண்ணைப் பாடசாலேகள் இருந்தன. உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளே உபாத்தியாயரிடத்தில் முறையாகப் பாடங்கேட்ட பல பெரியோர்கள் இருந்தனர். தற்போதும் இருக்கின்றனர். இவர்கள் திண்ணைப் பாடசாலேகளில் மாணவர்களைச் சேர்த்துப் புராணேதிகாசங்கள், நிகண்டு-இலக்கணம் அந்தாதி முதலான நூல்களில் நல்ல பயிற்சி கொடுத்து வந்தனர்.

ஆங்கிலங் கற்பதற்குப் போதிய வசதிகள் கிடைக்கவில்லே. பணம் படைத்தவர்கள் தங்கள் பிள்ளேகளேச் சங்கத்தானே, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் முதலான இடங்களிற் சென்று படிக்க வைத்தனர். நமது குறைகளேயறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டுச் சேர். பொன். இராமநாதன் அவர்களின் முயற்சியாலும் கொடைவள்ளல் ஸ்ரீமான் சி. வைத்திலிங்கப் பிரபுவின் உதார குணத்தாலும் எங்களூர் மக்களின் தளராத ஒத்துழைப்பினுலும் 1926 ம் ஆண்டில் சைவ வித்தியாசாலேயொன்று தாபிக்கப்பட்டது. அன்று தொட்டு இன்றுவரை கல்வியில் எங்களூர் முன்னேற்றமடைந்து வருகின்றது. எல்லோரும் வேண்டிய அளவுக்குத் தமிழ் கற்றிருக்கின்றனர். தற்போது ஆங்கிலமும் கற்று வருகின்றனர்.

எத்தனேயோ சிறந்த தமிழாசிரியர்களேயும் எங்களூர் உருவாக்கியிருக்கின்றது. ஊரின் சிறப்பு நோக்கி விரும்பி வந்த ஆசிரியர்களும் உளர். அரசினர் உத்தியோகங்களிலும் நல்ல பதவிகளில் சிலர் அமர்ந்திருக்கின்றனர். நியாய தூரந்தரர்கள், பட்டதாரிகள், டாக்டர்களும் கூட இன்று விளங்குகின்றனர்.

### சமயம்

எங்களூரின் குடிசனம் ஏறக் குறைய 2,000 ஆகும். பெரும் பான்மையோர் சைவ சமயத்தவர்களாவர். புரோட்டெஸ்தாந்தக் கிறிஸ்தவர்கள், கத்தோலிக்க சமயத்தவர்களும் உளர். "துறவிகள் ஆச்சிரமம்" ஒன்றும் இங்கு உண்டு. எச்சமயத்தவர்களாயினும் எங்களூர் மக்கள் சமயங்களின் உண்மைத் தத்துவத்தை உண்மையாகவே உணர்ந்தவர்கள் எனக் கூறலாம். யாராயினும் சரி சமய விஷயத்தில் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொள்ளவே மாட்டார்கள்.

பல நிறங்கொண்ட மின்சார விளக்குகள் பிரகாசிக்கின்றன. அவற்றைப் பிரகாசிக்கச் செய்யும் சக்தி ஒன்றுதானே. அதுபோல சமயங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் நின்று இயக்கும் இறைவன் ஒருவன்தானே என்பதை இவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றூர்கள். இதனே இவர்களுடன் பலநாட் பழகி அனுபவமடைந்தவர்களன்றி ஏனேயோர் அறியார். இக்காலத்தில் சமய பேத முதலியன காட்டுவோர் எங்களூர் மக்களிடத்துப் பழகிவரின் நாளடைவில் இவ்வித வேதனேகளிலிருந்து விடுதலே யடைவர்.

### முடிபு

கச்சாய்க் கிராமச் சங்கத்துடன் பரிபாலிக்கப்பட்டுவந்த எங்களூர் ஏறக்குறைய 22 வருடங்களின் முன்னுக மிருசுவில் கிராமச் சங்கத்துடன் சேர்க்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. கிராமங்களே முன்னேற்றுவதையே நோக்கமாகக் கொண்டது மிருசுவில் கிராமச்சங்கம். கிராமச்சங்க இலட்சியத்தை நன்கறிந்து கடமையாற்றுகின்றூர்கள் அங்கத்தவர்கள்.

சுதந்திரமடைந்த இலங்கையில் எங்களூர் துரிதமான முன்னேற்றமடைந்துள்ளதெனக் கூறுதல் மிகையாகாது. எங்களூர் மக்கள் உணர்ச்சியும் விழிப்புங் கொண்டு ஆற்றுங் கடமைகள் பலவாகும். கடந்த சுமார் 400 வருட அந்நியராட்சிக்காலத்தில் கிடைக்காத எண்ணற்ற அநுகூலங்களே சுதந்திர இலங்கையில் எங்களூர் அடைந்திருக்கின்றது.

கடைசியாக, ஒரு கிராமம் நல்வாழ்வு வாழ வேண்டின் அதற்கு வேண்டியன இரண்டு உள. ஒன்று ஆன்மலாபம் மற்றது தன்னலமற்ற கிராம சேவை. இவை இரண்டும் எங்களூரில் நிறைந்து இருக்கின்றன. இவற்றுடன்.

"நாமே நமக்குத் துணையானுல் நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத்தேடி வரும் சற்று மிதற் கோர் ஐயமுண்டோ"

இல்லே. எனவே, கடமையும் உரிமையுமுணர்ந்து பொறுமையுடன் நம் இளைஞர்கள் கருமமாற்றி மென்மேலும் எங்களூரை முன்னேற்றத் திருவருள் துணை செய்வதாக.

---

## சிவபாதசுந்தரம் பி. ஏ.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரம்பிள்ளேயுடன் படிப்பித்தவர் : வடமொழி வில்கணியத்தைத் தமிழில் தந்தவர். சுப்பிரமணியபிள்ளே தமது குடும்ப விருத்திக்குக் காரணரான அந்தச் சித்தரையும், உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரையும் தமது வீட்டில் வைத்து, ஆதரித்து வந்தனர். அன்றிப் பிள்ளேகளோடு சென்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரையும் வழிபட்டு வருபவர், இக்காரணங்களினுலே சுப்பிரமணியபிள்ளேயின் குடும்பம் கல்வி செல்வங்களால் தழைத்து ஓங்கியது. சுப்பிரமணியபிள்ளேயின்தவவிசேஷத்தால், சிவபாத சுந்தரம் பிள்ளே புதல்வராய் வந்து பிறந்தார். **(பண்ணியபயிரிற் புண்ணியம் பலித்தது)**

சிவபாத சுந்தரம்பிள்ளே அவர்கள் தம் உடல் பொருள் ஆவிகளேச் சைவத்துக்கே அர்ப்பணித்துச் சைவ வாழ்வு வாழ்ந்ததில் நூதனம் இல்லே. அது அவர்களின் குடும்பச் சொத்து. பிள்ளே அவர்களின் ஒவ்வொரு மூச்சும் சைவ மூச்சாயிருந்தது. அவர்களுடைய இறுதி மூச்சு

**திருக்கேதீச்சுவர புனருத்தாரண மூச்சு**

அவர்களுடைய சைவப் பிரசங்கங்களும், சைவத் தொண்டுகளும் எண்ணில்லாதவை. அவர்களுடைய வார்த்தைகளுக்கு அரசாங்கமும் செவிசாய்த்தது. அவர்களுடைய முயற்சிகள், உயர்ந்த பெறுமதி உள்ளவைகள்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் அரிய சைவ நூல்களே வெளியிட்டிருக்கின்றூர்கள். அருமையான கல்விநூல்கள் தருக்க நூல்களுந் தந்திருக்கின்றூர்கள்.

**திருவருட் பயன்** என்கின்ற அருமந்த அமிர்த சுரபியை,

கந்தபுராணம் போல, இந்நாட்டிலே பயின்று வழங்கும்படி— ஆங்கிலம் பயின்று ஆங்கிலமயமாய்ப் போகிறவர்கள் கூட, ஒரு சிறிது சைவ உணர்ச்சி எய்தும்படி—

செய்துவைத்த பேருபகாரம் ஒன்றுமே

சிவபாத சுந்தரம்பிள்ளே அவர்களின் பெருமையையும், பெருநன்மையையும் நினைவூட்டப்போதுமானது.

திருக்குறளும் திருவருட்பயனும் சைவத் தமிழ் மக்களுக்கு இரு கண்மணிகள்.

**கௌரியம்மை சமேத திருக் கேதீசுவர நாதன் திருவடி நீழலில் சிவபாத சுந்தரம்பிள்ளே அவர்களின் ஆத்மா சாந்தி உறுவதாக.**

# பல்கலைக் கழகங்கள்

கலாநிதி ஆ. சதாசிவம்

"பல்கலைக் கழகம்" என்றால் என்ன ? என்னும் கேள்விக்கு விடை காண்பது மிக இலகு. ஒரு நாட்டு மக்களுக்கு உயர்ந்த கலைகளில் பயிற்சி அளிப்பதும் அந்நாட்டுக் கலாச்சார பண்பாடுகளைப் பாதுகாத்து அவற்றை வளர்த்துவருவதும் ஆகிய கலாபீடமே பல்கலைக் கழகம் என்ற பெயரைத் தாங்கவேண்டும் என்பது அறிஞர் கருத்து. இப்பண்புகளுள் எவ்வெவற்றைக் கொண்டுள்ளது எம் இலங்கைப் பல்கலைக் கழகம் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இலங்கை வாழ் சிங்கள தமிழ் மக்களின் கலாச்சார பண்பாட்டு வளர்ச்சிக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் எதுவித தொண்டும் ஆற்றவில்லையென்பது எல்லோரும் அறிந்த ஒரு பெரிய உண்மை. எத்தனை ஆராய்ச்சி நூல்கள் இதுவரை இங்கிருந்து வெளியாயிருக்கின்றன ? சேர். ஐவர் ஜென்னிங்ஸ், மலலசேகர, ராய், சரச்சந்திரா, சுவாமி விபுலானந்தா, செல்வநாயகம் என்போர் எழுதிய சில நூல்கள் மாத்திரமே ஆராய்ச்சி நூல்கள் என்ற வகுப்பைச் சார்ந்தவை. "ஒக்ஸ்போட்" "கேம்பிறிச்" "கார்வாட்" "கல்கத்தா" போன்ற பல்கலைக் கழகங்களிலிருந்து உயர்தர வகுப்பைச் சேர்ந்த ஆராய்ச்சி நூல்கள் தினமும் வெளிவருகின்றனவே ; அங்ஙனமாகவும் எம் பல்கலைக் கழகத்திலிருந்து மாதமொரு நூலாவது வெளிவருகின்றதா ? இல்லை ; இதுவரை கால எல்லையில் எத்தனை தலைவர்களை, அறிவாளிகளை, ஞானிகளை தத்துவ சமய விற்பன்னர்களை, இரசாயன பௌதிக நிபுணர்களை எம் பல்கலைக் கழகம் உருவாக்கியிருக்கின்றது ? இங்ஙனம் பற்பல கேள்விகளைக் கேட்பதால் பயன் ஒன்றுமேயில்லை ; பல்கலைக்கழகம் வரண்ட பாலைவனமாய்க் காட்சியளிப்பதன் காரணங்களை ஆராய்வோம்.

இலங்கைப் பல்கலைக்கழகம் ஒரு வளர்ந்துவரும் இளங் குழந்தை. சாதாரணமாக உலகிலே குழந்தைப் பிள்ளைகள் தம் வயதுக்கேற்ப தறுகுறும்புகளில் ஈடுபடுபவர்களாயும், அனுபவக் குறைவினால் பல பிழையான செயல்களில் ஈடுபடுபவர்களாயும் காணப்படுகின்றனர். மற்றும் இப்பிள்ளைகள் செய்யும் பிழைகளுக்கும் சேட்டைகளுக்கும் அவர்கள் பெற்றோரும் ஒரு முறையில் பொறுப்பாளிகளாகின்றனர். அதாவது பெற்றோரிற் சிலர் தம்பிள்ளைகளுக்கு ஏராளமான சட்டங்களைப் பிறப்பித்து அவர்களை அச்சட்டங்கட்கு உட்பட்டு நடக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதனால் பிள்ளைகளிற் சிலர் சட்டங்களை அறவே மீறமுற்படுவதையும், ஏனையோர் பயந்து ஏங்கி நடப்பதனால் தாமாகவே ஒன்றை யோசித்துச் செய்யும் சுதந்திர மனப்பான்மையை இழந்துவிடுவதையும் நாம் நாளாந்த வாழ்க்கையில் காண்கின்றோம். ஆகவே பெற்றோர்கள் செய்ய வேண்டியது பிள்ளைகளுக்கு ஏராளமான சட்டங்களை விதித்து அவர்களது சுதந்திர உணர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்காது அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய இடங்களில் மாத்திரம் கட்டுப்படுத்துவதே. (உவமையை விரித்துக்கொள்க) இவ்வுண்மையை இலங்கைப் பல்கலைக் கழக வளர்ச்சியிலும் வைத்து நாம் ஆராயலாம்.

பல்கலைக்கழக மாணவர்கள் அறிவிலும் அனுபவத்திலும் ஆரம்ப, மத்திய பாடசாலை மாணவர்களைவிட மிகக் கூடியவர்கள். இவர்கள் விரிவுரையாளர்களாலும் விடுதிச்சாலை அதிகாரிகளாலும் மிகக் கண்ணியமாகவும் சுதந்திரத்துடனும் நடத்தப்படவேண்டியவர்கள். பல்கலைக் கழகப் படிப்பு பாடப்புத்தகப்படிப்பல்ல ; ஆசிரியர்கள் ஒரு பொருளைப்பற்றி விளங்கப்படுத்திவிட மாணவர்கள் கவனமாகக் கேட்டுத் திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளைப் பேச்சுமுறை ஆரம்ப மத்திய பாடசாலைகளில் உள்ளது. பல்கலைக் கழகமுறை அத்தகையதன்று. மாணவர்கள் தங்கள் அறிவைத் தாங்களாகவே வளர்ப்பதற்குச் சாதகமாக அமையும் இடமே பல்கலைக் கழகம். இந்த அறிவு வளர்ச்சிக்கு வகுப்பறைப் படிப்புப்போலவே வகுப்பு அறைக்கு வெளியே மாணவர்கள் வாழும் விடுதிச்சாலை அனுபவமும் உதவிசெய்கின்றது. உலகில் உள்ள பெரிய பல்கலைக் கழகங்களெல்லாம் இயற்கை அழகுள்ள பெரிய நதிக்கரை யோரங்களில் அல்லது நதிப்படுக்கையிலிருந்து சில மைல் தூரத்தில் திகழுகின்றன. பேராதனைப் பல்கலைக் கழகம் மகாவலி ஆற்றங்கரையில் திகழுவதுபோலவே "ஒக்ஸ்போட்" (Oxford) "கேம்பிறிச்" (Camberidge) "கைடில் பேர்க்" (Heidel Burgs) பல்கலைக் கழகங்கள் ஆற்றுப்படுக்கைகளில் அமைந்துள்ளன. தலைநகரங்களில் கட்டப்பட்ட "சோபோண்" (Sobourne) "வீயன்ன" (Vienna) பல்கலைக் கழகங்கள்கூட முறையே "சீன்" "டான்யூப்" நதிகளிலிருந்து இரண்டொரு மைல் தூரத்தில் உள்ளன. ஒரு நாட்டின் வருங்காலத் தலைவர்களாகவும் தலைவிகளாகவும் திகழும் ஆண்களும் பெண்களும் தேகாரோக்கியம் உடையவர்களாய் இயற்கை வனப்போடு கூடிய அழகிய சூழ்நிலையில் வாழ்ந்து கல்வி பயிலவேண்டுமென்ற நோக்கம் பற்றியே பல்கலைக் கழகங்களை அமைத்தோர் ஆற்றங்கரைகளை நாடினர் என்பது எவருக்கும் இலகுவில் விளங்க முடிவதொன்று.

இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் இயற்கை அழகோடு கூடிய சூழ்நிலையில் வாழ்ந்து கல்வி கற்கின்றபோதும் அவர்களிற் பலர் அறிவு வளர்ச்சிக்காகப் படிக்கின்றார்களில்லை, சோதனைகளில் விசேஷ சித்தி அடைவதற்காகப் படிப்பதில் பல்கலைக் கழக வாழ்நாட்களைக் கழிக்கிறார்கள். இது பெரிய தவறு. கலைமாணிப் பட்டம் (B.A.) போன்ற பட்டங்களுக்கு விதிக்கப்பட்ட பாடப் புத்தகங்களை மனனம்பண்ணுவதில் நேரத்தைக் கழிக்கிறார்கள். பல்கலைக் கழகப் பட்டம் அரசாங்க உத்தியோகத்தை அடைவதற்கு வழிகாட்டியாக இருப்பதனாலேயே இலங்கை மாணவர்கள் பட்டதாரிப் பயித்தியம்பிடித்தவர்களாய்க் காணப்படுகின்றார்கள். பெரிய அரசாங்க உத்தியோகங்களில் நுழைவதற்கு கலைமாணிப்பட்டம் போதுமானதாகையால் எம் பல்கலைக்கழகத்தில் முதுமாணி (M.A.) கலாநிதி (doctor) போன்ற ஆராய்ச்சிப் பட்டங்களைப் பெறுவதற்கு முயற்சிக்கும் மாணவர் எவரையும் காணோம். இவற்றிலிருந்து நாம் அறிவது யாதெனில் ஆராய்ச்சி மனப்பான்மையோடு கூடிய மாணவர்கள்கூட ஆராய்ச்சி வேலைகளில் ஈடுபட முயற்சிக்காது உயர் பதவியை அடைய வாயிலாகும் பட்டத்தை அடையும் குறுக்கு வழியையே தேடுகின்றார்கள் என்பது. மாணவர்களது மனப்பான்மை இத்தகையதாயிருப்பதற்கு அவர்கள் மாத்திரம் பொறுப்பாளிகள் அல்லர் ; இலங்கை ஆட்சிபீடமும் பல்கலைக் கழக அதிகாரபீடமும் மாணவர்களது ஆராய்ச்சி அவாவைத் தூண்டாக் கருவிகளாகின்றன. மற்று, எத்தகைய கல்விமுறை இலங்கைப் பல்கலைக் கழகத்தாரால் கைக்கொள்ளப்படவேண்டும் என ஒருவர் கேட்பின் அதற்கு விடையாக உலகில் உள்ள சில பல்கலைக் கழகங்கள் கொண்டுள்ள கல்வி போதிக்கும் பிறமுறைகள் சிலவற்றை ஈங்குத் தருவாம்.

மத்திய ஐரோப்பிய பல்கலைக் கழகங்களிற் கல்வி கற்போரிற் பலர் அரசாங்க உத்தியோகத்தை மாத்திரம் நம்பிக் கல்வி கற்பதில்லை என்பது பலருமறிந்தது. "கைடில் பேர்க்" "வீயன்" "பிராக்" போன்ற மத்திய ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் நம் நாட்டிலுள்ளதைவிட மிக வித்தியாசமானமுறையில் கல்வி போதிக்கப்படுகின்றது. இப்பல்கலைக் கழகங்களில் "கலைமாணி" "முதுமாணி" போன்ற தரப் பட்டங்கள் கிடைக்கவே கிடையா. பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் சித்திபெற்று உயர்தரப் படிப்புக்குச் செல்வோர் பல்கலைக் கழகத்திற் செய்யும் வேலை ஆராய்ச்சி நூல்கள் எழுதுவதுதான். அவர்களுக்கு அப் பல்கலைக் கழகங்கள் வழங்கும் ஒரே ஒரு பட்டம் "டாக்டர்" அல்லது "கலாநிதிப்" பட்டம். மாணவர்கள் ஏறக்குறைய ஐந்து வருடங்களின் பின்பே இப்பட்டத்தைப் பெறத் தகுதியுடையவர் ஆகின்றனர். பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து படிக்கமுடியாததின் நிமித்தம் இவ்வைந்து வருட எல்லைக்குள் பல்கலைக் கழகத்தினின்று நீங்குவோர் எதுவித தராதரப் பத்திரமுமின்றியே செல்கின்றனர். இவ்விதம் நீண்ட காலப்படிப்புக்குப்பின் ஒரே ஒரு பட்டம் வழங்கும்முறை மத்திய ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் இருந்து வருவதனால், அம்முறையினால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. முதலாவதாக, ஐந்து வருடங்கட்குத் தொடர்ந்து ஆராய்ச்சிசெய்த பின்பும் எழுதும் ஆராய்ச்சி நூல்கள் பட்டம் வழங்கத்தக்க தராதரத்தை அடையாதவிடத்து மாணவர்கள் எதுவித பட்டமுமின்றிப் பல்கலைக் கழகங்களைவிட நேரிடுமாகையால், உண்மையாகவே ஆராய்ச்சியில் ஈடுபாடுள்ள சிறுதொகையினரே பல்கலைக் கழகப் படிப்பை நாடுகின்றனர். பல்கலைக் கழகத்தில் பட்டத்தைப் பெற்றபின்பும் தாம் நடத்திவந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்ற மனப்பான்மை இவர்களிடத்திருப்பது இயல்பே. இக் காரணத்தினாலேயே நுண்கலை, மொழிநூல், சமயம், தத்துவம், இரசாயனம், பௌதிகம் போன்ற எந்தக் கலைகளிலும் உலகில் மேதாவிகளாய் விளங்குபவர்களுள் ஜேர்மனியர் தலைசிறந்து விளங்குகின்றனர். இந்நாடுகளில் பல்கலைக்கழகப் படிப்புக்குச் செல்லும் சிறு தொகையினர் தவிர ஏனையோர் ஆரம்ப மத்திய கல்லூரிகளிலிருந்து நேராகவே தொழிற்கல்வி நிலையங்களுக்கும் தொழிற் பயிற்சிச் சாலைகளுக்கும் செல்கின்றனர். ஐந்து வருட காலங்களில் மாணவர்கள் தொழில் நிலையங்களில் பெறும் அனுபவம் வாழ்க்கையில் ஏராளமான பொருளைத் திரட்டுவதற்கு உதவி செய்கின்றது. மேலும் சிறுபகுதியினர் பல்கலைக் கழகப்படிப்பை நாடுவதனால் இந்நாடுகளில் கல்வியின் தரமும் அதி உயர்ந்ததாய்க் காணப்படுகின்றது. அன்றியும் , மாணவர்கள் எதுவித சோதனைகள்பற்றிய கவலை அற்றவர்களாய் தம் ஆராய்ச்சியில் மத்திரம் முனைந்து நிற்பதால், கல்வித்துறையில் புதிதாகக் கண்ட எவ்விஷயத்தையும் அல்லது உண்மையையும் மற்றவர்கள் முன்னிலையில் நிலைநாட்டும் சுதந்திர தாகமுடையவர்களாய்க் காணப்படுகின்றனர். இத்தகைய கல்விமுறை எம்மிலங்கைப் பல்கலைக் கழகத்திற் கைக்கொள்ளப்படின் இன்னும் பத்து, பதினைந்து வருடங்களில் நாட்டில் நூற்றுக்கணக்கான மேதாவிகள் பிரகாசிப்பார்களன்றோ ?

மத்திய ஐரோப்பிய பல்கலைக் கழகங்களிலுள்ள கல்வி முறையினின்றும் வேறுபட்ட முறை ஆங்கில நாட்டிலுள்ள "ஒக்ஸ்போட்" "கேம்பிறிச்" ஆகிய இரு பல்கலைக் கழகங்களிலும் நிலவிவருகிறது. இவற்றுள் "ஒக்ஸ்போட்" பல்கலைக் கழகத்துக் கல்விமுறையினை ஆராய்வாம். **21** ஆண் கல்லூரிகளும் **5** பெண் கல்லூரிகளும் ஆகிய **26** கல்லூரிகளின் இணைப்பே "ஒக்ஸ்போட் பல்கலைக் கழகம்" என்ற பெயர்பெறும். இங்கு விரிவுரையாளர்கள் பல்கலைக் கழகத்தினரால் நியமிக்கப்படுவர். மாணவர்களுக்குக் கட்டுரைப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள் **(Tutors)** கல்லூரி அதிகாரிகளால் நியமிக்கப்படுவர். இவ்விரு பகுதியினரது கடமைகளும் வேறு. பல்கலைக்கழக வேதனம் பெறும் விரிவுரையாளர்கள் மேற்கூறிய **26** கல்லூரி மாணவர்களும் வந்து சந்திக்கத்தக்க ஒரு இடத்தில் விரிவுரையாற்றுவர். இவர்களுக்கு மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பு பெரும்பாலும் ஏற்படுவதில்லை. பல்கலைக் கழகத் தேர்வு வினாப் பத்திரங்களைத் தயாரிப்போரும் இவ்விரிவுரையாளர்களே. கல்லூரிகளினது வேதனம்பெற்றுக் கல்லூரிகளில் வாழும் கட்டுரைப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரே ஒரு பொறுப்பு மாத்திரம் உண்டு. இவர்கள் பெரும்பாலும் விரிவுரை ஆற்றுவதில்லை. தேர்வு வினாப்பத்திரங்கள் தயாரிப்பதில்லை ; மற்றும், தம்பொறுப்பில் விடப்பட்ட ஏறக்குறைய பத்து மாணவர்களைக் கிழமைதோறும் குறிப்பிட்ட நேரத்தில் தனிப்பட்டமுறையில் சந்தித்து அவர்களுக்குக் கட்டுரைப் பயிற்சி அளிப்பர். உதாரணமாக "தற்கால சரித்திர ஆசிரிய"ராக **(Tutor in Modern History)** கடமையாற்றுவோர் கல்லூரியில் அப்பாடங் கற்கும் பத்து மாணவர்களுக்கு அப்பாடங் கற்பிக்கும் பொறுப்பை ஏற்பர். இவர்களை ஒவ்வொருவராகத் தன் அறையில் கூப்பிட்டு அப்பாடத்தில் கிழமைதோறும் கட்டுரை எழுதுவிப்பர். மாணவனும் ஆசிரியரும் ஒருசேர இருந்து விஷயத்தை அலசி ஆராய்வர். மூன்று பாடங்களைத் தேர்வுக்கு ஆயத்தப்படுத்தும் ஒரு மாணவன் கிழமைதோறும் அம்மூன்று பாடங்களில் மூன்று கட்டுரைகள் எழுதி தம் மூன்று கட்டுரைப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கும் சமர்ப்பிப்பன். இப்பழக்கத்தினால் மாணவன் மற்றவர்களைப் பின்பற்றாது தனது அறிவைத் தான் விரும்பியவாறு பெருக்கிக்கொள்ள அவகாசம் ஏற்படுகிறது. அன்றியும் விரைவில் அவன் தானே ஒரு எழுத்தாளனாக மாறுகிறான். ஆங்கில நாட்டில் இன்று பேரும் புகழும்பெற்று வாழும் ஆராய்ச்சியாளர்களும் தத்துவ, சரித்திர மேதாவிகளும் "கேம்பிறிச்" "ஒக்ஸ்போட்" பல்கலைக் கழகப் பழைய மாணவர்கள் என்பதைக் கூறவும் வேண்டுமா ?

இனி, நம் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்விமுறையினைப் பற்றி ஆராய்வாம். இங்கு கல்வி கற்பிப்போரில் விரிவுரையாளர், கட்டுரைப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர் என்ற இரு பிரிவினைகள் இல்லை. ஒருவரே விரிவுரையாளராகவும், மாணவர்களது கட்டுரைகளைப் பரிசீலனைசெய்யும் ஆசிரியராகவும் கடமையாற்றுகிறார். அன்றியும் பத்து அல்லது பன்னிரண்டு மாணவர்களுடைய கட்டுரைகள் ஒருமணித்தியால நேரத்தில் பரிசீலனை செய்யப்படுகின்றன. எனவே ஒரு கட்டுரையைப் பரிசீலனை செய்வதில் ஆசிரியரால் **5, 6** நிமிடங்களே செலவளிக்கமுடிகின்றது. சில விரிவுரையாளர்கள் கட்டுரைகளைப் பரிசீலனை செய்யாதே தெளிவாகக் கைச்சாத்திட்டுக் கொடுக்கின்றனர். ஏனைய மாணவர்கள் முன்னிலையில் ஒரு மாணவன் எழுதிய கட்டுரையில் உள்ள குறைகளை வெளிப்படையாக எடுத்து விளக்குவதனால், சிற்சில வேளைகளில் மாணவனுக்கு மனச்சோர்வு ஏற்பட்டுப் படிப்பில் ஊக்கங் குன்றுகின்றது. "ஒக்ஸ்போட்" அல்லது "கேம்பிறிச்" பல்கலைக் கழகங்களிற் போன்று ஒரு மணித்தியால நேரத்தில் ஒரு மாணவனது கட்டுரை பரிசீலனை செய்யப்படுமாயின் மேற்கூறிய குறைகளை யெல்லாம் நிவர்த்தி செய்யலாமல்லவா ?

இன்னும் இங்கு சில விரிவுரையாளர்கள் கைக்கொள்ளும் முறையிலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. சிலர் மாணவர்கள் கையில் அகப்படாதனவெனத் தாம் கருதும் சில நூல்களிலிருந்து குறிப்புகளைச் சேகரித்துத் தம் சொந்தச் சரக்காக மாணவர்களுக்கு வழங்குகின்றார்கள். பாட மணி அடித்த நேரம்

[31 ம் பக்கம் பார்க்க.]

# "சர்வகட்சி மகாநாடு அர்த்தமற்றது" —பிரதமர்

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்காலிகத் தலைவராக விளங்கும் திரு. டட்லி சேனநாயக்கா மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு சர்வகட்சி வட்டமேசை மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்று கூறியிருக்கும் ஆலோசனையைப் பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா "அர்த்தமற்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கட்சிகள் மொழிப் பிரச்சினைபற்றி பல அடிப்படையான கருத்து வேற்றுமைகளைக் கொண்டுள்ளன.
பிரதம மந்திரி அவர்கள் இது விஷயமாகப் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் முறிவடையாததும், இவ்வொப்பந்தத்தைத் தகர்ப்பதற்கு ஆங்காங்கு சில குழுக்களும் தனிப்பட்டவர்களும் செய்த சூழ்ச்சிகள் தவிடுபொடியானதன் பயனாக, நாட்டு மக்களிடையே நிலவிய பீதி அகன்றுவிட்டது.

நாட்டிலே உருவாகிவந்த சூழ்நிலை பல்லாயிரக்கணக்கான மக்களின் மரணத்திற்கும், தமிழ் சிங்கள மக்கள் பல பரம்பரைகளுக்கு மறக்க முடியாத பெரும் பகைமைக்கும் காரணமாகி இத் தேசமே பெருங் குழப்பத்துக்கு ஆளாகியிருக்கும். இதனாலேயே ஒப்பந்தம் ஏற்பட்டது கண்டு மக்கள் கவலை தீர்ந்துள்ளார்கள். சத்தியாக்கிரகம் ஏற்பட்டிருந்தால் இவை எல்லாம் சம்பவித்திருக்கும். இப்படிப்பட்ட நிலையில் எந்த அரசாங்கமும் கௌரவமான முறையில் இந்நிலை ஏற்படுவதைத்தடுக்க முடியுமானால் தடுப்பதற்கு முயன்றேயாகவேண்டும். இது அரசாங்கத்தின் கடமை. இதைத் தான் நான் இப்பொழுது வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறேன். உண்மையில் இதனை எல்லோரும், வெளிநாட்டுப் பத்திரிகைகள் கூட, இலங்கையின் பிரதமர் எவரும் அடைந்த மிகச்சிறந்த வெற்றிகளில் ஒன்று என்று வர்ணித்து வரவேற்கிறார்கள்.

அடிப்படையான எக்கொள்கையையும் விட்டுவிடாமல். தமிழ் சிங்கள சமுதாயங்களின் நட்புக்கும் நல்லெண்ணத்துக்கும் அஸ்திவாரமிடுவதில் நான் வெற்றியடைந்திருக்கிறேன். சிங்களம் மாத்திரம் அரசாங்க மொழி என்ற நிலையை மாற்றாமல், நான்கு அம்ச ஆலோசனையின்மூலம் தமிழர்களின் இன்னல்களுக்கும் நான் மாற்றுக் கண்டுள்ளேன், ஒரே பாராளுமன்றத்தின் கீழ் ஏக அரசாங்கம் நடத்துவதை நான் பேணியிருப்பதோடு, அவ்வப் பிரதேச மக்களின் நியாயமான உரிமைகளைப் பிரதேச சபைகள் மூலம் பேணுவதற்கும் நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

ஒப்பந்தம் ஏற்பட்டதும் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலரையும் கட்சிகளையும் தவிர ஏனையோர் எல்லோரும் அதனை வரவேற்றனர். இவர்கள் தாம் மக்களின் வாக்குரிமையை உபயோகித்து அதன் மூலம் அதிகாரத்தைப் பெற முடியாது என்பதை அறிவார்கள். அதனால்தான் நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தி அதன் மூலம் தமக்கொரு தானத்தை நாட்டில் பெற்றுக்கொள்ளலாம் என அவர்கள் பகற்கனாக் காண்கிறார்கள். கொள்ளையடிப்பதற்குத் தருணம் பார்த்திருந்த காடையர் சிலரும் ஒப்பந்தத்தால் பெரும் கவலைக்குள்ளானார்கள். இவர்களெல்லோரும்—சிங்களர், தமிழர், இருசாராரும் இதில் உள்ளனர்—ஒப்பந்தம் யாதென்னத் தெரிந்து கொள்ளாமலே ஒப்பந்தத்தை எதிர்த்து அதனைத் தகர்ப்பதற்குத் தமது கடைசி முயற்சியை மேற் கொண்டார்கள்.

தமிழை உபயோகிப்பதற்கும், பிரதேசச் சபைகளைத் தாபிப்பதற்குமான மசோதாக்கள் தயாரிக்கப்படும்போது, பொது மக்கள் இவ்விஷயம் முழுவதையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளக் கூடிய நிலைமையிலிருப்பார்கள். இவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, இவற்றையிட்டு விரிவாக விவாதிக்கக் கூடியதாக இருக்கும். மேலும் இம் மசோதாக்கள் ஒரு குழுவின் முன்னிலையில் பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்படும்பொழுது, பொதுமக்கள் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துக் கூறவோ சாட்சியமளிக்கவோ முடியும். எனவே எவரும் தம் பொறுமையை இழக்கவோ பீதியடையவோ தேவையில்லை.


பொதுமக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டிய சில அடிப்படைக் கொள்கைகள் இருக்கின்றன. **தமிழருக்கு இலங்கையில் இடமில்லை. அப்படி அவர் இந்நாட்டில் தங்கியிருப்பது அவசியமென்று கருதுவார்களானால், அவர்கள் சிங்களர்களின் அடிமைகளாக அல்லது ஏறக்குறைய அவ்வந்தஸ்தில் தான் இங்கு வாழவேண்டுமென்று சிங்களர் விதிக்கும் நிபந்தனைகளின் பேரிலேயே அவ்வாறு செய்ய முடியுமென்று சிங்களத் தீவிரவாதிகள் கூறினால் மட்டுமே அவர்களுட் சிலரின் போக்கு நியாயமானதாகும். இப்போக்கை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள நெஞ்சில் உரமற்ற இவர்கள், கிட்டத்தட்ட இப்போக்குக் கிசைவான ஒரு நிலைமையை மொழி சம்பந்தமாகவும் இதர விஷயங்கள் சம்பந்தமாகவும் அனுட்டித்து வருகின்றார்கள்.**

இவ்வாறில்லாமல், சிங்களர்களைப்போல் தமிழர்களும் இலங்கைப் பிரசைகள் தான் என்றும், தன்மானத்துடனும் ஒரு நாட்டின் பிரசைகளுக்குள்ள எல்லா உரிமைகளுடனும் சலுகைகளுடனும் இங்கு வாழும் உரிமை அவர்களுக்கு உண்டென்றும் கருதப்படுமிடத்து, சிங்களர்களின் சட்ட ரீதியான உரிமைகளைப் பாதுகாக்கும் அதே நேரத்தில் தமிழ்ப் பிரசைகளின் சட்ட ரீதியான உரிமைகளையும் பாதுகாத்தல் அவசியமாகின்றது. **கடைசியாகக் கூறப்பட்ட கொள்கையே எப்பொழுதும் இவ்வரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது.** அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் கொள்கையும், இந்நாட்டு மக்களிற் பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்ளும் கொள்கையும் இதுவேயாம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் போக்கு முன்கூறியவற்றை நன்கு சித்தரித்துக் காட்டுவதாக விளங்குகின்றது. இக்கட்சியின் கொள்கை இதன் முதலாவது தலைவர் காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா அவர்களின் காலந்தொட்டு வாய்ப்பேச்சளவில், இந்நாட்டில் வாழும் இருசமுகங்களுக்குமிடையே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் பேணிப் பாதுகாக்கும் ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. இக்கட்சியின் தற்போதைய தலைவர் திரு. டட்லி சேனநாயகா அவர்கள் சமீபத்தில் விடுத்த ஓர் அறிக்கையில் இக்கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் மொழிப் பிரச்னை சம்பந்தமாகவும் உடன்படிக்கை சம்பந்தமாகவும் இக்கட்சி கடைப்பிடித்துள்ள போக்கு இதற்கு முற்றிலும் மாறான விளைவையே ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.

உதாரணமாக, மொழிப்பிரச்சினை விஷயத்தில் அவர்களின் போக்கை ஆலோசித்துப் பாருங்கள். முதலில், அவர்கள் சம அந்தஸ்தைப் பெறமுயன்றனர். பின்பு, பொதுத் தேர்தல்களுக்குச் சற்று முன்பதாக களனி மகாநாட்டில் சிங்களம் மட்டும் என்று பல்

(31 ம் பக்கம் பார்க்க.)



"சந்தகிந்துரு" நாடகத்தில் கின்னரப்பெண் ஆனந்த நடனமிடுங் காட்சி.

# நாடகப் பரிசளிப்பு விழா

இலங்கைக் கலை மன்றத்தின் சிங்களப் பிரிவு 1955 ஆண்டு நடத்திய நாடகப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கும் விழா கடந்த ஆகஸ்டு மாதம் 17ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் கொழும்பிலுள்ள ஹெவ்லொக் டவுன் அரசினர் பாடசாலையில் நடைபெற்றது.

கலை மன்ற விழாவில் கலாச்சார அமைச்சர் பங்குபற்றி விழாவுக்குத் தலைமை தாங்கினர். அவர் தமது தலைமையுரையில் இலங்கைக் கலைமன்றத்தின் சிங்களப் பிரிவு தோன்றிய வரலாற்றையும், அரசாங்கம் இப்பிரிவை விருத்திசெய்ய எடுக்கத் திட்டமிட்டிருக்கும் நடவடிக்கைகளையும் விவரமாக எடுத்துக் கூறினர். நாடகத்துறையில் சிங்கள மக்கள் கடந்த இருநூற்றுண்டுகளிலே மிகவும் சிறந்து விளங்கினரென்றும், அந்நிலை படிப்படியாக மாறி இன்று சிங்கள நாடகம் தலைதூக்க முடியாத நிலையை அடைந்துவிட்டதென்றும் கூறினர். இன்றைய வீழ்ச்சிக்கு சிங்கள சினிமாப் படங்களும் காரணமாக விருக்கின்றன வெனக் கூறிய அமைச்சர் இந்நிலையைத் தடுத்து சிங்கள நாடகக் கலையை விருத்தி செய்ய அரசாங்கம் கங்கணம் கட்டியிருப்பதாகக் குறிப்பிட்டார். அமைச்சர் தமது உரையில் மேலும், கலாச்சார அமைச்சு கொழும்பு, கண்டி, காலி, இரத்தினபுரி, குருநாகல் போன்ற பெரிய நகரங்களில் பாமர மக்கள் பெருந்திரளாக வந்திருந்து அனுபவிக்கத்தக்கதாக வெளி அரங்குகளைத் தாபிக்கத் திட்டமிட்டிருப்பதோடு, வருடாவருடம் நாடகப் போட்டி நடாத்தி சிறந்த நாடகாசிரியர்களுக்குப் பரிசு வழங்கவும் தீர்மானித்துள்ளது என்று தெரிவித்தார். கூடிய சீக்கிரம், கொழும்பில் நிரந்தர நாடக மன்ற மொன்றை நிறுவுவதற்காக, மருதானையிலுள்ள டவர் ஹோல் நாடக மன்றத்தை கலாச்சார அமைச்சு வாங்க விருக்கின்றது.

இலங்கைக் கலைமன்றத்தின் சிங்கள நாடகப் பிரிவு இன்று பெருமளவு விருத்தியடைந்திருப்பதாகவும், அதற்குக் காரணம் அப்பிரிவின் தலைவராகக் கடமையாற்றும் திரு. எம். ஜே. பெரோரா அவர்களின் சலியா உழைப்பேயாகு மெனவும் கூறி திரு. எம். ஜே. பெரோரா அவர்களைப் பாராட்டினர்.

சிங்களப்பிரிவின் தலைவர் திரு. எம். ஜே. பெரோரா இதுநாள்வரை இப்பிரிவு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றி விவரமாகக் குறிப்பிட்டார்.

இவ்விழாவைச் சிறப்பிக்க ஐந்நூறு அழைப்புகள் அனுப்பியதையும், எல்லோரும் சமுகமளித்து விழாவைச் சிறப்பித்ததையும் குறிப்பிட்டு அதற்காக தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். "கொழும்பிலே நாடகங்களைப் பயிற்றுவிக்கவோ, நாடகங்களை நடாத்தவோ நிரந்தரமான ஒரு கட்டடமின்றி நாடகப்பிரிவு பெருங் கஷ்டத்துள்ளானது. கடைசியில் கொழும்பு, ஹெவ்லொக் டவுன் அரசினர் பாடசாலைக் கட்டடத்தை இவ்வேலைக்குத் தருமாறு கேட்டுக் கொண்டோம். கல்வி அதிபர் ஆட்சேபனையின்றி பாடசாலைக் கட்டடத்தை எமக்களித்து இவ்விழாவை நடத்த ஒழுங்கு செய்தார். அதற்காக எமது ஆழ்ந்த நன்றியை அவருக்குத் தெரிவிக்கின்றோம்", என பிரிவுத் தலைவர் குறிப்பிட்டார்.

பின்னர், இலங்கைக் கலைமன்றத்தின் 1955ம் ஆண்டு நாடகப் போட்டியின் முதற் பரிசு ரூபா 1,000 "கதாமினி" என்ற நாடகத்தை எழுதிய திரு. பி. கே. சோமபால அவர்களுக்கு வழங்கப்பட்டது. இரண்டாம் பரிசை "ஜன்ம பூமி" யென்ற நாடகத்தை யெழுதிய திரு. ஆர். டி. கே. ஜயவர்தன பெற்றுர். இப்பரிசின் தொகை ரூபா 500. இத்துடன் இந் நாடகாசிரியர்களுக்கு தகுதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

அதன்பின்னர் கோட்டே ஆனந்த சாஸ்திராலய கல்லூரி மாணவ மாணவிகள் தயாரித்த "சந்த கிந்துரு நாடகம்" நடித்துக் காண்பிக்கப்பட்டது. இம்மாணவர்களின் நடிப்பு எதிர்காலத்தில் பிரபல நாடகக் கலைஞர்கள் பலர் இங்கிருந்து தோற்றலாம் என்ற நம்பிக்கையை எல்லோருக்கும் அளித்தது.

**சிங்கள நாடகம்**

சிங்கள நாடகங்கள் இரு பிரிவுகளையுடையன. அவை கவி நாடகமும், சிந்து நாடகமுமாகும். பௌத்தர்களான சிங்களர் புத்தரின் முற்பிறப்புக்களைக் கூறும் ஜாதகக் கதைகளையே தங்கள் இலக்கியங்களிலும், நாடகங்களிலும், ஓவியங்களிலும், சிற்பங்களிலும் புகுத்தினர். புத்தரின் முற்பிறப்பை விவரிக்கும் இக்கதைகளே அவர்களின் வாழ்வைச் செம்மைப்படுத்தின, வளப்படுத்தின. நாடகங்களிலும் இக்கதைகளே புகுந்ததில் ஆச்சரியமில்லை.

கவி நாடகங்களாகவும் சிந்து நாடகங்களாகவும் மூவஜாதகம், சந்தகிந்துரு ஜாதகம், விதுர ஜாதகம், மனமே கதை போன்றவை வெளிவந்தன. இக்கதைகள் நவரசங்களை யுடையனவாய்த் திகழ்வதால் இவை சிங்கள மக்களின் மனதைக் கவரும் சக்தியைப் பெற்றன. எல்லா நாடகாசிரியர்களும் இக்கதைகளை புதுப்புது மெருகில் தயாரித்து வந்துள்ளனர். அண்மையில் டாக்டர். சரத் சந்திரா என்பார் மனமே கதையை நாடகமாகத் தயாரித்தார். இந் நாடகம் பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது. இவர் சிங்கள நாடகக் கலைக்குப் புத்துயிரளித்தாரெனத் தைரியமாகக் கூறலாம். இவர் சிங்கள நாடகத்தைப்பற்றி எழுதிய நூலில் சிங்கள நாடகக் கலைக்கு தமிழ்க் கூத்து நாடகங்கள் பெரிதும் உதவியளித்துள்ளன எனக் குறிப்பிட்டிருக்கின்றார். இவர் நாடகக்கலையை உயிர்ப்பிக்க பெரிதும் உழைத்த பெரியாராவர். இவர் தயாரித்த "மனமே நாடகம்" பதித்துரோகி ஒருத்தியின் கதையைக் கூறுகின்றது. சந்தகிந்துரு ஜாதகம் இதற்கு முற்றிலும் நேர் மாறான தொன்றாகும். இது கற்பிற் சிறந்த பெண்மணியொருத்தியின் கதையை விபரிக்கின்றது. சத்தியவான்—சாவித்திரி கதைக்குச் சமானமானது.


**கதைச் சுருக்கம்**

பிரம்மதத்த மன்னன் வாரணாசிபுரத்தை ஆண்டுவந்த காலத்தில் போதிசத்துவர் கின்னர வம்சத்தில் பிறந்திருந்தார். ஒருநாள் கின்னரன், தனது அழகிய மனைவியுடன் சோலையில் கூடிக்குலாவிக் களித்துக் கொண்டிருக்கும் வேளையில் அப்பெண்ணின் அழகில் மயங்கிய அரசன் கின்னரனை அம்பெய்திக் கொன்றான். கணவன் இறந்து வீழ்ந்ததைக்கண்ட கின்னரப் பெண் அடைந்த சோகம் அளவுகடந்தது. அவள் தன் கணவனின் சடலத்தருகே இருந்து வடித்த கண்ணீரும், கம்பலையும் இந்திரனின் பாண்டு கம்பளத்தைச் சூடாக்கியது. இந்திரன் நடப்பதை உணர்ந்து பிராமணக்கிழவன் வடிவெடுத்து வந்து அவளுக்குற்ற துயர் யாதெனக் கேட்டான். அவள் இந்திரனைத் தர்க்கத்தால் வென்று கணவனுயிரை மீண்டும் பெற்று மகிழ்ந்தாள்.

**கின்னரனை அரசன் அம்பெய்து கொல்கிறான்.**



**கணவனை இழந்த கின்னரப்பெண் துக்கசாரத்தில் ஆழ்ந்திருக்கி**



**கின்னரனும், கின்னரப்பெண்ணும் ஆடிக்களிக்கின்றனர்.**



# வீரம்தரும் ஞானவளம்

(திரு. எஸ். பெரியதம்பி அவர்கள் பி. ஏ.)


தேயம் காலம் சாதி முதலியன காரணமாய் உயிர்களின்
வாழ்க்கை பல்வேறு வகையாய் வேற்றுமைப்பட்டிருப்பினும்
எங்கும் முயற்சி வடிவினதாகவே காணப்படும். அறிவிச்சை
தொழிலென முத்திறப்பட்டு நிகழுமிவ் வாழ்க்கைக்கண் சாமா
ன்யமாய் அறிவுமிச்சையும் தொழின் முயற்சியைப் பயனுகக்
கொண்டே நிகழும். அறிவு நிகழ இச்சையும் அதன் பின்
தொழிலுமாகவே எப்பிராணிகள் பாலும் வாழ்க்கை நடை
பெறும். எனவே, எவ்வாற்ருல் நோக்கினும் வாழ்க்கை முயற்சி
வடிவினதாகவே கருதப்படல் வேண்டும்.

முயற்சி வடிவினதாகிய வாழ்க்கை உயிர் வாழ்தலொன்
றையே பொருளாகக் கொண்டதுமன்று. குஞ்சுக்காக உயிர்
துறக்கும் பட்சியும் கன்றுக்குட்டிகளுக்காக உயிர் துறக்கும்
மிருகங்களுமுண்டென்பதவதானிக்கத்தக்கது. வாழ்க்கையா
லடையும் பல்வேறு பிரயோசனங்களின் தாரதம்மியமறிந்து
பரமப் பிரயோசன நிச்சயமுஞ் செய்ததற்கேற்க வாழ்க்கையை
நெறிப்படுத்து மாற்றலறிவுகளால் மேம்பட்ட மனிதர் தம்
மிலட்சியத்தை யடைதற்கோர் சாதனமாகவே தம் வாழ்க்கை
யைப் பயன்படுத்தும் கடப்பாடுடையவர். அவ்வாறன்றி, மனிதப்
பிறவியாலடையும் பயன் கருதாது உயிர் வாழ்தலொன்றையே
பொருளென மதித்தொழுகும் பேதையர் உருவில் மனிதரே
யாயினும் குணத்தில் விலங்குகளினும் கடையராகவே மதிக்கப்
படுவர். தமிழ்நாட்டுள்ள அடிப்பட்ட சான்ருேரெல்லாம் உயிர்
வாழ்தலொன்றையே பொருளாக ஒருபோதும் கொண்டவரல்லர்.
“ஒழுக்கம் விழுப்பந் தரலாலொழுக்க முயிரினு மோம்பப்படும்”
என்னும் உயர்நெறி கடைப் பிடித்துச் சீரிய ஒழுக்கத்தையே
யவர் பொருளெனப் போற்றினர். குடிகுலம் கோத்திர முதலி
யன பற்றியுள்ள தந்நிலையிற்ருழாமையாகிய மானத்தைத் தம்
முயிர் நீத்தும் காப்பவர் நம்மான்ருேர். சீரிய வாழ்க்கையை
யுதவுமிம் மானமழிய வந்துழி யூனோம்பும் வாழ்க்கையைப்
பொருட்படுத்தாது வீறுகொண்டெழுவதே தமிழ்மரபு.

மக்கள் வாழ்க்கை முயற்சி வடிவினதாய்ச் சிறந்ததோரிலட்
சியத்தை நோக்கிச் செல்லு மியல்பினதெனவே நன்றிது தீதிது
சரியிது பிழையிது என்று பிரித்துணரும் பகுத்தறிவுடைய
மக்கள் பெரு முயற்சி செய்து பெரும் பயனடையும் கடப்
பாடுடையவரென்பது பெறப்படும். பேரறிருவு பேராற்றல் திட
சித்தம் மனவூக்கம் இடுக்கணழியாமை என்பனவற்றை யடிப்
படையாகக்கொண்டு எடுத்த கருமத்தைக் கடிதிற் சென்று
முடிக்குமாண்மையோடும் பெரு முயற்சியோடும் கூடிச் சிறந்து
விளங்குவதிவ் வீரவாழ்க்கை. அறிவுடை மக்கள் போற்றத்
தக்கதிதுவே.

எந்நாளுந் தந்நிலையிற் ருழாமையாகிய மானத்தோடு கூடிய
முயற்சியுள்ள வழியே யிவ்வீரவாழ்க்கை நிலைபெறுவதென்
பது மவதானிக்கத்தக்கது. வாழ்க்கையினெத்துறைக் கண்ணும்
பேரறிவு பேராற்றலோடு கூடிப்பேரெல்லையாக நிகழும் ஒழுக்
கத்துக்கு வேண்டப்படும் ஊக்கம் உள்ளக் கிளர்ச்சிகளைத் தந்து
சிற்றறிவு சிறு தொழிலோடு கூடிய சிறுவாழ்க்கை வாழுஞ்
சிறியர்போலன்றிச் செயற்கருஞ் செய்கைகளைச் செய்ய ஊக்கி
நிற்பதிம் மானமேயாகும். மானமுடையார் நிலை திறம்பார் ;
முயற்சி கைவிடார் ; கூற்றுவனுருத்து வந்தபோது மெதிர்த்
தேற்கும் மனவலிமையும், எத்துணையிடுக்கண் வந்துழியுஞ்
சலியாதுநிற்குந் திண்மையும், செய்ய வேண்டியவற்றைக் கடி
திற் சென்று முடிக்குமூக்கமுந் தந்துலகெலாம் போற்றி வழி
படும் பெருமையை யொருவனுக் குதவுவதிம் மானமேயாகும்.
காமம் வெகுளிகடும்பற் றுள்ளம் மானமுவகை மதமென்னு
முட் பகையாறையுங் கடந்து, பொருளல்லவற்றைப் பொரு
ளென்றுணரும் மருளை விவேகமென்னும் வாள்கொண்
டொழித்து, வாழ்க்கையாலடையும் பரமப் பிரயோசனப்
பேறடையவஞ்சா நெஞ்சமுங் கலங்காச் சித்தமுமுடையனு யூக்கத்
துடன் முயல்வதாகிய ஞானம்பற்றிய வீரவொழுக்கத்துக்கு முயி

வீரந்தரும் ஞானவளம் நிறைந்த வாழ்வுக்கு எடுத்துக்
காட்டாகத் திகழ்ந்த சைவ அறிஞர் திரு. பெரியதம்பி
அவர்கள்.



ராய் நின்றியக்குவதிம் மானமெனக. அகங்கார முள்ளிட்ட
கருவிகள் பல சேர்ந்த சூக்குமவுடம்பு முத்திவரையு மான்
மாவுக்குபகரித்து நிற்குமென்னும் ஞான நூன்முடிபுமிவ் வுண்
மையை வலியுறுத்தும். “ நாமார்க்கும் குடியல்லோம் நமனை
யஞ்சோம் ”, “ யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம் ”
“ ஈனர்கட்கெளியேனலேன் றிருவாலவாயானிற்கவே ” என்பன
வாதிய அருள் வாக்குக்களால், சிவஞானச் செல்வரை மானம்
மேலும் மேலும் நன்னெறிக்கணூக்கி நிற்கும் முறை புலப்
படும். செய்யத்தகாதனவற்றின் கணுள்ள மொடுங்குதலாகிய ”
நாணுடைமையோடு கூடிய மாண்புடைய மானமே வாழ்க்
கையைச் சீர்ப்படுத்தும் மானமென்றிங்கு பாராட்டப்பட்ட
தெனவுணர்க. ஒழுக்கம் வழுக்கியவிடத்து நிகழ்வனவாகிய
மனத்தாபம் தற்பரிசோதனை முதலிய உள்ள நிகழ்ச்சிகட்குக்
காரணமாய் ஒழுக்கவுயர்வைத் தந்துதவுஞ் சிறப்பினது
நாணுடைமை. அஃதில்லா விடத்து. சற்குரு மொழிவழி நின்று
நல்லறங் காத்தலும் உற்றநோய் நீக்கியுறுஅ;மை முற்காக்கும் ”
பெற்றி வாய்ந்த பெரியார் துணையாகச் சிறப்படைதலுமின்றி
வாழ்க்கை பாழ்போவது திண்ணம். மானம் நாணுடைமை
யென்னு மிவ்வுத்தம குணங்கள் பிரவிர்த்தி நிவிர்த்தி யென்னு
மிரு நெறிக்கண்ணும் வீறுடைவாழ்க்கை வாழ்வதற்குபகாரமாய்
நிற்பனவென்பதை யறிந்து கடைப் பிடிக்க.

மானம் நாணுடைமையென்னுங் குணங்களாற் பொலிந்து
வீறுடன் விளங்கும் வீரவாழ்க்கை நிலைபெற வேண்டுமாயின்
பேராசை யச்சமென்னு மிழிகுணங்களறவே தொலைக்கப்பட
வேண்டும். மனம் ஆசையைப்பற்றி நின்றவழி சிந்தைசொற்
செயலெல்லாம் ஆசைக்கிலக்காகிய பொருட்சார்பாகவே செல்
லும். பொருளல்லாப் பொருண்மேற்சென்று ஆசையிலழுந்தி
நின்று அப்பொருட்சார்பாகத் தன்னறிவிச்சை செயலெல்லா
வற்றையும் செல்லவிட்டானொருவன் எத்துறையிலு முண்மைப்
பொருள் தேறுமாறில்லை. நன்றிது தீதிது சரியிது பிழையிது
என்று நிச்சயிக்கும் பகுத்தறிவிழந்த நிலையில் ஒழுக்க
மேம்பாடு கருதிய முயற்சியும் சிந்தைசொற் செயல்
கள் தூய்மையடைதலும் கைகூடா. இவ்வாறு சிந்தை சொற்
செயல்கள் தீநெறிப்பட்டு ஆசைக்காட்பட்ட நிலையில், விழுப்
பந்தரும் ஒழுக்கத்தை உயிரினும் பெரிதெனப் போற்றும்
திண்மையும், பெருந்தகைமை பீடழியவரினூனோம்பும் வாழ்க்
கையைப் பொருளென மதியாத வீரவொழுக்கமும் எவ்வாறு
கைகூடும் ; பொருளல்லாத உடலையும் பிரபஞ்சத்தையும் பெ
ரிது மதித்தவைசார்பான ஆசையால் மெலிவெய்தி நிற்போன்
எத்துணைச் சிறுமை மானக்கேடுகள் வரினும் ஊனோம்பும்
வாழ்க்கையைப் பேணிநிற்றலியல்பே. உண்டியுறக்கம் மைதுன
மென்பனவற்றையே விரும்பியவற்றிற்காகவே தம்மையர்ப்
பணஞ்செய்து நிற்போர் வாழ்க்கையில் தியாகம் வீரமெவ்
வாறு விளங்கும். தனக்காட்பட்டோர் அறிவிச்சை தொழில்
களெல்லாவற்றையும் தனக்கிலக்கான பொருட்பாற் சேர்த்து
நிற்பதாசையினியல்பு. ஆதலின், தன்னுண்மையியல்பை யறி
யாது தன்னையுடலென மதித்து வாழ்வான் தன்னுடலோம்
புதற்கே தன் வாழ்க்கையை யர்ப்பணஞ் செய்து நிற்பன்.
உடல் பொறிகாரணங்களையெல்லா மலையச்செய்து துன்பந்துய
ருள்ளிட்ட பல சிறுமைகளையும் மக்கள்பாற்சேர்த்து நிற்பதிவ்
வாசையானுலிவ்வாசை யறிவுடையோரால் வெறுத்தொதுக்
கத்தக்கதே. அற்ப பொருண்மேற் சென்ற ஆசையானது
அறிவிச்சை செயல்களைக் கொள்ளை கொண்டுபோன நிலையில்,
ஒருவன்பால் வீரம் தியாகம் முதலிய தெய்வீகக் குணங்கள்
வந்தடைந்து நிலைபெறுதல் சாலது. ஒருவன் ஆசைவைத்துத்
தேடும் பொருள் அவன் வாழ்க்கையின் பெருமை
சிறுமையை யொருவாறு எல்லை செய்து வரம்புபடுத்தும் தகை
யது. சிறு பொருளைநாடி யதன்பால் மனமொழி மெய்களைப்
பயிலவிட்டான், தன்னறிவிச்சை செயல்களைச் சிறுபொருள்
மேற்செல்லவிட்டமையால் அறிவாற்ற லொழுக்கங்களால் மேம்
பாடடைதல் கைகூடாது. ஆதலின் வாழ்க்கை சீரடைதலைவிரும்
புவோன் அற்ப பொருண் மேற்கொண்ட ஆசையிலழுந்
நின்று பல்வகைச்சிறுமைகளுக்கு மாளாகாமல், திருந்
குறிக்கோளுடையனாய் அலைவுறுத மனமொழிகளோடு அ
கரண சுத்தியுடையனாய் அறிவாற்ற லொழுக்கங்களால்
பட்டு நல்வாழ்வெய்த முயலவேண்டும். பேராசையானது வ
தியாகம் முதலியவற்றோடுகூடிய வீறுடை வாழ்க்
வித்தாகிய மானத்தைக் கெடுப்பதொன் றென்பதையும் இவ
வாசையுடைமைக்கு மறுதலையாய வைராக்கியமென்னுங் குணம்
சப்தசமுத்திரங் கரைபுரண்டுவரினுஞ் சலியாத திட
சித்தத்தோடு கூடிய சுவதந்திரமுடைமையும் சிந்தை சொற்
செயல்களிற் றூய்மையுந் தந்து. உண்ணின்றுடற்றும் உட்
பகையையும் வெளிநின்று சோர்வு நாடுவ பிறபகையையுங்
களைந்து, லௌகிகம் வைதிகமென்னு மிருநெறிக் கண்ணு
மொப்புயர் வில்லாத ஏகசக்கிராதிபத்திய நிலையையுதவும் உயிர்
தோழனாகும் பெருமை வாய்ந்த தென்பதையு மறிந்து
கடைப்பிடிக்க.

ஆசைக்கிலக்காகிய பொருள் கிடையாதபோது துன்பம், கிடைக்
குமோ கிடையாதோ என்று கலக்கம் பயம், கிடைப்
பதற் கிடையூறு செய்தார் மாட்டுக் கோபம், தமக்குக் கிடை
யாத பொருள் பிறருக்குக் கிடைத்தபோதுண்டாகு மழுக்கா
றென்றின்னனபல இன்னல்களைத் தருவது பேராசை. ஆசை
யின் விளைவாகிய அச்சம் கவலை கலக்கம் கையாறுகிய இவை
நாடி நரம்புகளையும் ஏனைய தாதுக்களையும் நிலை குலையச்
செய்து, மனமொழிகளை யலையச்செய்து. வாழ்க்கைக்குச் சிற
ந்த கருவியாக இறைவனருளிய உடல் சித்தமென்பனவற்
றைச் சீர்குலைத்து, மக்கள் பாலறிவு செயலற்று நிற்கும்
நிலையை விளைவித்து, மனித வாழ்க்கையை முயற்சியொன்று
மில்லாத சாக்காட்டின் பாலதாக்கிவிடும். ஆசையச்சம் கவலை
கையாறுதியவற்று லலையாத சித்த மமைந்தாலன்றி வீரவொ
ழுக்கம் நிகழ்தல் சாலாதென்பது பெறப்படும். வீர வாழ்க்கை
வாழ்தற்கு வேண்டப்படும் பேரறிவு பேராற்றல் முதலியனவும்
திருந்திய சித்தம் கருவியாகவே பெறற் பாலன.

அறிவிச்சைகளின் விளைவாகவே தொழின் முயற்சி நிகழ்
தலின், சித்தம் தகுந்த முறையிலமைந்திருந்தாலன்றி வீர
வாழ்க்கைக்கு வேண்டப்படும் பெருமுயற்சி நிகழ்தல் சாலாது.

மக்கள்பாற் காணப்படும் மெலிவு பெலவீனங்கள் பல
அவர்தம் மனோபாவனையால் வருவனவென்பதும் அவர் தம்
சித்தத்தைத் திருத்தியமைத்துக்கோடல் சாலுமாயின், வீறுடை
வாழ்க்கை வாழ்தல் கூடுமென்பதும் அறிஞர்க்கெல்லாமொப்ப
முடிந்த உண்மைகள். சிந்திக்கும்போதெல்லாம் தன்பாற் சிறு
மையை யேற்றிக்கொண்டதே பாவனையாகச் செல்வோன் சிறு
மையை யடைதலும் திடபுத்தி சுயநம்பிக்கை மனவுறுதியுடை
யனாய்ப் பெருந்தகைமை பேராற்றல் முதலியவற்றை யங்க
மாகக்கொண்ட சிறந்த வாழ்க்கையைக் குறிக்கோளாகக்கொண்
டதனையே பொருளெனப் போற்றி யொழுகுவோன் பெரு
வாழ்வெய்தலுமியல்பே. வாழ்க்கையில் எண்ணங்களே பின்
செயலாக விளைவனவாகலின் மனிதரெல்லாரும் தத்தம் மனத்
தினலே தம் வாழ்வை யமைத்துக் கொள்கின்றனரென்றே
கூறல் வேண்டும்.

திடபுத்தி மனவுறுதியோடு கூடிய சுயநம்பிக்கை யுடையவ
னாகுமாறு ஒருவன் சித்தம் திருத்தியமைக்கப் பட்டாலன்றி

யவன் பேறிவு பேராற்றல் பெருமுயற்சி யுடையனுய்த் திகழ்தல் சாலாது. கரும முடித்தற்கண் சஞ்சல புத்தியும் தளர்வு சோர்வும் சந்தேகமு மொருவன் பாலுளவாயினெவ்வாறெடுத்த கரும முடித்தலும் வீரவாழ்க்கை வாழ்தலும் கூடும். மக்கள் த்தம் சுவர்க்கத்தை நகரமாயும் நகரத்தைச் சுவர்க்கமாயும் மைக்கும் தகுதி வாய்ந்ததென்பர் மேனுட்டறிஞரொருவர். வே, காமக்குரோதாதிகளுக் காளாகாமல் புலன் வழியலே மனத்தினராய்ச் சித்தத்தை வசப்படுத்தி யடக்கியாண்டு ம் வன்மையுடையார்க்கே பேரறிவு பேராற்றல் பெரு ற்சியோடு கூடிய வீரவாழ்க்கை வாழ்தல் கூடுமென்பது படுதல் காண்க.

வாழ்க்கை சீரடைதற்கு மனிதன்பாலுள்ள கருவிகளெல்லா மொருமுகப்பட்டு ஒற்றுமையாகத் தொழில் செய்தலத்தியாவசியகம். சாக்கிரகத்திலிகழ்ந் தொதுக்குவதைச் சொப்பனத்தில் விரும்புதல் பெரும்பாலும் நிகழ்வதொன்று. விழிப்பு நிலையிலும் அதிசாக்கிரதையாயிராத சமயத்தில் தகாத எண்ணங்களும் விழைவுகளும் மனத்திலெழுவதுண்டு. இவ்வாறு மனிதர்கருவிகள் பல்வேறு பகுதிகளாகப் பிரிந்து தம்முள் மாறுபட்ட முறையில் தொழில் செய்வதனுல் மனிதராற்றல் சிதறுண்டு வாழ்க்கை கெடுதலேயன்றிச் சித்தப்பிரம்மை முதலிய இன்னல்களும் நேர்தல் கூடும். கருவிகளெல்லாம் ஒருங்கியைந்து ஒற்றுமையாகத் தொழில் செய்தாலன்றி வீரவொழுக்கம் கைகூடுமாறில்லை. அவ்வாறு கருவிகளெல்லாம் தம்முளொத்துத் தொழில் செய்தல், காமக்குரோதாதிகளாற் கலங்காத மனத்தினராய்ச் சித்தத்தைத் தம்வழிச் செலுத்தும் திறம் பெற்றுச் சாந்தநிலை கைவந்தவிடத்தன்றி நிகழாது. சீருடை வீரவாழ்க்கை நடத்துமாற்ருல், ஞானநிலைக்குச் சாதனமாகிய வைராக்கிய முதிர்ச்சியும் மனச்சாந்தியு மெய்துதல் காண்க.

வீரவொழுக்கத்துக் கங்கமென்று மேற்கூறிய நல்லொழுக்கமும் சித்தம் கருவியாகவே நிலைபெறும். மாசுடை நெஞ்சின்கண் ஆடல் செய்து நிற்கும் தீய இச்சைகளைத் தலையெடுக்காவண்ண மடக்கியான்ருேர் விதித்தன செய்து விலக்கியனவொழிதற்குபகாரமானதும் சித்தமேயாகும். நெறியல்லா நெறிக்கட் செலுத்தும் தீய இச்சைகளை யடக்கு முகத்தால் ஆசைக்கடிமையாய்வாழும் நிலையினீங்கி வைராக்கியமடைதல் சாலும். இவ்வாறு உலகியல் வாழ்க்கைக்கங்கமாகிய நல்லொழுக்கத்தைப் பேணச் சித்தசுத்தி கைகூடுதல் காண்க. "அந்தக்கரண சுத்தி தானுவதவாவற்றிடுதலே" என்பதான்ருேர்வாக்கு. வீரவாழ்க்கை பேரெல்லையாகநிகழு மொழுக்கமாதலின் வீரவாழ்க்கைக்கங்கமான நல்லொழுக்கம் சித்தசுத்தியைத்தருதல் திண்ணம். சித்தசுத்தி ஞானவாயிலாக முத்திதரும் தகையது. அவலம் கவலை கையாறச்சமாதியவற்றினீங்கிய திடசித்தமும் இடுக்கணழியாமையும் திருந்திய சித்தமுள்ள வழியை வாழ்க்கைக் கரண் செய்து நிற்கும். தனக்காட்பட்டோர் அறிவிச்சை செயல்களெல்லாவற்றையும் தனக்கிலக்கான பொருட் பாற் சேர்த்து நிற்குமாசையாலும் அதன் விளைவான அவலம் கவலை கையாறச்சத்தாலும் சலியாத சித்தமுடையார் வாழ்க்கையே இடுக்கணழியாமை முதலியவற்ருற் பொலிவுற்று விளங்கும். பேராசை யச்சமுதலியவற்ருற் சலியாத நிலை பெற்ருலன்றி வீரவாழ்க்கைநிலை பெருதென்பது மேல் நன்கு வலியுறுத்தப்பட்டது. ஆசையறுதல் வீட்டின்பம் நேரேயடைதற்சாதனமாம்" என்பது ஆன்ருேர் வாக்கு. வீர வாழ்க்கையை நோக்கிச் செய்யும் முயற்சி முத்திக்குச் சாதனமாதல் காண்க.

கருதியதொன்றைக் கடிதிற் சென்று முடிக்கும் திறன் பொலிந்து நில்வும் வீரவாழ்க்கை. ஆசைக்காளாய் அவலங் கவலை கையாருதியவற்ருல் அறிவு செயலற்றுக் கலங்கி நிற்பான் மாட்டு விளங்குவதில்லையாகலின், வைராக்கிய முதிர்ந்து சாந்தநிலை கைவந்த உத்தமரே கருதியதொன்றைக் கடிதிற் சென்று முடிக்குந் திறமுடையராய் வீரவாழ்க்கை வாழ்தல் கூடும். வீரவாழ்க்கையால் விளையும் சாந்தநிலை கைவந்த் வழி வீடுபேற்றையுதவு மெய்யுணர்வுதிக்குமாதலின், வீரவாழ்க்கை முத்திசாதனமாதல் காண்க.

ஒருவன் தனது சித்தங்கருவியாகவே (அதாவது தன்னுடம்பிலாவது பிறருடம்பிலாவது அமைந்து கிடக்கும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களின் உதவியின்றி) தனக்குப் புறத்தே தொழில் நிகழ்ச்சியையும் பிறர்மாட்டு அறிவு விளக்கத்தையும் செய்தல் கூடுமென்பதை, பௌதிகசாத்திர முடிபுகளையே பெரிதும் போற்றும் மேனுட்டறிஞரிலும் பலரிப்போது ஒத்துக்கொள்கின்றனர். வரம்பிலா அறிவாற்றல் முதலியவற்ருேடு கூடியதோர் பரம்பொருளின் சந்நிதியில் மனித வாழ்க்கை நடைபெறுகின்றதென்றும், மனிதன் சித்தத்தைச் செவ்விய முறையிலமைக்கு மாற்ருலிப்பரம்பொருட் சேர்க்கையைப் பெற்றதன்பாலுள்ள ஆற்றலறிவு முதலியவற்றிற்கெல்லா முரியனுய் வாழ்தல் கூடுமென்றும் சித்தந்தெளிந்து இறை பணிநிற்கும் மெய்யடியார்பாற் காணப்படும் அத்தியற்புத ஆற்றலறிவுகளெல்லாம் இவ்வாறே நிகழ்வனவென்றும் கூறுவர் சித்தத்தின் பல்வேறு விருத்திகளையும் மெய்யடியார்பாற் காணப்படும் அறிவாற்றல்களையும் முறைப்படுத்தாராய்ந்த மேனுட்டறிஞரிலும் பலர் ; இவர் கூறுமிவையெல்லாம் சைவ நூற்கருத்துகளோடு பெரிது மொத்திருத்தல் காண்க. இவற்றின் நுட்பங்களெல்லாம் சிவயோகம் கைவந்த அனுபூதிப் பெரியாருதவி கொண்டேயறியத்தக்கன.

எடுத்த விஷயத்தை விளக்கும் வகையில், சித்தத்தைத் திருத்தியமைக்கும் முறைகளில் ஒருசிலவே யிங்குக் குறிக்கப்பட்டன. சித்தம் கருவியாக வாழ்க்கையைப் பண்படுத்தும் முறை பற்றிய நுட்பங்களெல்லாம், தற்காலத்து மேனுட்டறிஞரும் போற்றும் நம் யோக நெறிநின்று அறிவநுபவ முதிர்ந்த பெரியார்பால் கேட்டறியத்தக்கன.

பேரறிவு பேராற்றலோடு பெருமுயற்சி செய்து அஞ்சா நெஞ்சமும் கலங்காச் சித்தமுமுடையராய் எடுத்த கருமத்தைக் கடிதிற் செய்துமுடித்து வீறுடன் வாழ்வதாகிய வீரவொழுக்கம், ஆசையச்சம் கவலை கையாருதியற்ருற் சலியாத மனவுடக்கம் பெற்ருர்க்கே கைவருவதென விளக்குமாற்ருல், இவ்வீரவொழுக்கம் ஞானநிலையை யுதவுந்தகையதென்பது மேற்சாதித்து வலியுறுத்தப்பட்டது. அறிவை மறைத்து ஆற்றலைச் சிதறச் செய்து தொழின் முயற்சியைக் கெடுத்துநிற்கும் ஆசையச்ச முதலியவற்ருற் சலியாத மனவமைதி பெற்ருரே ஞானநிலை யெய்துவரென்பது அறிவுநூற் கருத்து.

> "அறவினைக்கு மரும் பொருளின்பொடு
> பெறுவதற்கும் பெருங் கல்வி கற்றுயர்
> விறலினுக்கு நல்வீரந் தனக்குமொண்
> டுறவினுக்குந் துணை மனமென்பவே" என்றும்

> "மனத்தையடக்க மனந் துணையாகும்
> பினைத்துணையின்றது பெற்றனனுயிற்
> றனிச்சிவமேயொரு தானெனவாழ்வ
> னினைத்து மறந்து நிலத்துழலானே" என்றும்

வரும் ஆன்ருேர் வாக்குகளும் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

அரனடியார் திருவடி வாழ்க !

## பல்கலைக் கழகங்கள்

(24 ம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் முடிவு மணி அடித்துச் சில நிமிடங்கள் செல்லும் வரைகூடத் தாம் உரத்து வாசிக்கும் குறிப்புக்களை மாணவர்களைக்கொண்டு எழுதுவிக்கிறார்கள். இந்தக் குறிப்புகள் எடுக்கப்பட்ட புத்தகங்களின் பெயரை அவர்கள் மாணவர்கள் முன்னிலையில் மறந்தும் உச்சரிப்பதில்லை. அன்றியும் மாணவர்கள் வாசித்துப் பயனடையும் பொருட்டுப் பிற உதவி நூல்களின் பெயரை யாவது தம் குறிப்புடன் சேர்த்து மாணவர்களுக்கு வழங்குவதில்லை. ஏன்? இப்போலி விரிவுரையாளர்கள் தாம் கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என்பதை உணராமல் தம்முடைய எண்ணக் கருத்தே பரிபூரண உண்மை என்ற போலி நம்பிக்கையினால் உந்தப்பட்டுத் தம் கருத்தை மாணவர்களது பச்சை உள்ளத்தின் மீது திணிக்கிறார்கள். அவர்தம் சுதந்திர உணர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கிறார்கள். இன்னுஞ் சில விரிவுரையாளர் மாணவர்கள் கேள்வி கேட்பதற்கு நேரம் கொடுக்காதுவிடுவதோடமையாது, இரண்டொரு மாணவர் கேள்விகள் கேட்டு விட்டால் அதனைப் பாரதூரமான பிழையாகக் கருதுகின்றனர். "கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்" என்ற கொள்கை பூண்ட மாணவரிற் சிலர் அத்தகைய விரிவுரையாளர்களுக்கு அஞ்சி ஒடுங்கி, சோதனையிலிருந்து தம்மைத் தப்புவித்துக்கொள்ளும் நோக்கமாக விரிவுரையாளர்களது கருத்துச் சரியோ பிழையோ ஏற்றுக்கொள்கின்றனர். ஆசிரியர் கொள்கைகளை எதிர்த்தால் சோதனைக் கடதாசிகளில் கை வைக்கப்பட்டுவிடுமோ என்று ஏங்குகின்றனர் அம் மாணவர்கள். இவையெல்லாம் ஆரம்ப மத்திய பாடசாலைகளிற்கூடக் காணப்படாத இழிந்த முறைகளல்லவா? அறிவுத் தாகங்கொண்டு பல்கலைக்கழகப் படிப்பை நாடும், எம் நாளைய சமுதாயத்தின் அறிவுச் சுடர்களாய் விளங்கவிருக்கும் மாணவ மாணவிகள் பல்கலைக்கழகத்திலன்றி வேறு எங்கே தம் தாகத்தைத் தணிக்க முயல்வர்? இத்தகைய நிலை எம் சமுதாயத்தில் நிலவுவதையொட்டி யாம் மனம் நோகின்றோம். மாணவர்களுக்குக் கட்டுரைப் பயிற்சி அளித்தல், விரிவுரையாற்றுதல், தேர்வு வினாப்பத்திரங்கள் தயாரித்தல் ஆகிய முத்தொழில்களையும் ஆற்றுபவர் விரிவுரையாளர்கள் ஆதலினாலேயே அவரிற் சிலர் மாணவர்களைப் பயன்படுத்தவும், மாணவரிற் சிலர் அத்தகையோருக்கு ஆண்டான்—அடிமை முறையில் பயந்து ஒடுங்கி நடக்கவும் முடிகிறது. "வீயன்னா" அல்லது "ஒக்ஸ்போட்" பல்கலைக் கழகத்தில் உள்ள கல்விமுறை எம் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் அனுட்டிக்கப்படுமாயின் மேலே காட்டிய ஊழல்களிற் சில ஏற்படுவதற்குச் சந்தர்ப்பங் கிடையாதல்லவா?

## சர்வகட்சி மகாநாடு

(25 ம் பக்கத் தொடர்ச்சி)

லவியை ஆரம்பித்தனர். திரு. டட்லி சேனநாயகா அவர்கள் கல்கத்தாவிலிருந்து வெளியாகும் "ஸ்ரேட்ஸ்மன்" எனும் பத்திரிகைக்கு அண்மையில் பேட்டி அளித்த போது, ஐக்கிய தேசியக்கட்சி சம அந்தஸ்துக்கான தனது கொள்கையை மாற்றி ஒரு தவறை இழைத்துவிட்டதென்று கூறியிருப்பதாக அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது அவர்கள் அரசாங்கத்தின் கொள்கையைக் கண்டிக்கிறார்களேயன்றி மொழிப் பிரச்னை சம்பந்தமான தமது கொள்கையை விளக்குவதற்கு மறுக்கிறார்கள். இது சம்பந்தமாக அவர்கள் கூறும் ஒரேயொரு ஆலோசனை சகல கட்சிகளுமடங்கிய ஒரு வட்டமேசை மகா நாட்டைக் கூட்ட வேண்டுமென்பதாகும். மொழிப்பிரச்னை விஷயத்தில் பல்வேறு கட்சிகளிடையிலும் அடிப்படைக்கொள்கைகளிலேயே அபிப்பிராயபேதம் நிலவுவதால், இத்தகைய ஒரு மகாநாட்டை கூட்டுதல் அர்த்தமற்றதாகும் என்பது வெள்ளிடை மலை. பொதுமக்களைக் கலக்கமடையச் செய்து அவர்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்லக்கூடிய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் இவர்களுடைய சிந்தனை எவ்வளவு தூரம் பேதலித்துப் போயிருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணமாகும்.

## பிரதான பாற்பண்ணைத் திறப்புவிழா

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

1956 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நியூஸிலாந்து வியப் பகுதியைச் சேர்ந்த விற்பனவுப் பகுதியின் அத்தியட்சர் டி. பி. ஜே. டோர்னி அவர்களும் நியூஸிலாந்து பாற் சங்க அங்கத்தவர் ஒருவரும் இங்கு வந்தனர். திரு. டோர்னியின் சிபார்சின் பேரில் நியூஸிலாந்து அரசாங்கம் மேலும் 110,000 வழங்கியளித்தது. இவ்விதமாக 2,170,000 ரூபாவை இலங்கை பெற்றது.

நியூஸிலாந்து அரசாங்கம் 1956 ல் அனுபவமிக்க பாற்பண்ணைப் பொறி இயல் அறிஞரான திரு. சி. டப்ளியூ. சிம்சன் என்பவரை இலங்கைக்கு வழங்கியது. இத்திட்டத்தைப் பூரணப் படுத்துவதில் பேருதவியளித்தவர் இவராவர். திரு. சிம்சன் 1957 ம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையை விட்டுப் பிரிந்தார். அவருக்கு பதிலாக திரு. கிளைவ் செபீல்ட் நியமனஞ் செய்யப்பட்டார். இவர் தற்பொழுது இங்கு கடமையாற்றி வருகிறார். கூடிய சீக்கிரம் நியூஸிலாந்து மனேஜர் இங்கு வருவாரென எதிர்ப்பார்க்கப் படுகின்றது.

கொழும்பு பிரதான பாற் பண்ணை நாத்தாண்டி, கம்பளை, வெலிகந்தை, கொட்டகலை, பொல்காவலை, காலி ஆகிய ஆறு கிராமப் பண்ணைகளிலிருந்து பாலைப் பெறும். மேல் மாகாண கூட்டுறவுப் பாற் சங்கங்களிலிருந்தும் பாலைப் பெறும். இது 800,000 பேர்களுக்குப் பால் வழங்கும்.

## பால்

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

சரீரத்தை வளர்க்கவும் அமைக்கவும் வேண்டிய சக்திகளெல்லாம் பாலிலுண்டு. ஒரு கோப்பை பாலில் 2½ முட்டை அல்லது 3¼ அவுன்ஸ் மாட்டிறைச்சியில் உள்ள சக்தி உண்டு. தசை நார்களை அமைப்பதற்கு வேண்டிய கரு வகைகள் அதில் போதியவளவில் கிடைக்கும். நல்ல பற்களும் எலும்புகளும் அமைவதற்கும் இந்தக் கடினமான அவயவங்கள் ஆயுள் முழுவதும் நல்ல நிலையில் இருப்பதற்கும் வேண்டிய சுண்ணச் சத்துக்கு பாலே திறமையானது. சாதாரணமான வளர்ச்சிக்கும் சுகத்திற்கும் வேண்டிய உயிர்ச்சத்துக்கள் எல்லாம் அதிலுண்டு. சரீரத்திலிருந்து கழிம்புகளைக் கழிப்பதற்கு வேண்டப்படும் நீரும் அதிலுண்டு. ஆகையால் ஒருவரும் பால் அருந்தாதிருக்கலாகாது. அதை நித்தமும் குடிக்க வேண்டும். வளர்ந்தவர்களுக்கு வளர்ச்சி அடைந்தமை காரணமாக சுண்ணத்தின் தேவை குறைவாயிருக்கிறபடியால் அவர்களுக்கு சிறுவர்களிலும் பார்க்கக் குறைவாகவே வேண்டும். சிறுவருக்கு நிதமும் ¾ முதல் 1 குவாட் வரை நல்ல சுத்தமான பால் தேவை. கருப்பவதிகளுக்கும் பால் ஊட்டும் தாய்மாருக்கும் ஒரு குவாட் வேண்டும். ஆகையால் ஒவ்வொரு குடும்பத்தின் ஆகாரத்திலும் பால் ஏதோ விதத்தில் சேர வேண்டும். "உமது பாலிற்குப் பதிலான உணவு இல்லை யென்பதை மறக்கக் கூடாது. அது எல்லா வகையாலும் உகந்த உணவு. பால் குடித்து ஆனந்தப்படும். "பால் தேங்கும் நாடு" தான் புராதனகாலத்து ஆயர் குலத்தாரின் முன் மாதிரியானதேசம். சரியான ஊட்டமும் சனங்களின் ஆரோக்கியமும் சரியாகக் கவனிக்கப்பட்டால் அதே இலக்ஷ்ண பூர்த்தியாகும். பால் எல்லா வகையிலும் உகந்த உணவு.

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | | விலை ரூ. ச. | தபாற் செலவு ச. |
|---|---|---|---|
| 1. | இலங்கைக் கல்வி முறைச் சீர்திருத்தம் சம்பந்தமாய ஆலோசனைகள் .. .. .. | 55 .. | 10 |
| 2. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் நான்காவது இடையறிக்கை .. .. .. | 50 .. | 15 |
| 3. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் ஐந்தாவது இடையறிக்கை .. .. .. | 1.20 .. | 35 |
| 4. | இந்து ஆலயங்களும் தரும நம்பிக்கைச் சொத்துகளும் | 70 .. | 15 |
| 5. | இந்துமத அறநிலையங்கள், ஆதீனங்கள் முதலியவை பற்றிய விசேஷ விசாரணைச் சபையின் அறிக்கை 1951 ம் ஆண்டு ஜூன் மாதம் .. | 2.00 .. | 35 |
| 6. | இலங்கைக் குடிமதிப்பு—1946 .. .. | 5.00 .. | 35 |
| 7. | 6 ம், 7 ம், 8 ம் வகுப்புகளில் கல்வியூட்டும் மொழிகளாக தேசிய மொழிகளை இலகுவில் அமைத்துக்கொள்வதற்கான சிபார்சுகளைச் செய்தற்கு நியமிக்கப்பட்ட சபையின் அறிக்கை .. .. | 1.45 .. | 35 |
| 8. | இலங்கை அரசியற் சீர்திருத்த விசாரணைச் சபையின் அறிக்கை—1945 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் .. | 2.00 .. | 35 |
| 9. | சுகாதார சேவைகளின் பதில் அதிபரது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. | 1.55 .. | 35 |
| 10. | குடிமதிப்பு புள்ளிவிபர தற்காலீக அதிபரினது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. | 60 .. | 20 |
| 11. | இலங்கை பறவைகள்—சித்திரசகித நூல் .. | 5.00 .. | 35 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,
தபால் பெட்டி நிர். 500,
கொழும்பு, 1.
என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற்பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.